# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 15 ஞாயிற்றுக்கிழமை (29.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 214


# பிரபாவின் அழைப்பு வந்தால் மட்டுமே பேச்சுக் குறித்து அரசு பரிசீலிக்கும்

## அமைச்சர் நிமால் சிறிபால சொல்கிறார்



கொழும்பு, ஜூன்29

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், சமாதானப் பேச்சுக்கு வருமாறு, தாமே -அவரே- நேரடியாக அழைப்பு விடுத்தால் மட்டுமே -

அரசாங்கம் அதனைப் பரிசீலனை செய்து பேச்சுவார்த்தையை நடத்துவது குறித்து முடிவு செய்யும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுக் குழுவின் தலைவரும், அமைச்சருமான நிமால் சிறிபால டி.சில்வா.

அரசாங்கம் விடுதலைப் புலிகளு டன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்குத் தயாராகவே உள்ளது. பேச்சுகள் எந்த நிபந்தனையும் இன்றி ஆரம்பிக்கப்படலாம்.

எனினும் பேச்சுத் தொடர்பான அழைப்பு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகர னிடம் இருந்து நேரடியாக அரசாங்கத்து (16 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை வழமைக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 29

கடந்த சில தினங்களாக தடைப்பட்டிருந்த காங்கேசன்துறை- திருகோணமலை பயணிகள் கப்பல் சேவை நேற்று வழமைக் குத் திரும்பியது.

நேற்றுமுன்தினம் திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறை வந்த கப்பல் ஒரு தொகுதி பயணிகளுடன் திருமலைக்கு இன்று சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(01)

## யாழ்.மனித உரிமை ஆணைக்குழு வாகனத்தில் 'கராஜ்'இல் வைத்து ஆயுதங்கள் மீட்கப்பட்டன

### மானிப்பாய் பொலிஸாரால் நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 29

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துக்கு சொந்தமான வெள்ளை 'டொல்பின்' ரக வாகனத்தில் இருந்து நேற்று ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

திருத்த வேலைக்காக இந்த வாகனம் மானிப்பாயில் உள்ள ''கராஜ்'' ஒன்றில் நின்ற வேளையே அதில் இருந்து, ரி-56 ரக துப்பாக்கி ஒன்று, கிரனேட் ஒன்று மற்றும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் விவரித்தனர்.

தமக்குக்கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் வாகனத்தை சோதனை செய்த போதே ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## 266 அரச, தனியார் தொழிற்சங்கங்களின் உத்தேச வேலைநிறுத்தம்: ஜனாதிபதி இன்று சந்திப்பு

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் 10ஆம் திகதி அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் மேற்கொள்ள உத்தேசித்துள்ள வேலை நிறுத்தம் தொடர்பாக முக்கிய சந்திப்பு ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் இன்று நடைபெறவுள்ளது.

அரச, தனியார் துறைகளில் பணிபுரிவோருக்கு ஆகக் குறைந்த சம்பளமாக 5ஆயிரம் ரூபா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அரச மற்றும் தனியார்துறையைச் சேர்ந்த 266 தொழி சங்கங்கள் எதிர்வரும் 10ஆம் திகதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட விருப்பதாக அறிவித் துள்ளன.

உத்தேச வேலை நிறுத்தப் போராட்டத்தை நிறுத்தும் முயற்சியாக தொழிற் (16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகனோடு 'கறுப்புப் பூனைகள்'

கொழும்பு,ஜூன்29

'சார்க்' மாநாட்டில் பங்குபற்றுவதற்காக கொழும்பு வரும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு பாதுகாப்பு வழங்க 'கறுப்புப் பூனை' அணியினர் உட்பட 3 ஆயிரம் படையினர் வருகின்றனர்.

அதேபோன்று மாநாட்டில் கலந்துகொள்ள வரும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் ஹார்சைக்கு பாதுகாப்பு வழங்க அந்நாட்டுப் படையினர் கொழும்பு வருகின்றனர்.

இந்தியப் பிரதமருக்குப் பாதுகாப்பு வழங்க வரும் படையினர் மோட்டார் வாகனங்கள் மற்றும் தாக்குதல் ஹெலிகொப்டர்கள், ஆயுத தளபாடங்களுடன் வருகை தரவிருக்கின்றனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## அன்பார்ந்த வாசகர் பெருமக்களே!

நாளாந்தம் ஏதோ ஒரு பொருளின் விலை நாட்டில் உயர்வடைவது நடைமுறையாகிவிட்டது; வழமையாகி விட்டது. எரிபொருள்களின் விலைகள் உயர உயர, எல்லாப் பொருள்களின் விலைகளும் ஏறுகின்றன. இன்றைய ஆட்சியில் இது தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது.

குடாநாட்டிலோ, 2006 ஓகஸ்ட் 11 ஆம் திகதிக்குப் பின்னர் எல்லாமே அதிக விலை; கூடிய விலைதான்! மாதத்துக்கு மாதம் விலை உயர்வுகள் குடாநாட்டு மக்களை நசுக்கியதால், அரசு சுமத்திய எத்தனையோ விலை உயர்வுகளின் மத்தியிலும் உதயனின் விலையை இத்தனை மாதங்களாக உயர்த்தாமல் உற்பத்திச் செலவில் உண்டான முழுப் பளுவையும் நாமே ஏற்றுக் கொண்டோம்.

இப்போது தாங்கமுடியாது என்ற இக்கட்டான, இடர்பாடான நிலையில் உதயனின் விலையை ஐந்து ரூபாவால் (ரூபா 5/=) அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எங்கள் நிலைமையைப் புரிந்துகொண்டு, ஒத்துழைப்பு நல்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**நாளை மறுதினம் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் உதயனின் விலை 15/= ரூபாவாகும்.**

**- நிர்வாகத்தினர்.**

## துன்னாலையில் ரோந்து சென்ற சிப்பாய்கள் மீது கிளைமோர் தாக்கு

### ஒருவர் பலி:, மற்றொருவர் காயம்

உடுப்பிட்டி, ஜூன் 29

துன்னாலை இந்திரன் அம்மன் கோயிலடியில் ரோந்து சென்ற படையினரை இலக்கு வைத்து வெள்ளிக்கிழமை இரவு 8மணியளவில் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் காயமடைந்தார் என ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது.காயமடைந்த சிப்பாய் மந்திகை ஆஸ்பத்திரியில் (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் மனித உரிமைகள் மீறப்படவில்லை; அவர்களின் ஜனநாயகத்துக்கு உயிர் மூச்சு வழங்கப்படுகின்றது

### ஜனாதிபதி மஹிந்த சொல்கிறார் இப்படி!

கொழும்பு, ஜூன் 29

தமிழ்மக்களின் ஜனநாயகத்துக்கு உயிர் மூச்சைப் பெற்றுக் கொடுக்கும் நடைவடிக்கையே இப்போது மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நடவடிக்கையில் எவ்விதத்திலும் மனித உரிமைகள் மீறப்படவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பேருவளையில் சீன அரசின் உதவியுடன் 410 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகத்தை நேற்றுமுன்தினம் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோம்பயன் மணல் மயானத்தில் திருடர்கள் கைவரிசை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன்29

கோம்பயன் மணல் மயானத்தில் உள்ள மடத்தின் ஓடுகள், மரங்கள் திருடர் களால் களவாடப்பட்டு வருகின்றன என்று அதனைப் பயன்படுத்துவோர் கவலை தெரிவிக்கின்றார்கள்.



கோம்பயன் மணல் மயான இளைப்பாறும் மண்டபத்தின் ஓடுகள், மரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக திருடப்பட்டு தற் போது உள்ள நிலையை படத்தில் காண லாம்.
இதனைக் கட்டுப்படுத்த அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். (படம்: நேசன்)

கோம்பையன் மயானத்தின் அபிவிருத்திக்கென ஒரு சங்கம் இயங்கி வருவதுடன் மயானத்தைப் பாதுகாக்க ஒரு காவலாளியும் நியமனம் செய்யப்பட்டும் உள்ளார்.

மயானத்தில் வைத்து ஒரு சிலர் மதுப் பாவனையில் ஈடுபடுவதையும் மயானத்தில் இறுதிக்கிரியைகள் மேற்கொள்வ தற்கு செல்லும் பொது மக்களுக்கு இடைஞ்சலான முறையில் நடந்துகொள்ளும் செயற்பாடுகளும்கூட இடம்பெறுகின்றன.

மயானத்தில் உறவுகளின் இறுதிக் கடன்களை மேற்கொள்வது சம்பந்தமாகவும் கட்டணங்கள் சம்பந்தமாகவும் விளம்பரப்படுத்தப்பட்டு இருந்த விளம்பரப் பலகையும் கூட தற்போது அகற்றப்பட்டுள்ளது.

அதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு மயானத்தில் வெவ்வேறு கட்ட ணங்கள் வற்புறுத்தி வாங்கப்படுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

அமைதியாக இறுதிக்கிரியைகளை செய்வதற்கு இடைஞ்சலாக இருப்பவர்களை அகற்ற வேண்டிய தேவை இருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. (202-86)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் எட்டு வருடங்களாக திடீர் மரண விசாரணை அதிகாரி பதவி வெற்றிடம்

## நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ளன

யாழ்ப்பாணம், ஜூன்29

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த எட்டு வருடங்களாக திடீர் மரண விசாரணை அதிகாரி இல்லாமையால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி காலமானதையடுத்து இப் பதவி வெற்றிடம் ஏற்பட்டது.

இப் பதவி வெற்றிடம் ஏற்பட்டதை அடுத்து நீதி அமைச்சினால் சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய பகுதிகளுக்கு தனித்தனி திடீர் மரண விசாரணை அதிகாரி நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு இரு வருடங்களுக்கு முன்னர் தென்மராட்சி பிரதேசத்தில் நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டது.

ஆனால் இதுவரை இப் பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளதாகவும் இதனால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)

# சட்டவிரோதமாக மின் இணைப்புப் பெற்ற 7 பேருக்கு 1 லட்சத்து 40 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன்29

மல்லாகம், மயிலங்காடு பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 7 பேருக்கு ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை சுன்னாகம் பொலிஸாரும் இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பணிமனை ஊழியர்களும் இணைந்து நடத்திய திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது மேற்படி இடங்களில் இருந்து சட்ட விரோத மின்சாரம் பெற்ற 7 பேர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்களை பொலிஸார் மல்லாகம் நீதி மன்றில் கடந்த வியாழக்கிழமை ஆஜர் செய்தனர்.

வழக்கை விசாரணை செய்த மல்லாகம் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் ஒவ்வொருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (203)

# கடத்தப்பட்டுக் காணாமற் போனவர் காட்டுப் பகுதியில் சடலமாக மீட்பு

## வாழைச்சேனையில் சம்பவம்; ரி.எம்.வி.பி. மீது குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜூன் 29

கடந்த வாரம் வியாழக்கிழமை கடத்தப்பட்டுக் காணாமற்போனார் என்று கூறப்படும் ஒருவர் கைகள் கட்டப்பட்டுள்ள நிலையில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றார்.

வாழைச் சேனையைச் சேர்ந்த காளியப்பன் குணசீலன் (வயது - 28)என்ற ஈ.பி.டி.பி. உறுப்பினரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

விநாயகபுரம் தாமைரக்குளம் பகுதிக்கு சமீபமாகவுள்ள காட்டுப் பகுதியில் சடலம் ஒன்று புதைக்கப் பட்டிருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார், வாழைச்சேனை நீதி வான் மாணிக்கவாசகர் கணேஷ ராஜா முன்னிலையில் சடலத்தை தோண்டி எடுத்தனர் என்று கூறப்பட்டது. மீட்கப்பட்ட சடலம் தனது கணவருடையது என குணசீலனின் மனைவி அடையாளம் காட்டினார்.

சடலம் வாழைச்சேனை வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக ளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை கறுவாக்கேணி யில் உள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தில் கடமையில் இருந்த இவர் தண்ணீர் எடுப்பதற்காக வெளியே சென்ற சமயம் காணாமல்போயிருந்தார் என்று அவரது மனைவி தெரிவித்திக்கிறார்.

சடலமாக மீட்கப்பட்டவர் தமது அமைப்பைச் சேர்ந்த காளியப்பன் குணசீலன் என்று ஈ.பி.டி.பி. தெரி வித்திருக்கின்றது.

இவரை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளே கொலை செய்தனர் என்று ஈ.பி.டி.பி. குற்றம் சாட்டியிருக்கிறது.

இந்தக் குற்றச்சாட்டை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் மறுத்தி ருக்கின்றனர்.

மரண விசாரணையின் போது ஈ.பி.டி.பி.யினரை சமூகமளிக்குமாறு நீதி வான் உத்தரவிட்டிருக்கிறார்.

# நுணாவில் பொது நூலகத்தில் சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன்29

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினர் எதிர்வரும் ஒன்பதாம் திகதி காலை 9 மணிக்கு நுணாவில் பொது நூலகத்தில் சுகாதாரக் கருத்தரங்கினை நடத்தவுள்ளனர்.

கர்ப்பிணித் தாய்மாருக்கான சிகிச்சை, சுகாதாரக் கல்வி, டெங்கு ஒழிப்பு கருத்தரங்கு ஆகியவை இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நுணாவில் பிரதேச மக்களைக் கலந்து கொண்டு பயன் பெறுமாறு நகரசபை செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் அறிவித்துள்ளார். (203-207)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன்29

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் யூனியன் அசூரன்ஸ் நிறுவன ஆதரவில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பி.ப. 3.30 மணி-மானிப்பாய் பெஸ்வுறம் வி.க. எதிர் அளவெட்டி பாரதி வி.க.
* பி.ப. 4.30 மணி- உடுவில் டொன் பொஸ்கோ வி.க. எதிர் அளவெட்டி பாரதி வி.க. (1)

* * *

வலி.வடக்கு, ஜூன்29

ஏழாலை மத்தி லெனின் மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு லெனின் விளையாட்டுக் கழக மைதானத்தில் எ. சத்தியன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி கே.சொக்கலிங்கமும், கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவநேசனும் மற்றும் பலரும் கலந்து கொள்வர்.

ஆசியுரை நல்லூர் கந்தசுவாமி கோயில் சிவாச்சாரியார்வித்தகசிரோன் மணி சிவஸ்ரீ கே. இராஜேஸ்வரக் குருக்கள் வழங்கவுள்ளார். (1-86)

மந்திகை, ஜூன்29

அல்வாய் அனோதரா விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் இணைந்து வருடாந்தம் நடத்தி வரும் சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அல்வாய் மனோகரா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டி முடிவில் இடம்பெறும் பரிசளிப்பு விழவில் அல்வாய் சாமாணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலய பரிபாலனசபைத் தலைவர் எம். அனந்தராஜன், அல்வாய்மனோகரா சனசமூக நிலையத் தலைவர் என். துரைராஜா, வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத் தலைவர் கே.இராஜேந்திரன், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகச் செயலாளர் ரீ.வரதராஜன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்கின்றனர். (1-218)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்29

புத்தூர் மேற்கு கலைமதி வி.க. மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பி.ப. 3.30 மணி-ஈவினை கலைமகள் (அம்பாள்) வி.க. எதிர் புத்தூர் சரஸ்வதி வி.க.
* பி.ப. 4.30 மணி-நவிண்டில் கலைமதி வி.க. எதிர் தாவடி காளி யம்மன் வி.க. (1)

# இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

அண்மையில் காலமான சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஞாபகார்த்தமாக தெல்லிப்பழை இளைஞர் சங்கம் மற்றும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தைச் சேர்ந்தவர்கள் இன்று யாழ். ஆஸ்பத்திரியில் இரத்ததானம் செய்யவுள்ளனர். (அ-86)

# திவ்விய சேவையாளர் கௌரவிக்கப்படவுள்ளனர்

யாழ்ப்பாணம், ஜூன்29

இந்து ஆலயங்களில் திருவாசக முற்றோதல்களை நடத்தும் திவ்விய சேவையாளர்கள் தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினால் கௌர விக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு சங்கத்தானை ஞானவைரவ கந்தசுவாமி ஆலயத்தில் இந் நிகழ்வு இடம் பெறுமென சங்கத் தலைவர் கே.எஸ். ஆறுமுகம் அறிவித்துள்ளார். (203-207)


## மணமகன் தேவை

*யாழ். இந்து கௌரவ குடும்பம் Vegetarian வயது 30, பூசம், செவ்வாய்க் குற்றமற்ற கிரக பாவம் 32, B.A. பட்டதாரி, அழகிய சிவந்த பெண்ணுக்கு டாக்டர், எஞ்சினியர், அரச உத்தியோகத்தர் , ஆசிரியரை பெற்றோர் விரும்புகின்றனர். சீதனம் உண்டு. குடும்ப விவரம், சாதகத்துடன் தொடர்பு கொள்க.*

T.P.:- 07713[illegible]7774


## தவறிவிட்டது

கோண்டாவில் வடக்கு, வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் என்னும் முகவரியுடைய கமலநாஸ் கிருபாரசி என்பவரது அடையாள அட்டையும், கைத்தொலைபேசியும் கைப்பையுடன் 25.06.2008 தவறவிடப்பட்டுள்ளது. (நாமகள் மகாவித்தியாலயம், நந்தாவில் அம்மன் கோவில், ஸ்ரேசனடி இவற்றுக்கு இடையில்) கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத்தில் தந்து தவவும் (தபால் மூலமாவது அனுப்பிவிடவும்).

சன்மானம் வழங்கப்படும்.

க.கிருபாரசி, 29/16, உடையார் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

# கைலாச பிள்ளையார் பெருந்திருவிழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன்29

நல்லூர், கைலாசபிள்ளையார் ஆலய சிவன்வாயில் பெருந் திருவிழா நாளை திங் கட்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசை இடம்பெற்று சுவாமி எழுந்தருளி கொடியேற்றம் இடம்பெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது. காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9 மணிக்குச் சுவாமி தேரேறி வலம் வருவார்.

9 ஆம் திகதி தீர்த்தத்திருவிழா இடம்பெறும். அன்று அதிகாலை 3 மணிக்கு ஆனி உத்தர நடராஜா அபிசேகம் இடம்பெறும். 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 4 மணிக்கு கொடி இறக்கமும் இடம் பெறும். (203)


## AIDLINES - LABORATORY

*எமது வாடிக்கையாளர்களுக்கு,*

*508, வைத்தியசாலை வீதியில் இயங்கிய எயிட்லைன்ஸ் மருத்துவ ஆய்வுகூடம் தற்போது 16,மணிக்கூண்டு கோபுர வீதியில் காலை 7 மணியிலிருந்து மாலை 4 மணிவரை இயங்கி வருகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.*

*நிர்வாகத்தினர்.*

*(எயிட்லைன்ஸ் ஆய்வுகூடத்தினர்).*


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## செல்லமணி செல்லத்துரை

கடந்த 30.05.2008 சிவபதமடைந்த செல்லமணி செல்லத்துரை அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (29.06.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

செட்டிவளவு,
[illegible]
மானிப்பாய்.

தகவல்:
சகோதரன் - கேசவராஜன்
(முன்னாள் அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி)
பெறாமகள்:- செல்வி சந்திரிகா
(ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி).

(சி-553537)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் மருத்துவ சேவையில் புதிய பரிமாணம் "ரெலிமெடிசின்"

## வைத்திய சிகிச்சைக் கருத்துப் பரிமாற்றத்துக்குச் சிறந்த தளம்

உலகின் மருத்துவத்துறை மிகவேகமாக வளர்ச்சியும், மாற்றமும் பெற்றுவருகின்றது. இங்குள்ள இன்றைய நிலையில் பல பற்றாக்குறைகளும், பிரச்சினைகளும் இருந்த பொழுதும் எமக்குக் கிடைக்கக் கூடிய வளங்களையும், வசதிகளையும் பயன்படுத்தி உலகில் ஏற்படும் வளர்ச்சியோடு எவ்வாறு எமது சேவையை மேம்படுத்த முடியும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றோம்.

அந்த வகையில் இங்கு "ரெலிமெடிசின்" தொலை மருத்துவ சேவையை ஏற்படுத்த உதவுமாறு அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கும் IMHO எனும் அனைத்துலக மருத்துவ சுகாதார நிறுவனத்தினரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். அது வெற்றியளித்தது. யாழ். மருத்துவ சங்கத்தினதும் IMHO இனதும் ஒருங்கிணைந்த நடவடிக்கையாக இந்தச் சேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் "ரெலி மெடிசின்" எனப்படும் இந்த சேவை மூலம் யாழ். மருத்துவக் குழுவினரும் அமெரிக்காவில் இருக்கும் பிரபல்யமான மருத்துவக் குழுவினரும் இணையத்தளம் மூலமாக ஒன்றிணைக்கப்படுகின்றனர். அதன் மூலம் மேலைத் தேசங்களிலே உள்ள

### போதனா வைத்தியசாலை டாக்டர்கள் மட்டுமன்றி ஏனைய வைத்தியர்களும் இதனூடு பயன்பெறலாம்

செயலுருவம் பெற்றிருக்கின்றது. இச் சேவையை சம்பிரதாயபூர்வமாக யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர்என்.சண்முகலிங்கன்ஆரம்பித்து வைத்தார். இந்த 'ரெலி மெடிசின்' சேவையானது எமது நோயாளர்களின் மொத்த கவனிப்பிலே குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என நம்புகின்றோம்.

பிற நாடுகளிலே, சில சிக்கலான மருத்துவப் பிரச்சினைகள் எழும்பொழுது அது சம்பந்தமாகத் தீர்வு காண்பதற்குப் பல துறை சார்ந்த மருத்துவ நிபுணர்கள் ஒள்றுகூடி அது சம்பந்தமாக ஆராய்ந்து ஒரு முடிவு எட்டப்படுவது வழக்கம். எண்பதுக்கும் அதிகமான வைத்திய நிபுணர்கள் வேலை செய்யவேண்டிய இந்த யாழ்.வைத்திய சாலையிலே இருபதுக்கும் குறைவான நிபுணர்களே இப்போது பணியாற்றுகிறார்கள். இத்தகைய வளக்குறைவால் ஏனைய ஆஸ்பத்திரிகளில் உள்ளது போன்று கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்து நடைமுறைப்படுத்துவதில் கஷ்டங்கள் இருந்து வந்தன.

அத்துடன் பல மருத்துவப் பிரிவுகளுக்கு எம்மிடம் மருத்துவ நிபுணர்கள் இல்லை. *உதாரணமாக:-* தோல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், நரம்பு சத்திர சிகிச்சை, இதய சத்திர சிகிச்சை, மூட்டு மருத்துவம், இரத்தம் சம்பந்தமானதும், இழையவியல் சம்பந்தமானதுமான மருத்துவம், ஓமோன்கள் சம்பந்தமான துறை போன்ற பல துறைகளுக்கு இங்கு மருத்துவ நிபுணர்கள் இல்லை.

எனவே சிகிச்சை பல சந்தர்ப்பங்களில் இங்கு இல்லாத இந்த மருத்துவ நிபுணர்களின் அபிப்பிராயங்களை பெற்றுக்கொள்வதற்காக எமது நோயாளர்களை கொழும்பிற்கு அல்லது பிரதேசங்களுக்கு அனுப்ப வேண்டிய தேவை இருந்து வருகின்றது. அதன்போது நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை அனுபவிப்பதுடன் அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதிலும் தாமதங்கள் ஏற்படுகின்றன.

இந்தச் சேவை எவ்வாறு நடை முறைப் படுத்தப்படுகின்றது என்பதை மேலோட்டமாகப் பார்ப்போம்.

ஒரு நோயாளியின் நோய் நிலை சம்பந்தமான தகவல்களை அவரின் அனுமதியின்றி ஒரு மருத்துவர் வேறுயாருக்கும் தெரியப்படுத்த முடியாது. இந்த இரகசியத் தன்மையைப் பாதுகாப்பது ஒவ்வொரு மருத்துவரின் கடமையாகும்.

எனவே 'ரெலி மெடிசின்' சேவை ஒரு நோயாளிக்குத் தேவைப்படும் என மருத்துவர் தீர்மானிக்குமிடத்து அதற்கான அனுமதி முதலிலே நோயாளியிடம் இருந்து பெறப்படும். காரணம் அவர் பற்றிய தகவல்களை நாம் வேறு ஒரு மருத்து வக் குழுவிற்கு அவரின் அனுமதியின்றி தெரியப்படுத்த முடியாது. நோயாளி அதற்கான அனுமதியைத் தருமிடத்து அவர் சம்பந்தமான தகவல்கள் யாழ்.'ரெலிமெடிசின்' சேவைக்கென வடிவமைக்கப்பட்டிருக்கும் இணையத்தளத்தில் இடப்படும். அதன்பொழுது அந்த நோயாளியின் பெயரோ அல்லது அவரை அடையாளம் காணக்கூடிய தகவல்களோ சேர்க்கப்பட மாட்டாது. இந்த இணையத்தளத்தில் இடப்படும் தகவல்களைத் தெரிவு செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட மருத்துவக் குழுவினர் மட்டும் பார்வையிட முடியும். இவை நோயாளி பற்றிய இரகசியத் தன்மையைப் பேணுவதற்காக செய்யப்பட்டுள்ள நடவடிக்கையாகும்.

இத்தகவல்களைப் பார்வையிட்ட மருத்துவர்கள் தத்தமது அபிப்பிராயங்களை அதிலே பதிவு செய்வார்கள். பல மருத்துவ நிபுணர்களின் அபிப்பிராயங்களை இதன் மூலம் ஒரே சமயத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பல துறைசார்ந்த வைத்திய நிபுணர்களுடன் ஒரே நேரத்தில் தொடர்பை ஏற்படுத்திக் கலந்துரையாடுவதற்கும் இதிலே வசதி செய்யப்பட்டிருக்கின்றது. மருத்துவ மாணவர்கள் உயர் கல்வி பயிலும் மருத்துவர்கள் ஆகியோரின் கல்விப் போதனைக்கும் இந்தச் சேவையில் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

#### வைத்திய கருத்துப் பரிமாற்றங்களுக்கான தளம்

இது ஒரு கருத்துப்பரிமாறல்களுக்கான தளமேயன்றி ஒரு சிகிச்சை முறையல்ல. உதாரணமாக ஒருவருக்கு மூளையில் ஓர் கட்டி ஏற்பட்டிருப்பின் அவருக்கு உடனடியாகச் சத்திரசிகிச்சை தேவையா? அதன்போது ஏற்படக்கூடிய பாதிப்பு வீதம் என்ன? சத்திரசிகிச்சை பிற்போடப்பட்டால் ஏற்படக் கூடிய தாக்கங்கள் போன்றவை சம்பந்தமான கருத்துக்களை நாம் இதன் மூலம் பரிமாறிக் கொள்ள முடியும். ஆனால் அந்த நோயாளிக்கு உடனடியாகச் சத்திர சிகிச்சை தேவை என்று தீர்மானம் எடுக்கப்படும் பட்சத்தில் அவரை கொழும்பிற்கோ அல்லது பிற நாடுகளுக்கோ அனுப்ப வேண்டியிருக்கும் காரணம் இது சம்பந்தமான வைத் திய நிபுணர்களோ அல்லது அதற்கான வைத் திய வசதிகளோ இங்கு இல்லை என்பதனாலேயே ஆகும்.

யாழ்.போதனாவைத்திய சாலையின் வைத்திய சேவையின் தரத்தை உலகின் முன்னணி வைத்தியசாலைகளின் தரத்திற்கு பூரணப்படுத்துவதற்கு இங்கு மருத்துவசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். இங்கு பணிபுரியும் மருத்துவர்களும், மருத்துவ நிபுணர்களதும் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படுவது மிக அவசியம்.

'ரெலிமெடிசின்' சேவையை ஆரம்பிப்பதற்கு இங்கிருந்து புலம் பெயர்ந்த மருத்துவர்களின் பங்களிப்பு மிகப்பிரதானமானதாக அமைந்தது. அவர்கள் பல்வேறு காரணங்களுக்காக இங்கிருந்து புலம் பெயர்ந்தாலும் அவர்களின் சிந்தனையின் பெரும்பகுதி இங்குள்ள மக்களின் மருத்துவக் கவனிப்பை மேம்படுத்துவது சம்பந்தமாகவே இருந்து கொண்டிருக்கின்றது. இவர்களின் உதவியும் ஊக்கமும் என்று பாராட்டுதற்குரியவை.

******



வைத்தியநிபுணர். சி. சிவன்சுதன்

### நிபுணத்துவ ஆலோசனைகளுக்கு பிறபிரதேசங்களுக்கு நோயாளரை அனுப்பும் தேவை குறைந்துவிடும்



வைத்திய நிபுணர் ஒருவர் குழந்தை ஒன்றுக்கு 'ரெலிமெடிசின்' முறை மூலம் சிகிச்சைக்குரிய ஆலோசனையைப் பெறுகிறார்.

தொலைக்காட்சித் திரையில் குழந்தையைத் தொலைவில் உள்ள இரண்டு வைத்திய நிபுணர்களுக்குக் காண்பிக்கும் அதேவேளை, மற்றொரு தொலைக் காட்சித் திரைமூலம் அவர்களிடம் இருந்து சிகிச்சைக்குரிய நிபுணத்துவ ஆலோசனையைக் கேட்கிறார்.

#### வெளிப்பிரதேசங்களுக்கு அனுப்புவதைத் தவிர்க்க முடியும்

அத்துடன், இங்கு இல்லாத மருத்துவப் பிரிவுகளின் நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெற்று நோயாளர்களைப் பிற பிரதேசங்களுக்குத் தவிர்த்து, இங்கிருந்தே பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நாளுக்கு நாள் மருத்துவ முறைகள் வளர்ச்சி பெற்று வருகின்ற இக்கால கட்டத்தில் பல ஆய்வுகளின் முடிவுகள் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. 'ரெலிமெடிசின்' சேவை மூலம் இந்த ஆய்வுகளின் முடிவுகளை நாம் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் உலகளாவிய ரீதியில் மருத்துவக் கவனிப்புகளில் ஏற்படும் மாற்றங்களையும் நாம் இங்கு உடனடியாக நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கும். இதன்மூலம் இங்கு சிகிச்சை பெறும் அனைத்து நோயாளர்களும் நன்மை பெறக் கூடியதாக இருக்கும்.

இந்தச் சேவையை யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் மட்டுமல்லாது யாழ்ப்பாணத்தில் இயங்கும் மற்றைய வைத்தியசாலை வைத்தியர்களும் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

---

## சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவுக்கு பண்டிதமணி தந்த அறிமுகக் கடிதம்





இம்மாதம் 15ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) "சிவத்தமிழ்ச் செல்வி அம்மா" என்ற மனிதத் தெய்வம் தெய்வமாகிவிட்டது. "நாவலர்" என்கின்றபோது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானையே சுட்டுவது போல, "சிவத்தமிழ்ச்செல்வி" என்கின்றபோது அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களையே சுட்டி நிற்கின்றது. சிவத்தமிழ்ச் செல்வி அம்மா ஓர் உலகப் பெரும் சொத்து. அம்மா அவர்களின் பணிகளை உணர்ந்த சர்வதேச அன்பர்களும் கண்ணீர் வடித்து குளமாக்கி வருகின்றனர்.

தெல்லிப்பழை துர்க்கை அம்பாளையே தமது வழிபடு தெய்வமாக்கி, அரும் பெரும் பணிகளினால் ஒளிமயமான காலத்தை உருவாக்கிய பெருமை சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களையே சாரும். தாம் ஆற்றிய தொண்டுகளால் சைவத்துக்கும் தமிழுக்கும் மட்டுமல்லாது சமுதாய முன்னேற்றத்துக்கும் அம்மா முதன்மை செய்தார்.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் துர்க்கை அம்பாளிடத்தில் வழிபாடு செய்யவும் சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களின் நிதி நிர்வாகப் பரிபாலனத்தில் பணிசெய்ய பெரும் பேறுபெற்றேன். என்னை இங்கு பணிசெய்ய அறிமுகம் செய்து நேர்முகப் பரீட்சைக்குச் சான்றிதழ் வழங்கியவர் பண்டிதமணி அவர்கள் ஆவார். அவரது 109 ஆவது பிறந்த நாளில் (27.06.2008) பண்டிதமணியின் நினைவையும் எமது சமயமும், மக்களும், மண்ணும் இம்மாதம் 15 ஆம் திகதி இழந்த அன்னையையும் சேர்த்துப் பார்த்து நினைக்கிறது எனது பேதை உள்ளம்.

"ஸ்ரீ கா.சிவபாலன் அவர்களை நான் நன்கு அறிவேன். மிகவும் உண்மையானவர். கோயில் தர்மங்களில் இயல்பாகவே பெரிதும் ஈடுபாடு உடையவர். மட்டுவில் முத்துமாரியம்மன் கோயில் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர். மட்டுவில் சிவன் கோயில் நல்ல நிலையில் வைப்பதற்கு முயன்று கொண்டு இருப்பவர். தரும விடயங்களில் இவரைப் போல ஆள் கிடைப்பது அரிது. என் நம்பிக்கைக்கு உரியவர் இவர் (ஒப்பம்) சி.கணபதிப்பிள்ளை".

இந்தக்கடிதமே சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்களைத்தரிசிக்கக் கிடைத்த முதற்பேறினைத் தந்தது. பண்டிதமணி அவர்களின் நூல்களை எவ்வாறு படித்தோமோ, அவ்வாறே சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவின் எழுத்துக்களை எழுத்தெண்ணிப் படித்திருக்கின்றேன். சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவின் சைவப் பிரசங்கங்களை எல்லாம் கேட்டு இன்புற்று இருக்கிறேன். பண்டிதமணிக்கு 'தினகரன்' வழங்கிய பட்டமே மேலோங்கி நிக்கிறது. சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவுக்கு ஈழத்துச் சிதம்பரம் மணிவாசகர் சபைக் குருக்கள் ஐயா வழங்கிய "சிவத்தமிழ்ச் செல்வி" என்ற பட்டமே சிறப்புச் செய்கின்றது.

ஆதரவற்ற எமது சமயத்தைச் சேர்ந்த ஏழைப் பெண்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு இல்லம் அமைத்தவர் அம்மா அவர்களே. ஆலய தர்மங்களைப் பேணி, சைவபரிபாலனத்தைக் [illegible] அம்மா. என் தந்தையிலும் சிறந்த தந்தையாக என்னைப் பல துறைகளிலும் வளர்த்து எடுத்தவர்கள் சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களே. ★ - கா.சிவபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோல் விலை ஏறிவிட்டதா?

கவலையை விடுங்கள்!

அறிமுகமாகிறது

மின்சார ஸ்கூட்டி

POWER SCOOTY

பெற்றோல், இயந்திர ஒயில் எதுவுமே தேவையில்லை.

ஜப்பானிய தொழில்நுட்ப மாதிரியில் தயாரிக்கப்பட்டது.

ஒரு வருட உத்தரவாதம்.

யாழ்.மண்ணில் அறிமுகப்படுத்துகின்றார்கள்

ஐங்கரன் மோட்டோர்ஸ், மானிப்பாய்,

ஆட்டோ, மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக மொத்த, சில்லறை விற்பனையாளர்.



# எல்லையற்ற செய்தியாளர்கள்

REPORTERS WITHOUT BORDER

இது புதியது! புதினம் [illegible] சொல்வது!!







ஏற்கனவே இப்பணியில் பலர் சேர்ந்துவிட்டனர். நீங்கள் ஏன் இனியும் தாமதிக்கவேண்டும்? இது மிகவும் இலகுவானது. உதயனின் சர்வதேசப் பதிப்பிலும் உதயன் பத்திரிகையிலும் உங்கள் பகுதியின் நிகழ்வுகளையும் சம்பவங்களையும் பதிவுசெய்வதற்கு இதுவே மிக இலகுவான வழி.

உங்கள் பகுதியில் உள்ள பாடசாலைகள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் நிகழ்வுகளை எங்களுக்கு அறியத்தாருங்கள்.

புகைப்படங்களையும் அனுப்புங்கள்.

தாமதிக்காதீர்கள்! இன்றே உரிய தரவுகளுடன்

news@uthayan.com

photo@uthayan.com

எனும் ஈ - மெயில்களுக்கு அனுப்புங்கள்

புகைப்படங்கள், செய்திகளில் தமது பெயர்களைச் சேர்த்துக்கொள்ள விரும்புவோர் அதனைக் குறிப்பிடவும்.


# வாழ்த்துகின்றோம்



அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட

**திரு.பொன்னையா பஞ்சலிங்கம்**

அவர்கள் 20.06.2008 அன்று யாழ்.மாவட்ட நீதிபதி **திரு.இ.வசந்தசேனன்** முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

விபுலானந்தர் வீதி, அரியாலையை வசிப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை கொழும் புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலும் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையிலும் உயர்கல்வியைத் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலும் மேற்கொண்டிருந்தார்.

மும்மொழிகளிலும் நல்ல பாண்டித்தியமுள்ள இவர் இலங்கை விமானப் படையின் முன்னாள் அதிகாரியாவார். இவர் ஒரு சிறந்த மெய்வல்லுநர் விளையாட்டு வீரராவார். 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் மாவட்டச் சாதனையாளராக விளங்கி, அகில இலங்கை மெய்வல்லுநர் அணியில் பங்குபற்றி பல சிறப்புக்களைப் பெற்றவர். அத்தோடு யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவராகவும் கடமையாற்றியவர். அரியாலையின் பல்வேறு சமூக, சமய, கலை, கலாசார அமைப்புகளிலும் முக்கிய பங்காற்றுவதோடு யாழ். மாவட்ட மத்தியஸ்தர் சபையின் உறுப்பினராகவும் உள்ளார்.

இவர் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாகத் தெரிவுசெய்யப்பட்டமைக்காக அவரைப் பாராட்டி இவரது பணி மேலும் சிறக்க உளமார வாழ்த்துகின்றோம்.

அரியாலை. (75855) **நண்பர்கள்.**


## வெளிவந்துள்ளது

பொருளியல் அறிமுகம்

(A|L, G.A.Q, Banking, Exam)

By: R.Rajeswaran - M.Ed.

பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.


## தவறிவிட்டது

பேரின்பநாதன் கலாசிறி சிவஞானலச்சுமி என்பவருடைய தே.அ.அட்டை (657872560V) 20.05.2008 அன்று தட்டாதெருச் சந்திக்கும் சிவலிங்கப்புளியடிக்கும் இடையில் (கே.கே.எஸ். வீதி) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 465, கே. கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(74854) T.P.: 077 9254001


## விற்பனைக்கு

நவீன ஆடம்பரமான வீடு கோழும்பு 03இல் பம்பலப்பிட்டிச் சந்திக்கு அருகில்

குளியலறையுடன் கூடிய 3 படுக்கை அறை, காரியாலய அறை மற்றும் வேலையாள் அறை முற்றிலும் திருத்தியமைக்கப்பட்ட வீடு டுப்பிளிக்கேசன் வீதிக்கும் காலி வீதிக்கும் இடையில்.

(#1553528)

தொலைபேசி: 0777-317752



## நீ எங்கே இருக்கிறாய்....?

கண்ணீரா!

வேதனையா! உள்ளத்தில் பாரமா!

உள்ளத்தில் சமாதானம் இன்றித் தவிக்கின்றாயா!

மனதிற்கு ஆறுதல் தரும் பாடல்களில்

இயேசு தரும் விடுதலை

**வாழ்வளிக்கும் கிறிஸ்து நற்செய்திப் பெருவிழா**

தென்னிந்திய பிரபல கிறிஸ்தவப் பாடகரும் நற்செய்தியாளருமான

**Bro.Freddy Joseph**

அவர்களும் அவரது குழுவினரும்

காலம்: 29.06.2008 (ஞாயிறு) பிற்பகல் 2.00 மணி

இடம்: கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை திறந்தவெளி

(வாகன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது)

(#1553535)


# ஈரவிழிகளுடன் நீங்கா நினைவலைகளாக...

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 22 ★ 11 ★ 1938 |  | 26 ★ 04 ★ 2005 |

**அமரர் கார்த்தி கிருஷ்ணபிள்ளை**

திதி: துதியை

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 08 ★ 03 ★ 1963 |  | 11 ★ 06 ★ 2007 |

**அமரர் கிருஷ்ணபிள்ளை ஜெயாதரன்**

திதி: ஏகாதசி

அன்புத் தெய்வங்களே பண்பின் திருவுருவமாய்
பாசத்தின் உறைவிடமாய் எம்மை ஆளாக்கி
இவ்வையத்தில் எம்மை வாழ வழியமைத்தீர்கள்
காலனவனிட்ட சதியில் கலங்கிட எம்மை வைத்து
நாள்கள் எத்தனை மறைந்தாலும் மறையாது
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு
நாமிருக்கும் வரை என்றும் உங்கள் நினைவுகளுடன்.

குமாரியோடை, கரணவாய், கரவெட்டி. (75864) [illegible]

# விழிநீர் சொரியும் ஓராண்டு நினைவு அஞ்சலியும் 49ஆவது பிறந்த நாள் நினைவும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 15 ★ 06 ★ 1959 |  | 11 ★ 07 ★ 2007 |

**திருமதி சகுந்தலாதேவி தங்கராசா**

திதி: ஆனி அபரபக்க ஏகாதசி

முக்கனி போல் மும்மணி நீ எனக்குத் தந்து விட்டு
எத்திசையில் சென்று விட்டாய் எந்தன் சகுந்தலாவே?
நயினையிடம் அன்று விடை பெறவோ நீ சென்று
நாமெல்லாம் கதறியழ அமைதியுடன் நீ சென்றாய்

கணவர்

பார்க்குமிடம் எல்லாம் உன் சிரித்தமுகம் தெரியுதம்மா
கேட்கும் ஒலியெல்லாம் உன் இனிய மொழி கேட்குதம்மா
தாலாட்டி நீ ஊட்டும் உணவின் சுவையெல்லாம்
காலாட்டி நாம் உண்ணும் நாள்இனியும் வந்திடுமோ?

பிள்ளைகள்

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, நல்லூர். (75851)

கணவர், பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளத்தை பெருக்குவதன் மூலம் பாசனத்தை விருத்தி செய்து அபிவிருத்தி காண் முனைய வேண்டும்

## நீர்வள வலயங்களின் அடிப்படைத் தரவுகளின் துணையுடன் திட்டங்களைச் செயற்படுத்தினால் அவை வெற்றிபெறும்

## நன்னீர் ஏரித்திட்டம் நற்பயன்களைத் தரும்

தரைக்கீழ் நீர்வளம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மனித வாழ்வுக்கும் வளத்திற்கும் வரலாற்றுக் காலம் முதல் அடிப்படையாக இருந்து வருகின்றது. வடமாகாணத்தின் மொத்த குடித்தொகையில் 70 வீதத்தினர் யாழ். குடாநாட்டில் செறிந்திருப்பதற்கும் குடாநாடு செறிந்த பயிர்ச்செய்கைப் பிரதேசமாக விளங்குவதற்கும் இங்கு கிடைக்கும் தரைக்கீழ் நீர்வளமே காரணமாகும்.

புத்தளத்தில் இருந்து பரந்தன், முல்லைத்தீவை இணைத்து வரையப்படும் கோட்டிற்கு வடமேற்காகவுள்ள பகுதிகள் மயோசீன்காலச் சுண்ணாம்புப் பாறையமைப்பைக் கொண்டுள்ளன. இப்படிவுகள் தரைக்கீழ்நீரைப் பெருமளவு சேமித்து வைக்கக் கூடிய தன்மை வாய்ந்தவையாகும். சுண்ணக்கல்லை அடிப்படையாகக் கொண்ட செம்மண், செம்மஞ்சள் மண்கள் நீரை உட்புக விடும் இயல்பை அதிகளவு கொண்டவையாகவும் அமைந்துள்ளன. மழையால் பெறப்படும் நீர் இப்பகுதிகளில் இலகுவாக உட்புகுந்து தரைக்கீழ் நீராகத் தேங்குகின்றது. உண்மையில் இவ்வாறு செல்லும் நீர் நன்னீர் வில்லையாக உவர்நீரின் மேல் மிதந்து கொண்டிருக்கின்றது. குடாநாட்டின் கரையோரப்பகுதியிலிருந்து மையப் பகுதியை நோக்கிச் செல்லும்போது இவ் வில்லையின் தடிப்பு அதிகரித்துச் செல்கின்றது. ஆகக்கூடிய தடிப்பு '100-110' வரை உள்ளது. இந்த வில்லையானது யாழ்ப்பாணக் குடாநாட்டின் நடுவேயுள்ள உவர்நீர் ஏரிகளினால் துண்டுகளாக்கப்பட்டுள்ளன. இந்த உவர் நீர் ஏரிகளை நன்னீர் ஏரிகளாக மாற்றினால் துண்டுபடும் நன்னீர் வில்லை துண்டுபடாது தொடராக அமையும்.

சுண்ணக்கற் பாறைப்படிவுகள் பிரதான நிலப் பகுதியில் ஆழமாகக் கீழ்ப்பாகத்திலும் யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதியில் ஆழமற்று மேற்பாகத்திலும் காணப்படுகின்றன. இதனால் அதிக ஆழமற்ற கிணறுகளைத் தோண்டுவதன் மூலம் யாழ்ப்பாணப் பகுதியில் நீரைப் பயன்பாட்டிற்காக இலகுவாக மேலே கொண்டுவர முடிகின்றது. மாறாக புத்தளம், பரந்தன், முல்லைத்தீவை இணைக்கும் கோட்டிற்கு தெற்காக உள்ள பிரதான நிலப்பகுதியில் சுண்ணக்கற்படை ஆழமானதாக காணப்படுகின்றது. இதனால் இப்பகுதிகளில் அதிக செலவில் குழாய்க் கிணறுகள் அமைத்தே தரைக்கீழ் நீரைப் பாசனத்திற்கு பண்படுத்த முடி யும்.

### கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலேயே யாழ்ப்பாணத்தில் கிணறுகள் தோண்டப்பட்டன

யாழ்ப்பாணத்தில் மனித குடியிருப்பின் வரலாறு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ஆரம்பமாகிறது. அக்காலத்தில் இருந்தே கிணறுகள் தோண்டி தரைக்கீழ் நீரைக் குடிப்பதற்காகவும் விவசாயத்திற்காகவும் மக்கள் பயன்படுத்தி வந்துள்ளமைக்கான சான்றுகள் நிறைய உண்டு. கிணறுகளில் இருந்து மனித சக்தியால் குறிப் பாக துலா மூலமும், உள்ளூர் சூத்திர முறையாலும் நீரானது பாசனத்திற்குப் பெறப்பட்டு வந்துள்ளது. இவ்வாறு வளர்ச்சியடைந்துள்ள பாசன முறையிலான விவசாயச் செய்கை இன்றைய காலகட்டங்களில் உபஉணவுச் செய்கை எனும் சிறப்பானதும் செறிவானதும் நவீனத்துவமானதுமான பயிர்ச் செய்கை முறையாக மாறிய பின்னர் நீர் நிறைக்கும் இயந்திரத்தின் பாவனை யாழ்.குடா நாட்டின் சகல கிராமங்களிலும் அதிகரித்து வந்துள்ளது.

இவற்றினால் அண்மைக் காலங்களில் குடாநாட்டின் பல பகுதிகளில் தரைக்கீழ் நீர் உவர் நீராதல் போன்ற பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இது அபாயகரமானதோர் நிலைமை என்பதில் சந்தேகமில்லை. இச்சவாலை நல்ல முறையில் எதிர்கொள்வதற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டில் தரைக் கீழ் நீர்வளம், பாவனை, முகாமைத்துவம், அபிவிருத்தி பற்றி நுண்ணாய்வுகள் பல செய்யப்படுதல் வேண்டும். 1965 இல் இங்கு அமைக்கப்பட்ட நீர்வள சபை வடபகுதி தரைக் கீழ் நீர் உவர் நீராதல் பற்றியும் குழாய்க்கிணறு தோண்டி பாசன விருத்தி செய்யும் வாய்ப்புகள் பற்றியும் சில ஆய்வுகளை மேற்கொண்ட போதி லும் இன்றுவரை அவை முறையாக வெளியிடப் படவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர் வளம் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் முன்னெப்போதுமில்லாதவாறு இன்றைய கால கட்டத்தில் மிக அக்கறையுடன் சிந்திக்க வேண் டியவர்களாகவுள்ளோம். திட்டமிட்ட முறையில் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டிய தேவையும் உண்டு. மேல் விபரித்த அம்சங்கள் அனைத்தையும் மனங்கொண்டு நாம் செய்ய வேண்டிய பணிகள் ஆலோசனைகள் என்பன இங்கு அனைவரதும் அக்கறையான கவனத் திற்கு முன்வைக்கப் படுகிறது.

### சில அபிவிருத்தி ஆலோசனைகள்

யாழ்ப்பாணத்தில் விவசாயமும் நீர்ப்பாசனமும் எனும் போது அவற்றின் அபிவிருத்தி அம் சமே முன்னுரிமை பெறுகின்றது.

* யாழ்ப்பாணக் குடாநாட்டில் இனி மேலும் நாம் விவசாய விரிவாக்கத்தை, முக்கியமாக விளை பரப்பை அதிகரித்து மேற்கொள்ள வேண்டுமென்று எண்ணுவது தவறாகும். இது 'உள்ளதையும் கெடுக்கும்' ஆபத்தான நிலையை உருவாக்கக் கூடும். இங்கு தற் போது காணப்படும் விவசாயச் செய்கையை மிகவும் நவீன முறையிலானதாக மாற்றுவதோடு நீர்ப்பாசன முறைகளிலும் நவீனத்துவத்தை கையாண்டு நல்ல முறையில் பாசன முகாமைத்துவத்தைப் பேணி வீண் விரயமாதலைத் தடுத்து உள்ள விவசாயப் பயன்பாட்டை உச்ச வருமானம் தரத்தக்க தாக மாற்றி அமைப்பதே சிறந்த வழியாகும்.


* யாழ்ப்பாணக் குடா நாட்டின் நிலப்பயன்பாடு சிறப்புத்தேர்ச்சி பெற்ற தாக மாற்றப்பட வேண் டும். அதிக செலவில் விவசாயம் செய்யும் இப்பகுதியில் ஒவ்வொரு அங்குல நிலமும் உச்சப் பயன் தரத் தக்கதாக அமைக்கப்படுதல் வேண் டும். விவசாய அபிவிருத்தி விவசாய வர்த்தக முறையிலமைந்ததாக அமையப் பெறவேண்டும். யாழ்ப் பாணக் குடாநாட்டுப் பகுதிகளில் நெற்பயிர் செய்கை தவிர்க்கப்பட்டு அதிக வரு மானம் தரத்தக்க பணப்ப யிர்ச்செய்கைவிருத்தி செய்யப் பட வேண்டும். உபஉணவு, காய் கறி, பழச்செய்கை, பானப்பயிர் செய்கை, எண்ணை வித்துப்பயிர்ச் செய்கை போன்றவனவாக இவை அமைய வேண்டும். உற்பத்திகளில் சிலவிவசாய இந்த கைத்தொழில்துறை விருத்திக்கு மூலப் பொருள் களை வழங்குபவையாயும் இருக்க வேண்டும். உண்மையில் இப்பகுதியில் புகையிலை செய்கை ஊக்குவிக்கப்படுதல் வேண் டும். ஏனெனில் இது செய்கையாள ருக்கு குறைந்த நிலத்தில், குறைந்த நீர்வளத்தைப் பயன்படுத்தி அதிக லாபம் தருவதோடு விவசாய கைத்தொழில் விரிவாக்கத்திற்கும் உதவுவதாகும். தேயிலை, றப்பர் ஏற்றுமதியில் இலங்கை அந்நியச் செலாவணி பெறுவது போல் நாம் புகையிலையால் அந்நியச்செலாவணி பெறலாம்.

* நகரங்களைச் சூழவுள்ள கிராமப் பகுதிகளில் விவசாயச்செய்கை. நகரச் சந்தையின் தேவைக்குரியவற்றை உற்பத்தி செய்யகூடிய வகையில் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண் டும். சந்தை நிலைமைக்கேற்பவும் யாழ்ப்பாண விவ சாயம் மாற்றமுறுதல் வேண்டும். இவ் வகை யான நிலப்பயன்பாட்டு மாற்றமே யாழ்ப்பாண பகுதியில் வேண்டப்படுவதாகும்.

### மழை நீரைத் தேக்குதலும் குளங்களின் தூர் அகற்றுவதும்

* யாழ்ப்பாணக் குடாநாட்டு தரைக்கீழ் நீரின், மீள் நிரப்பும் தன்மையை அதிகரிக்க வேண்டும், என்பதில் பலர் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளனர். இங்கு குறுகிய காலத்திற் கிடைக்கப்பெறும் ஒரே ஒரு மீள் நிரப்பியான மழை வீழ்ச்சியால் கிடைக்கும் நீரானது மேற் பரப்பில் ஓடி வீணே கடலை சென்றடைய விடாது தடுத்து அவற்றைத் தரைக்கீழ் நீராகச் சேமிப்ப தற்கு சகல வழிகளிலும் நாம் முயலுதல் வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுண்ணக்கற் புவி அமைப்பின் காரணமாக சுண்ணக்கற் கரைசலால் ஏற்பட்ட 1050 குளங்கள் காணப்படுகின்றன. இக்குளங்களில் நிறையும் தண்ணீ ரில் பெரும் பகுதி தரையின் கீழ்ச் சென்று நீர்வளத்தை அதிகரிக்கச் செய்கின்றது. இவ்வாறான குளங்கள் குப்பை கூழங்கள் கொட்டப்படுவதாலும் தூர் சேர்ந்தமையாலும் நீரினை உட்செலுத்தும் தன்மையில் குறைவடைந்து காணப்படுகின்றன. இவ்வாறான குளங்களைத் துப்பரவு செய்தலும் தூர் அகற்றுதலும் அவ சியம். இங்கு இவ்வாறான முயற்சிகள் அரிதாகவே இடம் பெறுகின்றன.

* தோட்டங்கள் இளக்குவதற்கு குளங்களின் மண், மக்கி எடுக்க அனுமதிக்கும் முறை இங்கு உண்டு. இது மிக்க அவதானம் தேவை. குளங்களைத் தரைக்கீழ் நீர்ப்பீடம் வெளித் தெரியக் கூடியளவிற்கு ஆழமாக்கப்படக் கூடாது. இவ்வாறு நிகழின் குளங்கள் மூலம்




தரைக்கீழ் நீர் பெருமளவு ஆவியாக வெளியேறிவிடும். எனவே குறிப்பிட்ட ஆழம் வரையே மண் எடுக்க அனுமதிக்க வேண்டும்.

* யாழ்ப்பாணக்குடாநாட்டில் சில பகுதிகளில் , சுண்ணக்கல் நிலத்தோற்றத்தில் ஒன்றாக தரைக்கீழ்நீர் ஓடும் குகைகள் சில மேற்பரப்பு இடிந்த நிலையில் காணப்படுகின்றன. நிலாவரைக்கிணறு, குரும்பசிட்டி பேய்க்கிணறு, புன்னாலைக்கட்டுவன் குளக்கிணறு, கீரிம லைக் கேணி, அல்வாய் மாயக்கைக் குளம், கர வெட்டி குளக்கிணறு, ஊறணிக் கிணறுகள், யமுனாஏரி என்பன இவ்வகையில் அமைந்த குகைப்பள்ளங்களாகும். இவற்றுள் சில பாசனத்திற்காக பயன்டுத்தப்படுகின்றன. இன்னும் சில ஆய்வுகள் மேற்கொண்ட பின் பயன்படுத் தக்க வாய்ப்புகளை கொண்டுள்ளன.

நிலாவரைக்கிணற்றில் மேற்கொண்ட ஆய்வொன்றின் படி நாள் ஒன்றிற்கு 10 மணித்தியாலங்களில் 30,000- 40,000 கலன் நீர்தோட்ட பாசனத்திற்காக அக்கிணற்றில் இருந்து எடுக்கக் கூடிய தன்மை தெரியவந்தது. இவற்றை பாசனத்திற்காக மாத்திரமன்றி, மழைக்காலங்களில் பெருமளவு நீரைத்திட் டமிட்ட அடிப்படையில் தரைக் கீழ் நீர் மீள்நிரப் பியாக உட்செலுத்துவதற்கும் பயன்படுத்த இயலும். இது இப்பகுதிகளின் தரைக்கீழ் நீர் வளத்தைப் பெரிதும் அதிகரிக்கக் கூடியதாக அமையும் என துணியலாம்.

* தரைக்கீழ் நீர்க் குகைவழிகள் மூலம் நீர் கடலைச் சென்றடையும் நிலையும் இங்கு காணப் படுகின்றது. கீரிமலைக்கேணிக் குகை ஊடாக வரும் நீர் இதற்கு உதாரணம் ஆகும். தரைக்கீழ் நீரைக் கடலில் கலக்க வைக்கும் குகை வழிகள் எல்லாப் பகுதிகளிலும் கண்டறியப்பட்டு அவற்றை நிலத்தின் கீழாக அணைகட்டித் தடுக்க வேண்டும். இவ்வாறான முயற்சிக்கான ஆலோசனைகள் ஏலவே முன்வைக்கப்பட்டிருப்பினும் செயல் முறையில் இவ்வகை முயற்சிகள் ஒன்றும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை.

### நன்னீர் ஏரித்திட்டம்

* யாழ்ப்பாணக் குடாநாட்டின் எதிர்கால வாழ் வுக்கும் வளத்திற்கும் இன்றியமையாத திட்டம் பற்றி அக்கறையுடன் நோக்கும் எவரும் இங் குள்ள கடல் நீரேரிகளை நன்னீர் ஏரிகளாக மாற் றும் திட்டம் பற்றிச் சிந்திக்காதிருக்க முடியாது. நன்னீரேரித் திட்டங்களால் யாழ்ப்பாணத்தின் தரைக்கீழ் நீர்வள சேமிப்பு அதிகரிப்பதோடு வீணே கடலை அடையும் நீர் தரைக் கீழ் நீரின் மீள் நிரம்பியாக மாறும். குடாநாட்டுத் தரைகீழ் நீர்வில்லைகள் துண்டுபடாது தொடராகவே இருக்கும். குடாநாட்டின் உவர்நீராதல் பிரச்சினைகள் கணிசமான அளவு குறையும். உவர் நிலங்கள் வளமுள்ள விளைநிலங்களாக மாறும். குடாநாட்டின் நிலப்பரப்பும் நன்னீர் பரப்பும் அதிகரிக்கும். இவ்வாறு பல நன்மைகளை நன்னீர் ஏரியாக்கும் திட்டம் எமக்கு வழங்குமெனத் துணியலாம். உண்மையில் இப்பகுதிக் நன்னீரேரியாக்கும் திட்டம் பற்றிய சிந்தனை நூறு வருடம் பழமை வாய்ந்தது. 1922 இல் இரணைமடுக்குள அணை கட்டப்பட்ட போது ஆனையிறவுக் கடல் நீரேரியை நன்னீரேரியாக்கும் திட்டம் பற்றியும் கூறப்பட்டிருந்தமை மனங் கொள்ளத்தக்கது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீண்ட கால திட்டத்தின் அடிப்படையில் நன்னீரேரிகளாக மாற்றப் படக்கூடிய 13 கடனீரேரிகளும் நடைமுறையிலுள்ள 33 உவர்நீர்த் தடுப்புத் திட்டங்களும் உள் ளன. மேற்படி 13 கடனீரேரிகளில் நான்கு கடனீ ரேரிகளை அதிக செலவின்றி நன்னீரேரிகளாக மாற்றலாம். அவையாவன,

1. ஆனையிறவு மேற்கு கடனீரேரி
2. ஆனையிறவு கிழக்கு கடனீரேரி
3. [illegible] தொண்டைமானாறு கடனீரேரி

மேற்படி கடனீரேரிகளை நன்னீரேரிகளாக மாற்றும் திட்டங்கள் பல உருவாக்கப்பட்டு, அவற்றில் சில பகுதிகள் செயற்படுத்தப்பட்டுமுள்ளன. உப்பாறு மீன்பிடிக்கு உதவுமென்று எண்ணும் மக்கள் ஏதோ வழிகளில் கடனீரை உள்ளே வரவிடுவதனால் இத்திட்டங்கள் பூரண வெற்றியை அளிக்காதுள்ளன. இத்திட்டங்களை நல்லமுறையில் செயற்படுத்துதல் இன்றியமையாததாகும். அத்துடன் குடாநாட்டைச் சூழவுள்ள ஏனைய சில கடனீரேரிகளையும் அதிக பொருள்செலவு இன்றி நன்னீரேரியாகக் கூடிய வாய்ப்பு உண்டு. உதாரணமாக மண்டைதீவையும் வேலணையை யும் பிரிக்கும் கடனீரேரியை சுலபமாக நன்னீரேரியாக மாற்றலாம். பண்ணைத் தாம்போதியையும் அராலித் தாம்போதியையும் முற்றாக மூடுவதன் மூலம் யாழ். நகரத்தின் தென்மேற்கு பகுதியில் பாரிய நன்னீரேரித் தேக்கத்தை ஏற்படுத்தலாம். இவ்வாறான திட்டங்களால் நன்னீர் வளம் பெருகுவதோடு நிலப் பரப்புகளில் உவர்த்தன்மை நீக் கப்பட்டு அவற்றை வளமான விளை நிலங்களாக மாற்ற முடியும். இது நில, நீர் பற்றாக்குறையால் அல்லல்படும் யாழ்ப்பாணத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமையுமெனலாம்.

கடல் நீரேரிகளை நன்னீரேரிகளாக மாற்றும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் முக்கியமாக இரு பிரச்சினைகளை முன்வைக்கின்றனர்.

**1. சூழல் மாசடைதல் தொடர்பானது**

கடல் நீரேரிகளில் நீர்வரத்துத் தடைப்பட்டு நீரேரிகள் முற்றாக வற்றும் காலங்களில் குடியிருப்புப் பகுதிகள் மீது வேகமாக வீசும் காற்றினால் (சோளகக் காற்று) புழுதி வாரி வீசப்படுமென்றும், இதனால் இத்திட்டம் சுற்றுப்புறச் சூழல் மாசடையும் அபாயத்தைக் கொண்டுள்ளதெனவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த அபாயத்தை இலகுவாக சமாளிக்கலாம். நன்னீரை வற்றாத அளவுக்கு தேக்கி வைப்பதன் மூலமாகவும் முற்றாக நீர் வற்றும் பகுதிகளைக் கண்டறிந்து அப்பகுதிகளில் திட்டமிட்ட அடிப்படையில் புல் வளர்ப்பதன் மூலமாகவும் இம் மாசடைதல் பிரச் சினையைச் சமாளிக்கலாம். ஒல்லாந்து தேசத்தில் கடல் நீரேரிப் பரப்புகள் பெருமளவு மீட்கப்பட்டு புல் வளர்ப்பிற்கு உட் படுத்தப்பட்டு விலங்கு வேளாண்மை விருத்திக் குப் பயன்படுத்தப்பட்டு வருவதை இதற்கு உதாரணமாகக் காட்டலாம்.

**2. கடல் நீரேரிகளில் மீன் பிடித்தொழில் மேற் கொள்ளும் மக்களின் தொழிற்துறை பாதிப்புறும் என்ற கருத்து**

* இத்திட்டத்தால் பாதிப்புறும் மக்களைக் கண்டறிந்து அவர்களுக்குப் பொருத்தமான வேறு கரையோரப் பகுதிகளில் குடியிருப்புக்களை அமைத்துக் கொடுப்பது இயலக்கூடியதே. குடாநாட்டுப் பரவை கடற் பரப்புகளில் மீன்பிடித் தொழில் ஈடுபடுவதைவிட ஆழ்கடல் மீன்பிடியில் அவர்களை ஈடுபட வைப்பது பொருளாதார அபிவிருத்தி நோக்கில் அதிக நன்மை விளைவிப்பதாக அமையும். எனவே பாதிப்புறும் மக்களை குடாநாட்டின் அல்லது பிரதான நிலப்பகுதியின் கிழக்குக் கரையோரமாகக் குடியேற்றி ஆழ்கடல் மீன்பிடியை ஊக்குவிக்கலாம். இம்மாற்றமானது குறுங்கால நோக்கில் கடினமாக அமைந்தாலும் நீண்டகால பிரதேச அபிவிருத்தி நோக்கில் அதிக நன்மை பயக்குமென நம்பலாம்.

### பயிர்களுக்கு மித மிஞ்சிய நீர் பாய்ச்சல்

* யாழ்ப்பாணப் பகுதிகளில் நீரிறைப்பு, இயந் திரமயப்படுத்தப்பட்ட பின்னர் பணிர்களுக்கு மித மிஞ்சிய நீர் பாய்ச்சப்படுவதாகக் கருதப்படுகின்றது. உவர் நீராதல் பிரச்சினைக்கு இதுவும் ஒரு காரணமாகும். உண்மையில் இன்ன பயிருக்கு இன்ன பிரதேசத்தில் இன்ன காலத்திற்கு இவ்வளவு நீர் தேவை என்பதை விவசாயிகளுக்கு நல்ல முறையில் அறிவுறுத்தல் வேண்டும். மேலும் இங்கு காணப்படும் பாசன முறைமை நீர் ஆவியாக்கத்தை அதிகரிக்கச் செய்கின்றது. இதனை தடுப்பதற்கு இஸ்ரேல் நாட்டில் காணப்படும் பாசனமுகாமைகளான விசிறல் பாசன முறைமை,பல குழாய் வழி இணைப்புக்கள்

(14ஆம் பக்கம் பார்க்க).



பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்
தலைவர், சமூகவியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
(இணைப்பாளர், புறநிலைப் படிப்புகள் அலகு).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்த தின வாழ்த்து

## சிறீஸ்கந்தராஜா யதுஷிகா



பிளாக் விதி, சங்கானையைச் சேர்ந்தவர்களான சிறீஸ்கந்தராஜா - ருவேந்தினி தம்பதியாரின் செல்வப்புதல்வி யதுஷிகா தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா சிறீஸ்கந்தராஜா, அம்மா ருவேந்தினி, அம்மம்மா மார்களான இந்திராணி (சங்கானை), ஜெயராணி (சங்கானை) நிமலாகரன் குடும்பம் (சுவிஸ்), கணேசராஜா குடும்பம் (சுவிஸ்), அம்மப்பா மார்களான வெற்றிவேலு, வடிவேலு (சங்கானை), மாமாமார்களான றூபகாந்தன் (மலேசியா), கௌசமோகன் (சங்கானை), கஜேந்திரமோகன் (சங்கானை), சித்திமார்களான றூபநந்தினி (சங்கானை), லகிதா (சங்கானை), நடராஜா குடும்பம் (லண்டன்), அப்பப்பா மார்களான சின்னத்துரை (அளவெட்டி), மகேந்திரலிங்கம் (கோப்பாய்), பஞ்சலிங்கம் (பிரான்ஸ்), ராசலிங்கம் (சங்கானை), பெரியப்பா சுவேந்திரராஜா (கிளிநொச்சி), அத்தை பிரேமினி (கிளிநொச்சி) மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

பிளாக் வீதி,
சங்கானை.

Happy Birthday
29.06.2008



# இலங்கை வங்கி, பருத்தித்துறைக் கிளையின் பொன்விழா வாழ்த்து

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையின் பொன்விழா சிறப்புற முகாமையாளரையும், உத்தியோகத்தர்களையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
காக்கைரர் அமைப்பு - புலோலி மேற்கு,
காக்கைரர் அமைப்பு - புலோலி மத்தி,
இலங்கை வங்கிக் கிராமம் - தம்பசிட்டி.

# இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையின் பொன்விழா




இடம்: வீரவாகு மண்டபம், வங்கிச் சதுக்கம்
காலம்: இன்று (29.06.2008) ஞாயிற்றுக்கிழமை 8.30 மணி
தலைவர்: திரு.கே.பி.ஆனந்தநடேசன்
(முகாமையாளர், இலங்கை வங்கி, பருத்தித்துறை)

பிரதம விருந்தினர்: திரு.பி.ஏ.அருமைநாயகம், பீ.ஏ.
(உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி வடமாகாணம்)

கௌரவ விருந்தினர்கள்:
திரு.என்.சிவரட்ணம (செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி, வடமாகாணம்)
திரு.ஏ.சிவசுவாமி (மேலதிக அரச அதிபர், யாழ்ப்பாணம்)
பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் (முகாமைத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.இ.வரதீஸ்வரன் (பிரதேச செயலர், பருத்தித்துறை)
திரு.எஸ்.சத்தியசீலன (பிரதேச செயலர், கரவெட்டி)
திரு.எம்.ஸ்ரீஸ்கந்தகுமாா (உதவி அரச அதிபர், கரவெட்டி)
திரு.சி.நந்தகுமார் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)
திரு.ஏ.ஏ.நடராஜா (செயலாளர், பருத்தித்துறை நகரசபை)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு.கே.பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற உதவிப் பொது முகாமையாளர்)
திரு.எம்.பாலசிங்கம (ஓய்வுபெற்ற செயற்பாட்டு முகாமையாளர்)
திரு.எஸ்.நடராஜலிங்கம (ஓய்வுபெற்ற பிரதேச முகாமையாளர்)
திரு.எஸ்.விக்னராஜா (ஓய்வுபெற்ற சிரேஷ்ட முகாமையாளர்)

இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் பொன்விழாச் சிறப்புற வாழ்த்தும்
**பருத்தித்துறை வர்த்தக சமூகம்.**

### தென்மராட்சி மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான மேலும் ஒரு தொகுதி பாடநூல்கள் வலயத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்தப் பாடநூல்கள் நாளை திங்கட்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 6 தொடக்கம் தரம்11 வரையான மாணவர்களுக்கு இதுவரை வழங்கப்படாத பாடப்புத்தகங்கள் வந்துள்ளன.

தரம் 7 வகுப்புக்குரிய ஆங்கிலம், தரம்11 இற்குரிய தமிழ்மொழியும் இலக்கியமும், கணிதம் ஆகிய பாடநூல்களும் வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
(203-207)

### வெங்காயம் விலை வீழ்ச்சி

தென்மராட்சி பிரதேச சந்தைகளில் வெங்காயத்தின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.

200 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்ட ஒருகிலோ வெங்காயம் 60 ரூபா தொடக்கம் 80 ரூபா வரை விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

அண்மையில் அறுவடை செய்யப்பட்ட வெங்காயம் சந்தைகளுக்கு கொண்டுவரப்படுவதால் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.
(203-207)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்
13.07.1935

விண்ணில்
30.05.2008

## திருமதி இராசம்மா சிவரத்தினம்

உத்தமராய் நாம் வாழ
உதிரம் கொடுத்து வளர்த்த அன்னையே
உயிர் உள்ள வரை உம்மை நாம் மறவோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது கலந்து கொண்டவர்கள், மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்கள், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்கள், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் நோயுற்றிருந்தபோது யாழ். போதனா வைத்தியசாலையில் சிறப்புற சேவைசெய்த வைத்தியர்கள், ஊழியர்கள், உற்றார், உறவினர்கள் மற்றும் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இன்று (29.06.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிலவுகலட்டி,
இடைக்காடு, அச்சுவேலி. **குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
01.12.1971



உதிர்வு
10.07.2007

## செல்வி சற்குணம் ரேணுகா

திதி: ஏகாதசி

எம்முடன் இன்பமாய் வாழ்ந்து வந்த உம்மை
எங்கிருந்தோ வந்து உம்மைப் பீடித்த கொடிய
நோயால் எங்கள் எல்லோரையும் இடை
வழியில் விட்டு பிரிந்து சென்றீரோ?
அம்மா, எங்கள் நெஞ்சங்கள் இருக்கும் வரை
உமது நினைவுகளைச் சுமந்திருப்போம்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

V.T.S ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

பெற்றோர், சகோதரர்கள்,
பெறாமக்கள்.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்:
21.05.1926

அஸ்தமனம்:
13.07.2004

## அமரா Dr. பொன்னையா யோகலிங்கம் (J.P)

திதி: 29.06.2008

இப் பாரில் ஆயிரம்தான் உறவுகள் இருந்தாலும்
நிழல் தந்த ஆலமரம் நீங்கள் சாய்ந்ததனால்
வேர் அறுந்த விழுதுகளாய் வாடுகின்றோம்

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

"கோவிந்தவாசா"
பொற்பதி வீதி,
கொக்குவில்.

திருமதி வி.யோகவதனி (மகள்)
மருமகன், பேரப்பிள்ளைகள்
(லண்டன்).


### மாங்கல்யா திருமண சேவை

20 ஆவது வருஷம் கால் பதித்து வீறு நடைபோடுகின்ற சேவையை நாடி சகல பாகங்களிலும் இருந்து டாக்டர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பட்டதாரிகள், வெளிநாட்டில் (P.R) உடையவர்களின் ஜாதகக் குறிப்புகள் எம்மிடம் கிடைத்த வண்ணம் உண்டு.

நம்பிக்கையான, திருப்தியான, துரிதமான சேவையை நாட வேண்டிய இடம்.

கு. திருவிளங்கம்
90, சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர் வடக்கு.
தேர்விற்கு சகல நாள்களிலும் 1 மணிக்கு பின் நேரில் தொடர்பு கொள்ளலாம்.
T.P.No 021222 6043, H.No 0771386846

**விற்பனைக்கு** கலர்மீன்கள், (மொத்தமாகவும், சில்லறையாகவும்) குருவிகள், செல்லப்பிராணிகள், தொட்டிகள், ஒட்சிசன் மோட்டர் போன்ற அனைத்துப் பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு:- SOMASUNDARAM AQUARIUM
22, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். 0777903090

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்றர்
29, முருகேசர் லேன், நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வம் நீ தியாகி (சிறுகதை)

மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு வந்து விட்டார்கள். மாப்பிள்ளை விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட மணவறையிலே அமர்ந் திருக்கிறார். ஐயர் மந்திரம் ஓதுகிறார். யாழ்ப்பா ணத்தில் மிகப் பெரிய நகைமாளிகையின் சொந் தக்காரராகிய சுந்தரம்பிள்ளையின் புதல்வி யின் திருமணம் என்றால் அலங்காரத்திற் கும் கூட்டத்திற்கும் கூறவும் வேண்டுமா?

'பந்தல் நிறைய ஆட்கள் குழுமியிருக்கி றார்கள். ஒரு புறத்தில் குளிர்பானம் கொடுப் போர்- மறுபகுதியில் வெற்றிலை சிகரெட் கொடுப்போர் சுறுசுறுப்பாக அங்கு மிங்கும் திரிந்து பணியாற்றுகின்றனர்.

'மணப்பெண்ணை அழைத்து வாருங் கள்' என்ற ஐயரின் சொல்லை நிறைவேற்று கின்றனர் சில பெண்கள். திருமணநேரம் நெருங்கிவிட்டபடியினால் நேரத்தைப் போக் காமல் முதலில் மாங்கல்யத்தை அணிவிக் கும்படி ஒருவர் ஆலோசனை கூறுகிறார்.

ஓர் தட்டத்தில் கூறை, தாலிக்கொடி, சீப் புக்கண்ணாடி, பவுடர் முதலியவற்றை வைத்து ஒருவர் பந்தலில் உள்ளவர்களுக்கு காட்டிக் கொண்டு வலம் வருகின்றார். எல்லோரும் மிக பயபக்தியுடன் இரண்டு கைகளினாலும் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கின்ற னர். செல்வமும் நடுங்கும் கரங்களால் தொட்டு ஒற்றிக் கொள்கின் றான்.



'மேளம் மேளம்' என்ற சத்தத்து டன் மாங்கல்யம் மங்கையின் கழுத் தில் அணி விக்கப் படுகின்றது. மீண் டும் மாலை மாற் றப்படுகின்றது. மாப் பிள்ளையின் அரு கிலே, மிக அமைதி யாக அமர்ந்திருக்கி றாள் மங்கை, குனிந்த தலை நிமிராவிட்டா லும் கடைக்கண் எங்கும் மேய்கின் றது.

பந்தலின் ஒரு புறத்தே மரத்துடன் மரமாக இருந்து பார்த் துக்கொண் டிருந்த செல்வத்தின் கண்கள் நீரைச் சிந்து கின்றன. மற்றவர்கள் கவனிக்கு முன் சால்வை யினால் துடைக்கின்றான்.

அவனது உடமை என எண்ணியிருந்த வள் இன்று வேறொருவன் உடமையாகி விட்டாள். சமீபத்தில் நடைபெற்ற தமிழ் உரிமைப்போர் அவளை அவ னிடமிருந்து பிரித்துவிட்டது. அவனது மனம் கடந்த காலத்தை அசை போடுகின்றது.

அவனது தாய் தந்தையர் அவனது எட்டு வயதில் ஒரு கார் விபத்தில் இறந்து விடுகின் றனர். தாய் தந்தையரை இழந்து அனாதை யாகிவிட்ட அவனை மாமனார் ஆதரவு கொடுத்து, அரவணைத்துக் கொள்கின்றார். சுந்தரம்பிள்ளையின் மகளான மங்கை தன் அத்தான் மீது அளவு கடந்த பாசம் கொண்ட வள். இருவரும் ஒன்றாகவே கல்லூரிக்குச் செல்வார்கள். இப்போது மங்கை- செல்வம் இருவருமே எஸ்.எஸ்.சி சித்தியடைந்துவிட் டார்கள். சுந்தரம் பிள்ளை வசதியிருந்தும் மகள் மேற்கொண்டு படிப்பதை விரும்ப வில்லை. செல்வமும் தொடர்ந்து படிக்கவில்லை. மாமனாருக்கு பாரமாக இருக்க விரும்ப வில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்த பத்தி ரிகை அலுவலகத்தில் உதவி ஆசிரியர் வேலை ஒன்றைச் சம்பாதித்துக் கொண்டான்.

செல்வம்- மங்கை இருவரது அன்புப் பிணைப்பு பெரியவர்களானதும் காதலாக மாறியது. "தமிழ் என் உயிர்" என்பதுதான் அவ னது மந்திரமாக இருந்தது. செல்வம் அத்துடன் சிறந்த எழுத்தாளன். அரசாங்கத் திற்கு வால்பிடித்த, வால்பிடிக்கின்ற அரசி யல் வாதிகள், சந்தர்ப்பவாதிகள் யாவரையும் தன் பேனாவினால் சாடுவான். தான்படைத்த சிறுகதைகளையும் அவ்வப்போது மங்கையி டம் படித்துக் காட்டுவான். அவள் மனதிற் குப் பிடித்தமான கதைகள்தான் பத்திரிகைக ளுக்கு அனுப்பப்படும். நாளடைவில் செல் வம் எல்லோராலும் புகழ்ப்படும்அளவுக்கு உயர்ந்துவிட்டான்.

அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைக் கண்டித்து பல கட்டுரைகள் எழுதினான். மக்கள் மத்தியில் உணர்ச்சி நிரம் பிய கட்டுரைகள் மூலம் புத்துணர்ச்சி ஏற்படுத்தினான். சில சுயநலப்புலிகள், தங்கள் சுகபோக வாழ்வை இந்தப் பொடிப் பயல் தன் பேனாவினால் பிட்டுக் காட்டுகின்றானே என ஆத்திரம் கொண்டனர்.

சுந்தரம்பிள்ளை செல்வத்தை நயமாகச் சொல்லிப்பார்த்தார் பலனில்லை. மிரட்டிப் பார்த்தார்- அதன் பலன்- வீட்டை விட்டே வெளியேறிவிட்டான்.

அவன் வீட்டைவிட்டுப் போனாலும் மங்கை - செல்வம் சந்திப்பு நடந்து கொண்டு தான் இருந்தது.

தமிழ் உரிமைப் போராட்டத்திற்காக ஆயத் தங்களைத் தமிழ்த் தலைவர்கள் செய்து கொண் டிருந்த நேரத்தில் ஒருநாள் மங்கை வீட்டில்-

"மங்கை - நான் இனி இங்கு அடிக்கடி வரமாட்டேன். தமிழ் உரிமைப் போராட் டத் தில் நேரடியாக ஈடுபடப் போகிறேன். போராட் டம் முடியும் மட்டும் நாம் சந்திக்க முடியாது. மனம் வருந்தாதே. காதலிலும் பார்க்க கடமை தான் முக்கியம் எனக்கு"

"அத்தான் - எனக்கு மட்டும் தமிழ் உணர்ச் சியில்லையா? எனக்கும் உங்களுடன் தோளோடு தோள் நின்று உரிமைக் களத்தில் குதிக்க விருப்பம்தான். ஆனால் தந்தையார் அனுமதி கொடுக்கமாட்டாரே,என்பதுதான் வருத்தம். முழுமூச்சுடன் போராட்டத்தில் ஈடு படுங்கள். என் காதல் என்றும் அழியாது."

முன் அறிவித்தபடி தமிழ்த் தலைவர்கள் 20.02.1961இல் சத்தியாக்கிரகப் போராட் டத்தின் ஆரம்ப கட்டமாக யாழ்ப்பாணக் கச் சேரி வாயில்களை முற்றுகையிட்டு மறியல் இயக்கத்தை ஆரம்பித்தார்கள். அன்றைய தினமே சுப்ரீம் கோர்ட்டில் வழக் குகள் விசா ரணைக்கு எடுபடும் முதற்தின மாகவும் குறிப் பிடப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைகளின் ஆரம்பத்திற்கு முன்னர் நிகழவேண்டிய சம்பி ரதாய சடங்குகளில் கலந்து கொண்டு சுப்ரீம் கோட்டு இராசாவுக்கு கட்டளை வழங்க வேண் டிய கடமை அரசாங்க அதிபருடையது. அர சாங்க அதிபர் சுப்ரீம் கோட்டிற்குச் செல்வதற்கு ஆயத்தமானார். அவரை ஏற்றி வந்த மோட் டார் வண்டியை வழிமறித்து நின்றனர் தொண் டர்கள். நிலை மையைக் கண்காணிக்க முன் ஏற்பாடாக அங்குவந்து காத்திருந்த பொலி சார் குண்டாந் தடிகளால் தொண்டர்களைத் தாக்க ஆரம்பித்தார்கள். மறியல் போராட் டத்தை வேடிக்கை பார்ப்பதற்காக அங்கு குழுமி நின்ற மக்களும் உடனடியாக போராட் டத் தில் குதித்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க...)



யாழ்வாணன் ஈழத்துச் சிறுகதைப் படைப்பாளிகளில் மூன்றாவது சந் ததியைச் சேர்ந்தவர். கனக.செந்திநாதன் போன்ற மூத்த இலக்கிய கர்த்தாக்க ளுடன் சேர்ந்து யாழ்.இலக்கிய வட்டத்தை உருவாக்கியவர். அதன் செயலாள ராக நீண்டகாலம் பணிபுரிந்து வட்டத்தின் வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச் சிக்கும் பெரிதும் உதவியவர்.

நாகலிங்கம் சண்முகநாதன் என்ற யாழ்வாணன் யாழ்.மாநகர சபையில் பணிபுரிந்தவர். அந்தச் சபை வெளியிட்ட "சுகாதார ஒலி" என்ற சஞ்சிகையின் ஆசிரியராகப் பல வருடங்கள் பணிபுரிந்தவர்.

நல்ல, தரமான பல சிறுகதைகளைப் படைத்து தனக்கென ஒரு முத்திரை பதித்தவர் யாழ்வாணன். மனிதாபிமானக் கண் கொண்டு தாம் பார்த்தவற்றை, சமூகக் கொடுமைகளை உணர்ந்தவாறு கதைகளை எழுதியவர்.

தொழிலாளர் வர்க்கத்தினருக்குக் குரல் கொடுப்பதை தமது கருப்பொருளாக்கிப் பல சிறுகதை களைப் புனைந்தவர்.

சுதந்திரன், ஈழநாடு உட்படப் பல முன்னணிப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் அவரது சிறுகதைகள் வெளியாகின. தமது சிறுகதைகள் பலவற்றுக்கு பரிசில்களையும் அவர் பெற்றிருக்கிறார்.

ஈழத்துச் சிறுகதை இலக்கியத்துக்கு யாழ்வாணன் நல்கிய பங்களிப்பைக் கௌரவிக்கும் வகை யில், யாழ்.இலக்கிய வட்டம் இவரது 12 சிறுகதைகளை உள்ளடக்கி "அமரத்துவம்" என்ற தொகு தியை வெளியிட்டது.

யாழ்வாணன் இளம் எழுத்தாளர்களை தட்டிக் கொடுக்கும் சுபாவம் உள்ளவர். இலக்கிய கர்த்தாக் களுடன் இனிமையாகப் பழகுபவர். எப்போதும் அவர் முகத்தில் புன்முறுவல் மலர்ந்திருக்கும்.

பின்னாளில் புலம்பெயர்ந்து தமிழ் நாட்டில் வாழ்ந்தார். அமரராகிவிட்டார்.

சுதந்திரன் பத்திரிகையில் 1963ஆம் ஆண்டில் வெளியான 'செல்வம் நீ தியாகி' என்ற சிறுகதை இம்முறை உதயன் ஞாயிறு இதழின் இலக்கியப்பொழிலை அலங்கரிக்கிறது.

## சுவாமி விவேகானந்தரின் யாழ்.விஜயம் வீண்போக வாய்ப்பில்லை



பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி அதிகாலையில் மகா சமாதி அடைந்தார். இவருடன் நெருங்கி இருந்த 16 நேர் சீடர்கள் பெரும் துன்பத்தில் ஆழ்ந்திருந்தனர். சில நேரடிச் சீடர்கள் தங்கள் இல்லங்களுக்கு சென்றனர். இத்தருணத்தில்தான் சுரேந்திரமித்ரா தான் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து இவர்களை வாழும்படி கேட்டுக்கொண்டார். இந்தச் சுரேந்திரர் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தக்கினேசுவரத்தில் வாழ்ந்த பொழுது மாதம் ரூபா 10 வழங்கினார். பக்தர்களின் நலன் கருதி தலையணை, படுக்கை விரிப்புக்கள் வழங்கினார். 1881 ஆம் ஆண்டில் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பிறந்த நாளைக் கொண்டாட ஒழுங்கு செய்தார். குரு தேவர் புற்று நோய்க்கு கல்கத்தாவில் உள்ள காசிப்பூர் தோட்டத்தில் சிகிச்சை பெறுவதற்காக ஒரு வாடகை வீட்டில் அமர்த் தப்பட்டார். அங்கு இந்தப் பக்தர் தனது பங்கினை அளித்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மறைவுக்குப் பின் வராநகரில் மடம் ஸ்தாபிக்கவும் அதற் கான செலவுகளையும் வழங்கினார். சுவாமி விவேகானந்தர் அவரது பக்தியையும் தாராளமான மனத்தையும் பற்றி சீடர்களுக்கு கூறியுள்ளார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மறைவுக்குப் பின் சுவாமி விவேகானந்தர் பாரதம் முழுவதும் இமயம் தொட்டு கன்னியாகுமரி வரை கால்நடையாகச் சென்று இந்திய மக்களின் வாழ்க்கை முறையை யும் வறுமையையும் நேரில் கண்டார். கன்னியாகுமரியில் கடல் நடுவில் உள்ள பாறையில் அமர்ந்து மூன்று பகல் மூன்று இரவுகள் தியானம் செய்தார். அவர் மனக்கண் முன் இந்தியாவின் முன்னைய கீர்த்தி, தற்சமயம் உள்ள தாழ்வுற்றநிலை, எதிர்காலத்தில் உயர்ந்த நிலையை எட்டும் யாவும் நாம் ஒரு திரையில் பார்ப்பது போலக் கண்டார்.

ஆகவேதான் அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் நடைபெற்ற சர்வமத மகாசபையில் பங்கு கொண்டு தாய்நாடுதிரும்பியதும் ராமகிருஷ்ண சங்கத்தை 1897 ஆம் ஆண்டு மே மாதம் 01ஆம் திகதி நிறுவினார்.

இன்று உலகமெங்கும் இந்த ஸ்தாபனம் மூலைமுடுக்கெல்லாம் கொடிகட்டிப் பறக்கின்றது. இங்கு யாழ்ப்பாணத்தில் 1926 ஆம் ஆண்டு சுவாமி விபுலானந்தரால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம் மூன்று மாதங்களுக்கு மேல் நிலைத்திருக்க முடியாமல் போனது நமது துர்ப்பாக்கியமே.

ராமகிருஷ்ண சங்கத்தின் வளர்ச்சிக்கு மூல காரணமாக விளங்குபவை ராமகிருஷ்ணர் விட்டுச் சென்ற பொக்கிஷங்கள். அவற்றில் ஆழ்ந்த பக்தியும் நம்பிக்கையும் ஈடுபாடும் அவசியம். ராமகிருஷ்ண பக் தர் முக்கியமாக படிக்க வேண்டிய நூல் "ராமகிருஷ்ண சங்கத்தின் வரலாறு" இந் நூல் சுவாமி விவேகா னந்தரின் அபிலாசையும் நிறைவும் உள்ளடங்கிய ஓர் அற்புதப் பொக்கிஷம். சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து தம் திருவடி பதித்தமை வீண்போக வாய்ப்பில்லை.★★★★★

- சுவாமி சித்ருபானந்தா

## அவமானச் சின்னம்

நாலூரும் புகழ்பெற்ற சோதிடனின்
ஆலோசனை பெற்று,
அத்திவாரம் வெட்டி
கோள்நிலை பார்த்து
நாள்நிலை நிமிர்த்தி
நால்வகை வேலைக்கும்
நல்லநாள் தேர்ந்து
நாலு தலைமுறைகள்
வாழுமென நம்பி
ஏழூரும் மெச்ச
எழுப்பிய மாளிகை!

ஓடிழந்து, மரம்முறிந்து, சுவரிடிந்து
பூவிழந்த பெண் போல
தோற்றுதற்கு காரணம் யார்?

தானிறந்த பின்னாலே
யாருக்குச் சொந்தமென
ஆவணத்தில் தருமுன்னே- இதற்குரியோன்
காலன் வசப்பட, வாரிசுகள் வழக்கிட
வருடக்கணக்கில் கோப்புக்கள் துயில் கொள்ள,
தீர்ப்புக்காய் காத்திருக்கும் ஓரிரத்த வாரிசுகள்
தீண்ட முடியாத தீட்டான அவ்வீட்டின்
கள்வர்கள் கைவரிசை காட்டிய மீதிகள்
கறையான்கள் பதம்பார்க்க
உறவுக்கோர் அவமானச் சின்னமாய்
நிலைபெற்று நிற்கும் இடிபாடு.

புத்தூர் வே. இளையதம்பி

# தந்தை பாடிப் பூர்த்தி செய்யாத கவிதையை எழுதிமுடித்த மகன் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

## கவிதை ஒன்று கவிஞர்கள் இருவர் என்ற வழக்கின் சிறப்பு

தமிழ் இலக்கியப் பரப்பிலே பாதிபாதி யாக அல்லது பகுதி பகுதியாகப் பாடப் பட்ட பல பாடல்கள் இலை மறை காய்கள் போல ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. "கவிதை ஒன்று கவிஞர்கள் இருவர்" என்ற தலைப்பிலே இவ்வாறு சிதறிக்கிடக்கின்ற பாடல்களை ஒன்று சேர்த்து நோக்கும் போது அதில் உள்ள சுவையே சுவை! தனிப் பாடல்களாக விளங்குகின்ற இக்கவிதைகள், பல்வேறு வரலாற்றுப் பின்னணிகளையும் கொண்டு விளங்குகின்றன. குறிப்பிட்ட அச் சூழ்நிலைகளில் புலவனின் சிந்தனைத் திற னையும் உளப்போக்கினையும் கவியாற்ற லையும் அவை படம்பிடித்துக் காட்டுகின்றன. இத்தகைய பாடல்களைப் பற்றிய சிந்தனை எழும்போது, ஒருவர் ஒரு பாடலின் முதல் இரண்டு அடிகளைப்பாட, மற்றவர் அப்பா டலின் மற்றைய இரண்டு அடிகளையும் பாடி முடித்தலையே வழக்கமாகக் கொண்டு இணைந்தே வாழ்ந்த குருடரும் முடவருமான இரட்டைப் புலவர்களின் எண்ணமே எல் லோர் மனங்களிலேயும் எழும்.

எமது ஈழத் திருநாட்டைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்து நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சின் னத்தம்பிப் 'புலவரின் வாழ்க்கையில் இத் தகைய இரசனை மிக்க சம்பவம் நிகழ்ந் துள்ளதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

### வில்லவராய முதலியாரும் சின்னத்தம்பிப் புலவரும்

வில்லவராய முதலியாரின் மைந்தரான சின்னத்தம்பி, சின்ன வயதிலே படிப்பிலே கவனஞ்செலுத்தாது, இளைஞர்களோடு விளையாடித் திரிந்தார். அந்நாளிலே ஒல்லாந் தரது அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகம் புரிந்தவரும் சிறந்த தமிழ் வித்துவானுமா கிய வில்லவராய முதலியார் மகனைக் கடுமை யாகக் கண்டித்தார். தந்தையாரின் கண்ட னத்துக்கு அஞ்சி, அவரில்லாத சமயம் வந்து தாயாரிடம் உணவருந்திவிட்டுச் செல்வது சின்னத்தம்பியாரின் வழக்கம். வில்லவராய முதலியார் ஒரு நாள் கல்வளை என்ற தலத்தில் எழுந்தருளிய விநாயகப் பெருமான் மீது, ஒரு அந்தாதி பாட எண்ணி,

"தார்கொண்ட பூமல் லிகைச் சேக்கை யிற்றும்பி சாலப்பம்பும்
சீர்கொண்ட கல்வளை அந்தாதி [illegible]"

என்ற இரண்டு அடிகளையும் [illegible]

அப்பால் பாட்டு ஓடாமையால், ஏட்டையும் எழுத்தாணியையும் இறப்பிற் சொருகி விட்டு வெளியே உலாவப் போய்விட்டார். சமயம் பார்த்து உணவு அருந்த வந்த சின்னத்தம்பி யார் இதைப்பார்த்து விட்டு,

"பார்கொண்ட பல்லுயிர்க் காணந்த மும்மதம் பாயுங்கும்பக
கார்கொண்ட கம்பக் களியானை முன்னின்று காப்பதுவே"

எனப் பின்னிரு அடிகளையும் எழுதி விட்டு, முன்னிருந்த இடத்திலேயே ஏட்டையும் எழுத் தாணியையும் வைத்துவிட்டுப் போய்விட் டார். உலாவப் போன முதலியார் மற்றைய

★ தனங்கிளப்பு வ.சின்னப்பா ★

இரண்டு அடிகளையும் மனத்துள் ஆயத் தஞ் செய்துகொண்டு, மீண்டும் வந்து ஏட்டை எடுத்துப் பார்த்த போது, தாம் நினைத்துக் கொண்டு வந்த அடிகளிலும் பார்க்க, பூர்த்தி செய்யப்பட்டிருந்த அடிகள் மிக நேர்த்தி யாக இருந்தமையைக் கண்டு மனைவி யாரை விசாரித்தார். மனைவியார் மகனே அங்கு வந்தான் என்று சொல்ல, முதலியார் பேரானந்தமடைந்து மகனை வாழ்த்தி, சின் னத்தம்பிப் புலவரையே அவ்வந்தாதியைப் பாடி முடிக்கும்படி வேண்டினாராம். அதுவே கல்வளை அந்தாதி. இக்கதைக்குறிப்பு (குறிப் பிட்ட செய்யுள் இன்றி) பண்டிதமணி சி.கண பதிப்பிள்ளை அவர்களின் 'இலக்கியவழி' என்ற நூலில் உள்ளது.

### ஒட்டக் கூத்தரும் குலோத்துங்க சோழனும்

குலோத்துங்க சோழனின் தமிழ் ஆசா னாக விளங்கிய ஒட்டக்கூத்தர், மன்னனது அவைக்களப் புலவராகவும் விளங்கினார். தனது ஆசானாகையால் புலவரிடத்தில் மன்னன் மிகுந்த மதிப்பு வைத்திருந்தான். ஒவ்வொரு நாளும் அரசசபை கூடும் போது, கூத்தர் மன்னனை வாழ்த்தி ஒவ்வொரு கவிதை சொல்லுவார். இப்படி நித்தநவம் பாடும் தனது அவைக்களப் புலவரும் ஆசானுமாகிய கூத்தரைப் பற்றி, தானும், ஒரு நாளைக்கேனும் ஒரு பாடல் பாடிவிட வேண்டும் என்று வேணவா கொண்டிருந் தான் மன்னன். ஒரு நாள் சபை கூடிய போது வழக்கம் போல ஒட்டக்கூத்தர் எழுந்து நின்று, மன்னன் நாட்டைக் குறையின்றி அரசோச்சுகிறான் என வாழ்த்தும் விதத்தில், "ஆடுங் கடைமணி நாவசை யாமல் அகிலமெல்லாம் நீடுங் குடையில் தரித்த பிரான்" - என்று சற்றே தாமதித்தார்.

(12 பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிகளின் தரத்தில் நம்பகத்தன்மையை உறுதிசெய்த பின்னர் கட்டணத்தைச் செலுத்துவதே புத்திசாலித்தனம்

**இந்தக் கட்டுரையின் நோக்கம் இந்தியாவில் (குறிப்பாகத் தமிழ் நாட்டில்) உயர்கல்வி பற்றிய அடிப்படை அறிவினையும் ஒரு சமுதாய விழிப்புணர்வை மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் ஏற்படுத்துவதுமாகும். இதன் இரண்டாவதுபகுதி கடந்த ஞாயிற்றுக் கிழமை உதயனில் வெளியாகியிருந்தது.**

இலங்கையில் உள்ள ஒரு மாணவன் தமிழ் நாட்டில் இருக்கும் கல்லூரிகளில் தனக்குப் பொருத்தமானதைத் தெரிவு செய்வதற்கு இரண்டு நடைமுறைகள் உள்ளன. முதலாவது நேரடியாகக் கல்லூரி தேடும் விஸாவுடன் தமிழ் நாட்டிற்குச் சென்று கல்லூரியைத் தெரிவு செய்து அனுமதியைப் பெற்று வந்து பின்னர் மாணவர் விஸா எடுப்பது, இது மாணவனுக்குத் திருப்தி தரக்கூடியதாக இருந்தாலும் - பொருள் செலவு - கால விரயம் - அலைச்சல் என்பவற்றுடன் எல்லோராலும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் இயலாததாகின்றது.

இரண்டாவது இலங்கை யிலுள்ள இந்தியக் கல்லூரிகளினால் அனு மதிக்கப்பட்ட

## 'கல்வி நலன் நாடி'

ஆலோசகர்களின் (Educational Consultancy) உதவியை நாடுதல். இவர்கள் கல்லூரிகளுக்கான ஒரு பாலமாகச் செயற்படுகின்றனர்.

இதில் நன்மைகளாக

1. நேரம் சிக்கனப்படுத்தப்படுகிறது.
2. குறிப்பிட்ட மாணவன் தனது பெற்றோருடன் குறித்த ஆலோசகரிடம் நேரடியாகக் கதைத்து இது பற்றிய தெளிவான அறிவைப் பெற்றுக்கொண்டு தீர்மானம் எடுக்கலாம்.
3. இங்கு இருந்தபடியே கல்லூரியைத் தெரிவு செய்யும் வசதி
4. தெரிவின் பின் இந்தியா செல்லாது இங்கேயே அனுமதிக்கப்பட்ட ஆலோசகரிடம் கல்லூரி அனுமதியைப் பெறும் வசதி (Spot Admission).

ஆனாலும் இதில் அவதானம் மிகவும் அவசியம். இவர்கள் உடனேயே அனுமதியை பெற்றிருந்தாலும் கல்லூரிகளின் தரத்தில் நம்பகத்தன்மை மிக அவசியம். இதை நாம் மேலே குறிப்பிட்ட எளிய நடை முறைகளை பரிசோதித்துவிட்டு அனுமதி பெறுவதற்கான கட்டணம் செலுத்துவது புத்திசாலித்தனமானது.

மேலும் அனுமதிக்குப் பெறப்படும் பணம் அவர்களால் எச்சந்தர்ப்பத்திலும் மீளளிக்கப்படுவதில்லை. அத்தோடு கல்லூரிக்கான கல்விக்கட்டணத்தினை அதாவது முதல் தொகுதியாகிய அனுமதிக் கட்டணம் கல்விக்கட்டணங்களைத்தவிர ஏனையவற்றை அவர்கள் மூலமாகக் கட்டுவது புத்திசாலித்தனமல்ல.

அதை வங்கி ஆணை (Demand Draft) மூலம் கல்லூரியின் பெயரில் அனுப்புவது பாதுகாப்பானதும் நம்பகத் தன்மையானது மாகும்.

ஆலோசகர்களை மட்டும் நம்பாமல் நேரடியாக கல்லூரி இணையத்தளத்தில் தேடியும், நேரடித் தொலைபேசித் தொடர்புகள் மூலம் கல்லூரியில் உள்ள அனுமதி அதிகாரியுடன் பேசுவதன் மூலமும் வீண் பணவிரயங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

எல்லா ஆலோசகர்களும் ஒரே மாதிரியான குணாதிசயங்களைக் கொண்டிருக்க மாட்டார்கள். சிலர் சேவை நோக்கோடு செய்யும் போது சிலர் வியாபாரமாகப் பார்ப்பார்கள். சில கல்லூரிகள் வழங்கும் அதிக தரகுப் பணத்திற்காக மாணவர்களிடம் பல உண் மைகள் மறைக்கப்படுகின்றன.

பொருள் வியாபாரம் போன்றே இங்கே கல்வி வியாபாரத்திற்கான செயற்பாடுகளும் அதிகமாக உள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

உதாரணமாக அதிக கட்டணத்தைக் கூறி அதில் புலமைப்பரிசில் தருவதாகத் திட்டங் களை அறிவித்து ஒரு மாயையை உருவாக்கி மாணவர் மத்தியில் ஒரு பரபரப்பைத் தெளித்து அதிக எண்ணிகையிலான மாணவர்களை கல்வித்தரம் குறைந்த கல்லூரிகளுக்குச் சேர்த்துக் கொள்ளுதல்.

ஒரே பாடத்திற்கான அனுமதிக்கட்டணம், கல்விக்கட்டணம், போதிய அறிவின்மை என்பவற்றைப் பயன்படுத்தி வேறு வேறு விதமாக வேறுவேறு மாணவர்களிடம் வசூலித்தல்.

குறிப்பிட்ட சில ஆலோசகர்கள் மக்களிடம் பிரபலம் பெற்ற நிறுவனங்களின் பெயரினை வைத்து அவர்களின் நன்மதிப்பினை தமக்கு சாதகமாகப் பயன்படுத்துதல். இதில் வேதனையான விடயம் என்னவென்றால் அவர்கள் ஒருதடவை கூட கல்லூரிக்கு நேரில் சென்றிருக்க மாட்டார்கள். இவற்றிலிருந்து தப்பிக்க வேண்டுமெனில், அனுமதிக்கட்டணம் போன்றவை தவிர்ந்த ஏனைய கட்டணங்களை வங்கிகள் மூலம் நேரடியாகக் கல்லூரிக்குச் செலுத்துதல் பாதுகாப்பானது.

ஆலோசனைக்குச் சென்ற உடனேயே அவர்களிடம் அனுமதிக் கட்டணம் செலுத்தாமல் ஏற்கனவே அக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் தொடர்பினை ஆலோசகர்களிடமே பெற்று அம் மாணவர்களிடம் ஆலோசித்த பின்னர் அனுமதி பெறுதல் புத்திசாலித்தனமானது.

### அனுமதி நடைமுறை

மாணவர் இந்தியாவில் உயர்கல்வி பயில விரும்பின் ஒரு கல்லூரியிடம் அனுமதி பெற்று மாணவர் விசா எடுப்பதற்கான படி முறைகள்:-

**தேவையான ஆவணங்கள்:**

ஜி.சீ.ஈ. சாதாரணதரம், உயர்தரம் சித்தியடைந்தமைக்கான சான்றிதழ்கள் கல்வியமைச்சிடமிருந்து பெற வேண்டும்.

- பாடசாலை விடுகைப்பத்திரம்
- கிராமஅலுவலர், பாடசாலை அதிபர் ஆகியோரின் நற்சான்றிதழ்.
- பிறப்புச்சான்றிதழ்.
- அடையாளஅட்டை
- கடவுச்சீட்டு
- கடவுச்சீட்டுக்கு உபயோகிக்கும் புகைப்படம்.

இந்த ஆவணங்கள் கையில் கிடைத்த

## இந்தியக் கல்லூரிகளினால் அனுமதிக்கப்பட்ட ஆலோசகர்களின் உதவியை நாடுதல் நல்லது

வுடன் ஆலோசகர்களை அணுகலாம்.

இவற்றைப் பரிசோதித்த பின்னர் பிறகு அவர் அனுமதி தருவார். அதன்போது அனுமதிக் கட்டணம் போன்றவை செலுத்துதல் அவசியம். ஆனால் முழுக்காலத்துக்குமான கல்விக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை. இப்போது ஏனைய ஆவணங்களுடன் ஆலோசகர் கீழ்வரும் ஆவணங்களைத் தருவார்.

1. கல்லூரிக்கட்டண விவரம்
2. அனுமதி உறுப்படுத்திய பத்திரம் (Selection intimation letter)
3. வங்கி ஆணை எடுப்பதற்கான கல்லூரியின் கடிதம்.
4. மாணவர் விஸா எடுப்பதற்கான கல்லூரியின் கடிதம்.

ஏனைய ஆவணங்களுடன் கல்லூரிக் கட்டண விவரத்தை வங்கியில் காட்டிப் பணத்தைச் செலுத்திக் கட்டணத்தை வங்கி ஆணையாக மாற்ற வேண்டும். கல்லூரியின் பெயருக்கு முகவரியிடப்பட வேண்டும். (இவை மத்திய வங்கியின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக )

இறுதியாக எல்லா ஆவணங்களும், வங்கி ஆணையும் கொண்டு தூதரகத்தில் மாணவர் விஸாவைப் பெற்றுக் கொள்ளலாம்.

**பொதுவான கல்லூரிக் கட்டணங்கள்**

1. Engineering- 2500$ to 3000$ (4Years) per year
2. Arts,science&Commerce-20,000=Indian Rupees (3Years) per Year
3. MBA - 2500$ to 3000$ (2Years) per year

*(முற்றும்)*

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 16

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| ■ | 12 | | ■ | 13 | | | |
| 14 | | ■ | 15 | | | ■ | |
| | ■ | 16 | | | ■ | 17 | |
| 18 | 19 | | | ■ | 20 | | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:......................................

விலாசம்:......................................

......................................

கையொப்பம்:......................................

**இடமிருந்து வலம்**

1. பெரியோர் வழங்கும் வாழ்த்து.
6. நீர் கொண்ட மேகம்.
7. சிறிய பொதி.
8. இலக்கம்.
9. ஒரு பருப்பு வகை.
11. பாடல்/கவிதை.
12. முனிவர்.
13. பகிடி
14. எலும்புகளை அசைய வைப்பது.
15. சமயம்
16. வருத்தமின்மை.
17. இல்லாமல் செய்.
18. கடவுள்.
20. கழுகு அரசன்/ இராமாயண பாத்திரம்.
21. சிதம்பரம்.
22. வாழ்க்கை வரலாறு.

**மேலிருந்து கீழ்**

1. கூடாது.
2. திருமணமாகும் பெண்ணுக்கு வீட்டார் வழங்குவது.
3. மணம்.
4. பூமி/ நிலம்
5. நமது வீதிகள் பல இப்படித்தான் காட்சியளிக்கின்றன.
8. தூரமாக.
10. கண்டும் கேட்டும் அனுபவி.
11. பகுதி.
13. வகை.
14. கணவன் - மனைவி.
15. புத்திரன்.
16. தீயின்வடிவம்/ கொழுந்து.
17. தகாத.
19. மண்ணுக்கு முந்தியது/ படி.
20. பிழை அல்ல.

### போட்டி விதிகள்

1. *வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
2. *ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
3. *உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
4. *போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
5. *வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*

*அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*

6. *பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 16**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (09.07.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.*

7. *சொற்சிலம்பம் போட்டி இல. 16 இல் வெற்றிபெற்றோர் விவரம் 13.07.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 14 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

**இடமிருந்து வலம்**

(1) அசம்பாவிதம். (6) கனி. (7)மதம். (9) கரம். (10) அரி. (11) பாவலன். (13)தாம்பு. (15) தும்பி. (16)பசளை. (18) காவ. (20) நகம். (21)மிதமிஞ்சிய/ மிகுதியான. (22) கொடும்பாவி. (23) திசை.

**மேலிருந்து கீழ்**

(1)அகம்பாவம். (2)சனி. (3)பாமரன். (4)விதம். (5)தம்(பி) (8)திரிபு. (9) கலம்பகம். (10)அம்பிகாபதி. (12) வட. (13) தாம். (15) துளை. (17)சம்பா. (19) வரிசை. (20) நடு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 14 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு** — க.சுதாகரன், *'பொன்னகம்' பிளாக் வீதி, சங்கானை.*

**2 ஆம் பரிசு** — வை.தர்மராசதுரை, *மணல் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.*

**3 ஆம் பரிசு** — சி.நளினி, *இல.237, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

(1) **மா.மகாலிங்கம்**
'லிங்கவாசா', [illegible] மேற்கு, கைதடி.

(2) **பா.கார்த்திகா**
கூட்டுறவுப் பொது நூலகம், நெல்லியடி, கரவெட்டி.

(3) **திருமதி றஞ்சிதா நவரட்ணவேல்**
இல.37, ஓடை ஒழுங்கை, வண்ணார் பண்ணை.

(4) [illegible]
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

(5) **சி.யோகராசா**
இல.27/9 புதிய வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.வின் உண்மையான செயற்பாடுகள் பொதுமக்களுக்குத் தெரிவதில்லை

ஐ.நா.சபை 192 நாடுகளின் தாய் வீடாக இருந்த போதிலும் அதனை 'பேச்சு பெட்டி' என்று சிலர் குறை கூறுகிறார்கள். அங்கு ஒரு பிரச்சினையும் முடிவில்லாமல் விவாதிக்கும் அளவுக்கு மிக சிறிதாக இருப்பதில்லை என்று கூறப்படுகின்றது.

ஆனால் உண்மையாக யதார்த்தபூர்வமான ஐ.நா.சபையானது செயல்மயமானது. அது பொதுமக்களின் கண்களுக்குத் தெரிவதாய் இல்லை என்று தான் கூற வேண்டும்.

இந்த ஐ.நா. அமைப்பு 70 நாடுகளில் பட்டினிக்கு பஞ்சத்துக்குமிடையில் தவிக்கும் 90 மில்லியன் மக்களுக்கு உணவளிக்கிறது. பெரியம்மை, போலியோ போன்ற குரூரமான நோய்களை ஒழித்து வருகின்றது. உலகின் 40 வீத சிறுவர்களுக்கு அம்மைத் தடுப்பு மருந்து குத்துகிறது. அனர்த்த அவசிய சேவைகளுக்கென வருடந்தோறும் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குகிறது. உலக அமைதி காப்பதற்கென 120,000 ரூபா கொண்ட இரண்டாவது அமைதி காக்கும் படையை நிர்வகித்து வருகின்றது. ஏனையவர்கள் செல்ல முடியாத அல்லது விரும்பாத இடங்களுக்குச் சென்று இவர்கள் பணியாற்றுவார்கள்.

உலகின் பல பாகங்களிலும் கடுமை

## வெறும் 'பேச்சுபெட்டி' என வர்ணிப்பதில் அர்த்தமில்லை

யான இடங்களுக்கு செல்ல நேரும்போதெல்லாம் நான் இந்த உண்மைகளுக்கும் நிலைமைகளுக்கும் பின்னால் செயற்படுகின்றவர்களின் முகங்களைப் பார்க்க முயற்சி செய்திருக்கிறேன்.

வியோமிங் என்ற இடத்தில் ஒரு திரைப்பட விழாவில் அவர்களில் சிலரை நான் ஹோலிவூட் எழுத்தளர்களுக்கும் இயக்குநர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தேன். ஐ.நா. பற்றி அறிந்து கொள்ள இவர்கள் அதிகம் ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

**சிறுவர்களை விடுவிக்கும் பணிகள்**

இவர்களில் ஒருவர் யுனிசெவ்வைச் சேர்ந்த கனேடிய இளம்பெண் அவார். உலகம் முழுவதுமான சிறுவர்களின் உரிமைகள் நலசேமங்கள், மற்றும் பாதுகாப்புக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள நிறுவனமாகும் இது. இந்தப் பெண்ணின் பெயர் பேர்மில்லி இரோன்சைட் என்பதாகும். இவரது பணியானது ஒரு சிறு குழுவினருடன் தனிமையாக கொங்கோ குடியரசின் கிழக்குப்பகுதி காடுகளுக்குள் சென்று அங்கு செயற்படும் போராளித் தலைவர்களை நேரில் கண்டு சிறுவர் போராளிகளை விடுவிக்கும்படி கேட்டுக்கொள்வதாகும். இந்தப் போராளிக்குழுக்களில் 8 அல் லது 10 வயது பையன்களும் சிலசமயம் சிறு மிகளும் கூட இருக்கிறார்கள். இந்த நாட் டில் நெடுங்காலமாக இடம்பெற்று வரும் கெரில்லா போர்களில் ஈடுபடுவதற்காக இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் அல்லது கடத்தப்படுகிறார்கள். பெரும்பாலும் இல்லாவிட்டாலும் சில சமயம் இந்த பெண் தன்பணியில் வெற்றியும் அடைகிறார்.

கடந்த சில ஆண்டுகளில் அப்படியாக கணிக்கப்பட்டுள்ள 35 ஆயிரம் சிறவர்களில் 32 ஆயிரம் சிறுவர்களை ஐ.நா. பணியாளர்களால் விடுவிக்க முடிந்துள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் ஏனையவர்களையும் விடுவித்து விட முடியும் என்று பேர்மில்லே நம்புகிறார்.

இன்னொருவர் ஐ.நா.ஆயுதக்கடத்தல்களைக் கண்டுபிடிக்கும் நிபுணரான காதி ஆஸ்ரன் என்ற பெண் ஆவார். கொங்கொ குடியரசிலும் அதுபோன்றுஆபிரிக்காவில் மோதல்கள் இடம்பெறும் நாடுகளிலும் சட்டவிரோத ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டுள்ளவர்களைக் கண்டுபிடிப்பது இவரது பணியாகும்,

இவரது விடாமுயற்சியால் உலகின் மிகப்பெரிய ஆயுதக்கடத்தல் வலைப்பின்னல் அமைப்பின் தலைவர் என்று நம்பப்படும் விக்ரர் பவுட் என்பவர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

**சிறுவர் போராளி சட்டத்தரணியாக மாறினார்**

யுனிசெவ்வின் (UNICEF) சிறுவர்களுக்கான சட்டவல்லுநர் இஸ்மாயில் போரினால் பாதிக்கப்பட்ட இவர் தாம் சிறு வயதில் போராளியாக இருந்த அனுபவ வாழ்க்கையை விவரித்தார். சியராலியோனில் பத்துவருட கால போரின்போது இவர் சிறுவர் போராளியாக இருந்துள்ளார். ஐ.நா. புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் இவர் விடுவிக்கப்பட்டு, அமெரிக்கா சென்று ஒபர்வின் கல்லூரியில் சேர்ந்து படித்தார். இவர் தனது அனுபவம் தொடர்பாக எழுதிய புத்தகம் சிறப்பாக விலை போயிற்று.

**தன்னலமற்ற அர்ப்பணிப்பான பணிகள்**

என் தொழில் தொடர்பில் இந்த யதார்த்தமான ஐ.நா.வின் இன்னும் பல்வேறு பணியாளர்களை நான் சந்திக்க நேர்கின்றது. இவர்கள் அதிகம் பிரபல்யமற்றவர்களாய் இருக்கலாம் ஆனால் தன்னலமற்ற தன்மையிலும் அர்ப்பணிப்பிலும் குறைத்து எடைபோட முடியாதவர்கள். உண்மையில் எங்களது மிகமுக்கிய பணிகள் பெரும்பாலும் வெளிப்படையாகத் தெரிவதில்லை. இந்த வசந்த காலத்தில் மேற்கு ஆபிரிக்காவுக்கு சென்றிருந்தபோது லைபீரியாவில் பணியாற்றும் ஐ.நா. பணியாளர் குழுவைச் சந்தித்தேன். பலவருட போரின் பின்னர் மக்களுக்கு அடிப்படை வசதிகளைஏற்படுத்த முயன்று கொண்டிருக்கும் அரசுக்கு உதவி புரிய பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் இவர்கள். மின்சாரம், தண்ணீர், சுகாதாரம், பாடசாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கோட்டே டி ஐ வொயரில் (cote d Ivoire) அந்த நாட்டின் அரசுக்கு உதவுவதில் ஈடுபட்டுள்ள ஐ.நா. ஆலோசகர்களை சந்தித்தேன்.

மோதல்களினால் சிதறுண்டு போயுள்ள அந்த நாட்டின் தேர்தல்களை நடத்தவும் உண்மையான - நிலையான ஜனநாயகத்தைக் கொண்டுவரவும் அவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

நான் சிலசமயங்களில் யோசிப்பதுண்டு. யுத்தத்தால் அழிவுற்ற ஒரு கொரிய கிராமத்து பையனாக வளர்ந்த நான், எனது குடும்பத்துக்கான அடுத்த வேளை உணவை எங்கிருந்து கிடைக்குமென்று தெரியாதிருந்த நான் ஒரு நாள் இந்த அதி உன்னத உயர் பணியில் ஓர் பங்காளியாக எவ்வாறு வர முடிந்தது என்பது பற்றி -

**பேச்சினால் கிடைக்கும் நன்மைகள்**

ஐ.நா.வின் 'பேச்சுப் பெட்டி' என்று அடைமொழியிடப்படும் தலைமைக் காரியாலயம் பற்றி கூறுவதானால், பேச்சும் கூட சில சமயம் சாதனைகள் புரியக்கூடும் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

18 நாடுகளின் ஐ.நா.அமைதி காப்பாளர் பேச்சுக்களில் தான் ஈடுபட்டு வருகின்றார்கள். பேச்சு மூலம் தான் பணம் சேர்க்க முடியும். பேச்சு மூலம் தான் உலகின் பட்டினியால் வாடும்மக்களுக்கு உணவிட முடியும்.



சொல்பவர் செயலாளர் நாயகம் பான்கி - மூன்

பேச்சு மூலம் தான் உலகின் காலநிலை மாற்றம் தொடர்பாக செயற்பாட்டின் முதல் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பேச்சின் மூலம் தான் உலக உணவுப்பிரச்சினை, மற்றும் மனிதஉரிமை பிரச்சினை முதலிய விடயங்களில் முதல்கட்ட நடவடிக்கை எடுக்க முடிந்துள்ளது.

சந்திப்புகளை ஏற்படுத்தும் ஐ.நா.வின் சக்திதான் உலகத்தில் உள்ள இறுதியான 'மென்சக்தி' என்று கூறலாம்.

*- (தமிழில்: சிபெரு)*

# இறை நினைவோடு மனச்சஞ்சலம் நீங்கி இசையின் பிடியில் வசமாகிய பக்தர்களுக்கு

## அன்பே கடவுள் என்ற மெய்யுணர்வு தந்த ஆனந்த நிகழ்வு

''அன்பே கடவுள்''- இந்த இறைமந்திரம் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற சர்வமத இசை நிகழ்வில் கூடியிருந்த எல்லோரது நாடி நாளங்களிலும் பரவிப்பாய்ந்தது. முழு நிறைவான ஆத்ம திருப்தியை அங்கிருந்தவர்களின் வதனங்களில் பார்த்துணரக் கூடியதாக இருந்தது.



அதனை விடவும் வேறு எதனாலும் முடியாத விடயங்கள் ''அன்பே கடவுள்'' என்ற திருவாக்கால் முடியும் என இதமான செய்தியொன்று அங்கு இசை மூலம் விடுக்கப்பட்டது.

வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வமத இசை நிகழ்ச்சி கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. சர்வ மத குருமார்கள், பெரியார்கள் மங்கல விளக்கேற்றி, உரையாற்றி நிகழ்வைச் சிறப்பித்தனர்.

இசை நிகழ்ச்சியில் பாடல்கள் வரிசைப் படுத்திய விதம் சிறப்பானது. பாடல்களைப் பாடிய அனைவருமே பாடல்களை நன்றாக உணர்ந்து, அனுபவித்துப் இசைத்தனர். அவர்களில், நிகழ்வின் இறுதியில் பாடிய சிறுவனொருவன் பாவ நளினங்களோடு மேடை நாகரீகத்திற்கு கட்டுப்பட்டு தனது ஆற்றலை சிறப்பாக வெளிப்படுத்தினான். இசைத்துறையில் அச்சிறுவனுக்கு சிறப்பான எதிர்காலம் உண்டு என பாடலை ரசித்தவர்கள் பாராட்டினார்கள்.

நிகழ்வில் 14 பாடல்கள் மட்டுமே இசைக்கப்பட்டன. முதலில் சர்வமதப் பாடலும், இறுதியில் சாயிபஜனைப் பாடலும், இடையே பலமதப் பாடல்களும் இசைக்கப்பட்டன. புத்த பெருமானைப் பற்றிய பௌத்தமதப் பாடல்கள் தமிழ் மொழியிலே கேட்பது அரிது. இருந்தும் சர்வமதப் பாடலொன்றில் புத்தபெருமானின் பெருமைகளையும் பாடியமை பாராட்டுக்குரியது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தோடு தொடர்பு கொண்டிருந்தால் சில வேளைகளில் பௌத்தமதப் பாடல்களை தமிழ் மொழியிலே பெறுவதற்கு வாய்ப்புண்டு. இனி வரும் காலங்களில் நடைபெறவுள்ள இசை நிகழ்வுகளில் அவற்றை சேர்த்துக் கொண்டால் சிறப்பாக இருக்கும்.

சர்வமத இசை நிகழ்விலே குறிப்பாக சில விடயங்களை அவதானிக்க முடிந்தது. யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற இசை நிகழ்வுகளில் எல்லாம் சில வேண்டத்தகாத சம்பவங்கள் நடைபெறுவதுண்டு. இந்நிகழ்வில் இவையெல்லாம் களையப்பட்டிருந்தன. அனைவருமே இறைபக்தியோடு, இறை நினைவோடு அமைதியாக கூடியிருந்து மனச் சஞ்சலம் நீக்கி, இசையின் பிடியில் வசமாகியிருந்தனர்.

**- விதுஷகி-**

நிகழ்வில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டதால் இளங்கலைஞர் மண்டபம் நிரம்பி வழிந்தது. மண்டபத்திற்கு வெளியேயும் தகரக் கொட்டகை அமைத்து இசை நிகழ்வைக் கண்டுகளிக்க இசையார்வலர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. பலர் மேடை நிகழ்வை பார்க்க முடியாமல் வெளியே நின்று இசையை மட்டும் அமைதியாகக் கேட்டு ரசித்த வண்ணம் இருந்தனர். இதற்கும் மேலாக கதிரைகளில் அமர்ந்திருந்து இசை நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருந்த சாயி பக்தர்கள் இந்நிலை உணர்ந்து தாங்கள் எழுந்து நின்று ஏனைய அன்பர்களுக்கு மனநிறைவோடு கதிரைகளில் அமர இடம் கொடுத்தமை குறிப் பிடத்தக்க சிறப்பு.



வெள்ளை உடை தரித்து நீலத் துணியை கழுத்தில் அணிந்திருந்த சாயி தொண்டர்கள் இசை நிகழ்வைக் காண வந்த அன்பர்களை, அசௌகரியங்களை எதிர்கொள்ள விடாது, தாமே சேவை வழி நடத்தி உரிய ஒழுங்குகளை செய்து கொடுத்தனர். இவர்களது சேவை மெச்சத் தக்கது.

-''ஓர் இனத்தின் சார்பிலோ அல்லது ஒரு மதத்தின் சார்பிலோ நான் பேச வரவில்லை. உலக மக்கள் அனைவரும் ஒரு கடவுளின் அன்புக் குழந்தைகள். எல்லோரும் சகோதரர்கள் எல்லோரிடத்திலும் தெய்வீகம் உள்ளுறைகின்றது. இந்த உண்மையை மறந்து வழிதவறிச் செல்கின்ற மனித இனத்தை அன்பெனும் அளப்பெரும் சக்தியால் இணைந்து வழி நடத்தவே வந்துள்ளேன்'' என்கிறார் பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாவா. எனவே அவா காட்டும் வழியில் நாம் நம்பிக்கையுடன் நடப்போம். * * * * * * * * * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வம் நீ தியாகி.....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நிலைமை கட்டுக்கடங்காது போகவே தொண்டர்களின் உடலுக்கு மேலாக வண்டியை ஏற்றிச் செல்லப் போவதாக பொலிஸ் அதிகாரி மிரட்டிப் பார்த்தார். பயனில்லை. ஈற்றில் - மக்கள் தூக்கி எறியப்பட்டார்கள். செல்வத்திற்கும் மண்டையில் பலத்த அடி. நெற்றி பிளந்து விட்டது.அவ்விடத்திலேயே மயங்கி விழுந்து விட்டான் செல்வம்.

பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான செயலால் மக்களிடையே உணர்ச்சிப் பிரவாகம் ஏற்பட்டது. சிறுவர் முதல் பெரியவர் வரை கூட்டங் கூட்டமாகக் கச்சேரி வாயில்களை முற்றுகையிட்ட வண்ணமாகவே இருந்தனர். குடாநாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் அறப்போர் மக்கள் ஊர்வலங்களை நடத்தி வந்தனர். இராணுவம் அனுப்பப்பட்டது யாழ்ப்பாணத்திற்கு.

இந்நிலையில் சத்தியாக்கிரகத்தை முறியடிக்க அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அப்பப்பா! கூப்பன் வழங்கமுடியாது என்று ஏகமனதாகக் கூறிவிட்ட வர்த்தகப் பெருமக்களிடையே பிளவையுண்டாக்க கிராமம் கிராமமாகச் சென்று அரிசியை விநியோகித்துப் பார்த்தார்கள்.

மக்கள் அப் போதும் முறையை மீறி வந்த அரிசியை வேண்டாமென்று மறுத்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் கச்சேரிக்கு முன் ஆரம்பித்த சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து, இயக்கம் வேறு பல இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது. அதன் பலன்? வடக்கு கிழக்கு மாகாணங்களிலே அரசாங்கம் செயற்பட முடியவில்லை. ஈற்றில் தமிழரசார் தபாற் சேவையை தமது போராட்டத்தின் அடுத்த கட்டமாக ஆரம்பித்தார்கள். இப்போராட்டத்தைச் சாக்காகக் கொண்டு அரசாங்கம் அவசர கால நிலைமையைப் பிரகடனம் செய்து சர்வாதிகார இராணுவ தர்பாருக்குக் கால் கோள் இட்டது.

பழைய பூங்கா வாசலிலே மறியல் செய்து நின்ற தொண்டர்களை அப்புறப்படுத்த ஆரம்பித்தது கடற்படை. தொண்டர்கள் அசைந்து கொடுக்காது தரையில் படுத்துக் கொண்டார்கள். அத்தொண்டர் வரிசையில் செல்வமும் ஒருவன். கடற்படை வீரன் ஒருவன் துப்பாக்கிச் சனியனை செல்வத்தின் நெஞ்சில் பதியும்படி அமிழ்த்தினான். செல்வமா அஞ்சுபவன்? உடனே மார்பில் தரித்திருந்த மேல் சட்டையை நெஞ்சு தெரியும் படியாக விலக்கி 'துணிவுண்டேல் சுட்டுப்போடு. அல்லது உன் ஈட்டியை இங்கே பாய்ச்சு என்று படை வீரனுக்கு சவால் விடுத்தான்.' செல்வத்தின் மன உறுதியை மெச்சிய படைவீரன் அங்கிருந்து நகர்ந்து விட்டான்.

ஆயிரத்தித் தொழாயிரத்து அறுபத்தோராம் ஆண்டுசித்திரைத் திங்கள் 17 ஆம் நாள் இரவு கச்சேரி முன்றலில் மக்கள் வழக்கம் போல் சத்தியாக்கிரகம் இருக்கிறார்கள். செல்வமும் அவர்களுடன் சேர்ந்து கொள்கிறான்.

நடுநிசி - பொலிஸ் ஜீப்கள் அடுத்தடுத்து வந்துநின்றன. ''எம்மை அரசாங்கம் விருந்தாளியாக அழைத்துள்ளது. சென்று வருகிறோம்'' என விடைபெறுகிறார்கள் தலைவர்கள். எஞ்சி நின்ற தலைவர்களுடன் செல்வமும் சேர்ந்து கொண்டான். சுமார் இரவு இரண்டு மணியிருக்கும், இராணுவ லொறிகள் கச்சேரி வளவிற்குள் சென்றன. இராணுவத்தினர் வருகிறார்கள். முதலாவதாக கச்சேரி நல்லூர் றோட்டில் நின்ற மக்கள் தாக்கப்படுகின்றனர். அதையடுத்து கச்சேரி கட்டடங்களை எதிர்த்தாற்போல் இருக்கும் தேர்தல் காரியாலயத்தின் முன் குழுமி நின்றவர்கள் நையப் புடைக்கப்பட்டனர். பின் மறியல் செய்து நின்ற தொண்டர்கள் இராணுவ வீரர்களின் மிருக வெறிக்கு இலக்காகினார்கள். துருப்பினர் தொண்டர்களை பூட்ஸ்காலால் உதைத்தார்கள். துப்பாக்கியின் பின் பக்கத்தால் இடித்தனர். செல்வமும் இரத்த வெறிகொண்டு விட்ட போர்ப்படையினரின் தாக்குதலுக்குள்ளாக நேர்ந்தது.

ஏற்கனவே தலையில் ஏற்பட்டிருந்த ஊனத்துடன், துருப்பினரின் பலத்த தாக்குதலும் சேர்ந்து கொள்ளவே செல்வம் வீழ்ந்து விட்டான். படைவீரரின் மிருகவெறி அவனது கண் ஒன்றைப் பலிவாங்கிவிட்டது.

இப்போது செல்வம் ஒற்றைக் கண்ணனாகி விட்டான். இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து முன்பெல்லாம் இலக்கிய இரசிகையாக, ஆருயிர்க் காதலியாக இருந்த மங்கை இப்போ விலகிச் செல்லத் தொடங்கினாள். இருவருக்குமிடையே இடைவெளி நீண்டு கொண்டே சென்றது.

மங்கைக்குத் திருமணப் பேச்சுத்தொடங்கியது. கண் அ[illegible]வன் - ஒற்றைக் கண்ணன் என்ற முறைய[illegible] அலட்சியப்படுத்தப்பட்டான் செல்வம். முடிவு - செல்வம் மாமன் வீட்டாருடன் கொண்டிருந்த தொடர்பை முற்றாகத் துண்டித்துக் கொண்டான்.

மங்கையிடம் இருந்து திருமண அழைப்பிதழ் வந்ததும் முதலில் மிகுந்த மனக்குழப்பத்துக்குள்ளானான் செல்வம். ஆயினும் மிருகமாக மாற முடியவில்லை அவனால். தன்னுள் மனித குணமே மேலோங்கி நிற்கக் கண்ட செல்வம் மங்கையின் பிழையைப் பொறுத்துக் கொண்டதுடன் அவளது திருமணத்திற்கும் வந்திருந்தான்.

'அறுகரிசி போடுபவர்கள் வரலாம்' என்ற ஐயரின்குரல்அவன்சிந்தனையைத்துண்டித்தது.

மண மக்களை வாழ்த்தி முடிந்ததும் - மற்றவர்கள் பரிசுப் பொருட்களைக் கொடுத்தார்கள். செல்வமும் தன்னை சுதாகரித்துக் கொண்டு ''25 லட்சம் மக்களின் தலைவர்'' ''சுயமை மயக்கம்'' ''திருக்குறள்'' ''ஈழத்து அறப்போரும் உரிமைப்போரும்''ஆகிய நூல்கள் அடங்கிய பார்சலைத் தனது அன்பளிப்பாக அளித்து அவர்களை உளமார வாழ்த்தி விட்டுத் திரும்பினான்.

காதலில் தோல்வியடைந்தாலும் செல்வம் இலட்சியத்தில் தோல்வியடையவில்லை. தமிழ் உரிமைப் போரில் கண்ணைப் பறிகொடுத்த தியாகியென எதிர்காலம் போற்றும் படியாக வரலாற்றில் இடம்பெற்றுவிட்ட செல்வம் எந்தவித எண்ணங்களாலும் பாதிக்கப்படாதவனாக தன் இருப்பிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.*********

(நன்றி: சுதந்திரன் சிறுகதைகள்)


## விற்பனைக்கு

பாவித்த மரத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 5/6, கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (75703)

## கடை வாடகைக்கு

சுன்னாகம் கே.கே.எஸ். வீதியில் 11 ஆம் இலக்கத்தில் (மக்கள் வங்கி முன்பாக) உள்ள மாடியுடன் கூடிய கடை தளபாடங்களுடன் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 021 4591350 (75696)

## பிள்ளையார் அச்சகம்

குறைந்த செலவில் Cool Lamination செய்துகொள்ளலாம்.

பிள்ளையார் அச்சகம்

பச்சை மாளிகை,

வண்ணார்பண்ணை சிவன்கோயிலடி,

கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## எம்புறோடிங் ரை



நீண்டகால பாவனைக்கு உத்தரவாதம்

பாடசாலை மாணவர்களுக்குரிய ரை

69.00 லிருந்து

எஸ் . எஸ். யசோதரன் ஆட்ஸ்

212,கோவில் வீதி, நல்லூர்


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்29

தவசிக்குளம் கண்ணகை அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு 1008 சங்காபிசேகமும் பூசைகளும் இடம்பெறும். 11 ஆம் திகதி பூங்காவனம் இடம்பெறும். (203)

* * *

தெல்லிப்பழை தோதரவையம்பதி இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் சங்காபிசேகம், விசேடபூசை, மகேஸ்வரபூசை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருதல் இடம் பெறும். (203)

* * *

வவுனியா, கோவில் குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 10.45 மணி தொடக்கம் 11.58 மணி வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்குத் தைலாம்மியங்கம் இடம் பெற்று திங்கட்கிழமை மாலை 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும். (203)


## விமான பொதிகள் சேவை

உங்கள் பொருள்கள் யாழ் - கொழும்பு அல்லது கொழும்பு - யாழ். தினசரி விமானமூலமாக உடனுக்குடன் உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். உங்களுக்குத் தேவையான பொருள்களை கொழும்பில் கொள்வனவு செய்து அனுப்பி வைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து தரப்படும். அத்துடன் பூதவுடல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். தேவை ஏற்படின் விமானம் சாட்டட் (CHARTED) செய்து கொடுக்கப்படும். அவசர ஆவணங்கள் உடன் அனுப்பிவைக்கப்படும். (ல/553482)

EURO FLIGHT CARGO (PVT) LTD,
NO.35, STATION ROAD, MOUNT LAVINIYA.
TEL.: 011 4542190, 077 2966902, 077 2966903
FAX: 011 4542360

WELLAWATTA BRANCH
NO.296 1/A, GALLE ROAD, COLOMBO-06
TEL.: 077 2966901
NO.11, VIHARA LANE, COLOMBO-06
TEL.: 077 2966907

JAFFNA BRANCH
22, WYMAN ROAD, JAFFNA.
021 2223974, 077 2966910-11


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
09.02.1953

விண்ணில்
11.07.2007

## A.C. மகேந்திரன்

(சிரேஷ்ட சாலைப் பரிசோதகர்)

அன்பான அத்தானே அவனி போற்ற வாழ்ந்தீர்
பண்பால் உயர்ந்து பாசமாய் ஒளி வீசி
அன்பு மொழி பேசி அரவணைத்து ஆதரித்தீர்
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
ஆல்மரமாய் நீர் இருந்தீர் ஆனந்தமும் பறிபோனதே

பொட்டு முகமும் புன்முறுவலையும்
எப்போது நாம் காண்போம்
மீண்டும் உதயமாகி எம் வாழ்வில்
வசந்தத்தை வீசிடுவீர்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள்
மைத்துனிகள், மருமக்கள்,
பேரமக்கள்,நண்பர்கள்

ஆத்தியடி,
பருத்தித்துறை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னையா செல்லத்துரை

(யாழ்ப்பாணம் சரசாலையைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

தோற்றம்:05★01★1910 மறைவு:31★05★2008

31.05.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டும், தொலைபேசி ஊடாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு எமது நன்றியினைத் தெரிவிப்பதோடு நாளை (30.06.2008) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்


## சிறப்புத் தள்ளுபடி விற்பனை

SATS-TECH நிறுவனம் வாடிக்கையாளர்களின் வசதி கருதி இல.11/10 B, ஸ்ரான்லி வீதியில் (மிட்டாஸ் கடை ச்சந்திக்கு அருகில்) எமது புதிய விற்பனை நிலையத்தை 16.06.2008 இல் திறந்துள்ளதனை முன்னிட்டு 30.06.2008 வரைசிறப்புத்தள்ளுபடி விற்பனையில்!



180 சனல் மற்றும்
106 சனல் பார்க்கக்கூடிய பக்கேஜ்
3/6/10/12/18மாத இலவச
கட்டணத்துடன் ரூபா 8250ல் இருந்து

dishtv

★ மற்றும் அனைத்து கேபிள் T.V உபகரணங்களும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
★ Dish T.V க்குரிய கட்டணங்கள் உடனுக்குடன் செலுத்திக் கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு

SATS-TECH ENGINEERS

No. 11/10B, STANLY ROAD,
(Near Muddas Kadai Junction) Jaffna
Phone:- 021 2228812

(75337)

No 182, K.K.S. Road,
[illegible] Kokuvil
Phone:- 021 2225908


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரான மின்விநியோகம் இல்லாததால் தென்மராட்சி மாணவரின் கல்வி பாழ்! ஒரு நாள் வெளிச்சத்திலும் பல நாள்கள் குப்பிவிளக்கிலும் படிக்கும் பரிதாபம்!

பல்வேறு காரணங்களால் மின்விநியோகம் ஐந்து வலயங்களாகப் பிரிக்கப்பட்டு பி.ப.6.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை சுழற்சி முறையில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

யாழ். அரச அதிபரால் ஒவ்வொரு வலயத்திற்கும் சுழற்சி முறையில் அரைமணி நேரம் மின்வெட்டு இடம் பெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவித்தல் வெளியாகி குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே அவ்வாறு நடைமுறையில் இருந் தது. பின்னர் மின்வெட்டு நேரத்தில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டன. மின்வெட்டுத் தொடர்பாக யாழ். மாவட்ட உயர் அதிகாரி களால் காலத்துக்குக் காலம் அறிவித் தல்கள் வெளியாகின்ற போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் மின்சார சபை யினர் அக்கறை கொள்வதில்லை.

மாணவர்கள் மாலை 6.00 மணி தொடக் கம் இரவு 9.00 மணிவரையுமே தமது பாடங்களைப் படிப்பதற்கு நேரத்தினை ஒதுக்குகின்றனர். ஆனால் இந்த நேரத்தில் மின்வெட்டினை அமுல் செய்வதால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைகின்றது. அண்மைக்காலமாக தென்மராட்சி பிரதேசத்தில் மின்வெட்டு நேரம் ஒன்றரை மணித்தியாலங்களாக அதிகரிக்கப் பட் டுள்ளது. ஒரு நாளைக்கு இரவு 7.30 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரையும் மறுநாள் இரவு 8.00 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரையும் மின்வெட்டு செய்யப்படுகிறது. இதனால் பிரதேச மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுகிறது. இதேவேளை வடமராட்சிப் பகுதியில் பி.ப.6.30 மணி தொடக்கம் இரவு 7.15 மணி வரையும் மறுநாள் 7.30 மணி தொடக்கம் இரவு 8.15 மணிவரை மின்வெட்டு செய்யப்படுகிறது. பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபட்ட நிலையில் மின்வெட்டு அமுல் செய்வது மாணவர்களை வேதனைக்குள்ளாக் கியுள்ளது. மின் விநியோக சீர்கேட்டினால் மாணவர்கள் குப்பி விளக்கிலேயே தமது பாடங்களைப் படிக்கின்றனர்.

இன்னும் ஒரு மாதத்தில் இரண்டாம் தவணைப் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை, ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை ஆகியன நடத்தப்படவுள்ளன. இவற்றினை கருத்தில் கொள்ளாமல் மின்சார சபையினர் தன்னிச்சையாக தென்மராட்சி பிரதேசத்தில் தினமும் ஒன்றரை மணிநேரம் மின்வெட்டினை நடைமுறைப் படுத்துவது பிரதேச மாணவர்களின் கல்வி நிலையை சீரழிக்கும் செயல் என்றே கருத வேண்டியுள்ளது. மின்சார சபையின் உயர் அதிகாரிகள் தென்மராட்சி பிரதேச மாணவர்களின் கல்வி நிலை குறித்து உரியவர்கள் அக்கறை எடுக்காமல் இருக்கிறார்கள் என்று தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள மாணவர்களும் பெற்றாரும் ஆழ்ந்த கவலை தெரிவிக்கின்றார்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் மின் விநியோகம் சீரடையும் எனக் கடந்த ஜனவரி மாதமும், ஜூன் மாதம் தொடக்கம் மின்விநியோகம் 24 மணிநேரம் வழங்கப்படுமென ஏப்ரல் மாதமும் யாழ். மாவட்ட உயர் அதிகாரிகளால் அறிக்கைகள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. ஆனால் இதுவரை எந்தவொரு முன்னேற்றமும் காணப்படவில்லை. பத்திரிகைகளில் அறிக்கை விட்டு அது செயல் வடிவம் பெறாதிருந்தால் மக்கள் அதிகாரிகளைத் திட்டுவார்கள் என்பதனை இவர்கள் அறிந்து கொள்வதில்லையா?

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பெற்றோர்களும் அரச அலுவலர்களும் மின்சார சபை உயர் அதிகாரிகள் ஆகியோருடன் தொடர்ச்சியாக தொலைபேசி மூலமும் கடிதம் மூலமும் தொடர்பு கொண் டால் மட்டும் மின்வெட்டில் முன்னேற்றம் தெரியும். பெற் றோர்கள் மற்றும் அரச அலுவலர்கள் தொடர்புகள் கொள்ளா விட்டால் பிரதேசத்திற்கான மின்விநியோகத்தினை

## மக்கள் மன்றம்


மின்சார சபையினர் முற்றாக நிறுத்தி விடுவார்கள் போல் தெரிகிறது.

மின்வெட்டுத் தொடர்பாக வடபிராந்திய மின்சார சபை அலுவலகத்துடன் நேரில் தொடர்பு கொண்டு மாணவர்களின் கல்வி நிலைபற்றி கூறி மின்வெட்டு நேரத்தைத் குறைக்குமாறு கேட்டால் தென்மராட்சிப் பிரதேசத்தில் 'கரண்ட் லோட்' அதிகம் எனவும், பல இடங்களில் குறிப்பாக நாவற்குழி பாலம் தொடக்கம் கைதடி நுணாவில் சந்தி வரையுள்ள பகுதியில் கூடுதலாக 'கள்ளக் கரண்ட்' எடுக்கப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மின்சார சபையின் குறிப்பிடும் பகுதிகள் குடியிருப்புக்கள் சொற்ப அளவில் உள்ள பகுதிகளாகக் காணப்படுகின்றன.

தமிழ் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறையுள்ள அனைவரையும் மன்றாட்டமாக கேட்டுக் கொள்கின்றோம். தென்மராட்சி பிரதேச மாணவர்களின் கல்வியில் அபிவிருத்தி காண மின்வெட்டு நேரத்தைக் குறைக்க ஏற்பாடுகள் மேற் கொள்ளுங்கள். *************

வே.தனபாலன், மீசாலை.

# இலக்கியப் பணிக்குப் பிரித்தானிய அரசிடம் அன்பளிப்புப் பெற்றார் குமாரசாமிப் புலவர்



**யூன் 1920**

1920 ஆம் ஆண்டு யூன் மாதம் குமாரசாமிப்புலவரின் இலக்கியப்பணிகளுக்காக அரசாங்கம் இருநூற்றைம்பது ரூபா அன்பளிப்புச் செய்தது. (பிரித்தானிய அரசு) சுன்னாகம் பல புலவர்களையும், பண்டிதர் களையும், அறிஞர்களையும் எமக்குத் தந்துள்ளது. சுன்னாகத்தில் தோன்றிய தமிழறிஞர்களுள் முதன்மையானவர் குமாரசாமிப்புலவர்.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், யாழ்ப்பாண செந்தமிழ்ச்சங்கம் என்பவற்றின் ஸ்தாபகரான குமாரசாமிப்புலவர் ஆறுமுக நாவ லரின் மாணவன். குமாரசாமிப்புலவரின் தமிழ்ப்புலமையை அறிந்த மதுரைத்தமிழ்ச் சங்கத் தலைவர் பாண்டித்துரைத்தேவர் மதுரைத்தமிழ்ச் சங்கத்தில் அங்கத்தவராக இணைந்து சேவையாற்றுமாறு கேட்டுக் கொண்டார். புலவரும் பாண்டித்துரைத்தேவரின் வேண்டுகோளை ஏற்று மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் இணைந்து பணியாற்றினார்.

சென்னை அரசாங்கம் 1913 ஆம் ஆண்டு தமிழகராதியொன்றைத் தொகுக்குமாறு யே.எஸ்.காண்ட்லர் என்ற பாதிரியாரை நியமித்தது.காண்ட்லர் பாதிரியார் யாழ்ப்பாணம் வந்து உடுவில் மகளிர் கல்லூரியில் வைத்து புலவரைச் சந்தித்து அகராதிப் பணிக்கு உதவுமாறு கேட்டார். புலவர் தான் தயாரித்து வைத்திருந்த கையெழுத்துப் பிரதியைப் பாதிரியாரிடம் கையளித்தார்.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

உ.வே.சாமிநாதையர் சீவக சிந்தாமணியை அச்சேற்றிய போது அதில் காணப்பட்ட பிழைகளைச் சுட்டிக்காட்டி ''சீவக சிந்தாமணிப் பிழைகள்'' என்ற பெயரில் பிரசுரமொன்றை வெளி யிட்டார் புலவர். புலவருக்கும் இராமநாதபுரம் சமஸ்தான அரசர் கேதுபதி மகாராஜாவுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது.

*தமிழ் நாடுசென்று அகராதி தயாரிப்பிலும் புலவர் ஈடுபட்டார்*

1920 ஆம் ஆண்டு 250 ரூபா இன்றைய நாணயப் பெறுமதியில் எவ்வளவு? அப்பாடா கற்பனை செய்யவே முடியவில்லை. அரைச் சதம் மட்டுமல்ல கால்சதம் கூட புழக்கத்தில் இருந்த காலம் அது. **- தாண்டவன் -**

# எவராலும் எளிதில் அணுகக்கூடிய மனிதாபிமானியாகத் திகழ்ந்து பல்கலைக்கழகத் தமிழ் மாணவரின் நன்மை கருதி உழைத்த பேராசிரியர்

பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறைத்தலைவரும் சமூக சேவையாளருமாகிய பேராசிரியர் வி.நந்தகுமாருக்கு பேராதனைப் பல்கலைக்கழக சமூகத்தினாலும் மலையகத்தில் வாழ்ந்தவரும் சிங்கள, தமிழ், இஸ்லாமிய சமூகத்தினராலும் எடுக்கப்படுகின்ற மணிவிழா நிகழ்வுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவராகிய நானும் புவியியற் சமூகத்தினரும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பேராசிரியர் நந்தகுமார் யாழ்ப்பாணத்தில் கல்விப் பாரம்பரியத்தைக்கொண்ட வடமராட்சியில் வியாபாரி மூலையில் பிறந்து, பருத்தித்துறையில் கல்வியில் உயர்ந்த ஹாட்லிக் கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியைக் கற்றவர்.

பேராசிரியர் நந்தகுமார் சர்வதேச புகழ்பெற்ற பேராசிரியர் ஜோர்ஜ் தம்பையாபிள்ளையின் கீழ் நீர்வளம் சம்பந்தமான முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வினைமேற்கொண்டது மட்டுமல்லாது, புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஜப்பான் சுகுமா பல்கலைக்கழகத்தில் முதுதத்துவ மாணிப் பட்டத்தினையும் பெற்றவர். உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் சிறந்த ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். இவரது விசேட ஆய்வுகள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளம், காலநிலை, சுற்றாடல், குடித்தொகை போன்ற பல விடயங்களில் மேற்கொண்டதுடன் பல நூல்களையும் எழுதியுள்ளார்.

மும்மொழிகளிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பேராசிரியர் நந்தகுமார் தனது பல்கலைக்கழக மாணவ வாழ்வில் மாணவர் சங்கத்தின் முக்கிய பதவிகளில் அமர்ந்து இன, மத மொழி வேறுபாடின்றி மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தவர். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக நியமனம் பெற்றதன் பின்னர் விடுதி மண்டப தலைவர் பதவியும், பல்கலைக்கழக நிர்வாகம்



*மணிவிழாக் காணும்*
**பேராசிரியர் வி.நந்தகுமார்**

சார்ந்த பல பதவிகளும் அவரைத் தேடிவந்தன. குறிப்பாக சிரேஷ்ட மாணவ ஆலோசகராகவும், ஆலோசகர் சபையின் தலைவராகவும் விளங்கியதுடன் மாணவர்களது குறிப்பாக தமிழ் மாணவர்களது பல்வேறு வகைப்பட்ட பிரச்சினைகளை மிக சாதுரியமாகத் தீர்த்து வைத்த பெருமை இவரையே சாரும்.

எளிதாக அணுகக் கூடிய, இயல்பாக பழகக்கூடிய, தெளிவாகவும், நிதானமாகவும் பேசும் ஆற்றல் கொண்ட, நினைத்ததை சாதிக்கும் திறன் கொண்டவர் பேராசிரியர் வி.நந்தகுமார் ஆவார். இன, மத, வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு மனிதாபிமானியாகத் திகழ்பவர்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியராக இவர் வியங்கிய போதிலும், இலங்கை முழுவதிலும் புவியியற் கல்வியைக் கற்கின்ற மாணவர்கள் விடயத்தில் மிகுந்த அக்கறை கொண்டு காணப்பட்டதுடன், நாடளாவிய ரீதியில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்குபவர். கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகமும், தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் மிக அண்மையில் நிறுவப்பட்டவை. இப் பல்கலைக்கழகங்களில் புவியியற்றுறையினை உருவாக்குவதிலும் அதனை வளர்த்தெடுப்பதிலும்

## மக்கள் மாண்பு

மிக முக்கிய பங்குகொண்டவர் பேராசிரியர் நந்தகுமார் ஆவார். பல்வேறு சாவால்களின் மத்தியிலும் கூட தமிழ் மாணவர்களின் நன்மை கருதி, எவற்றையும் எதிர் பாராது, அந்தப் பல்கலைக்கழகங்களின் மாணவர்களின் புவியியல் கல்வி வளர்ச்சிக்கும், ஒட்டுமொத்தப் பல்கலைக்கழகங்களின் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டவர். தேசிய பல்கலைக்கழகங்களுக்கு இணையாக இப் பல்கலைக்கழக மாணவர்கள் திகழ வேண்டும் என்பதற்காக சிறந்த முறையில் சர்வதேச தரத்திற்கு அமைவாக பாடவிதானங்களை அமைத்துக் கொடுத்தவர். குறிப்பாக கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் 1993-1996 வரை வருகை விரிவுரையாளராகவும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 1998- 2001 வரை வருகை தரு பேராசிரியராகவும் கடமையாற்றி மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்கு அளப்பரிய பங்காற்றியவராவார். அத்துடன் 2002-2004 வரை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முதுநிலை ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார்.

பேராசிரியர் நந்தகுமார் புவியியற்றுறை சார்ந்த ஆய்வுகளில் மட்டுமல்லாது சமயம், சமூகம், பண்பாடு ஆகியவற்றிலும் சிறந்த ஆளுமைப் பண்பினைக் கொண்டுள்ளதுடன், பேராதனைப் பல்கலைக்கழக வரலாறு, மாணவர்கள் சம்பந்தமான கட்டுரைகள், இந்துசமயம் தொடர்பான கட்டுரைகள், குறிப்பாக இலங்கையில் முருக வழிபாடு பற்றிய கட்டுரைகளை வெளியிட்டுள்ளதுடன் மாணவர்களின் அறிவு விருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பல்தரப்பட்ட கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார்.

மணிவிழாக்காணும் பேராசிரியர் நந்தகுமார் கண்டியிலும், நுவரெலியாவிலும் நடைபெற்ற சாகித்திய விழாக்களில் உயர் கௌரவ விருதினைப் பெற்றுள்ளதுடன், கண்டி கலாச்சார ஒன்றியத்தினது ''இரத்தின தீபம்'' விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளார். அதுமட்டுமல்லாது அவரது சமூக சேவையைக் கருத்தில் கொண்டு நீதியமைச்சினால் அகில இலங்கைச் சமாதான நீதிவான் பதவியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இயங்கிவரும் தமிழ்ச் சங்கம், சங்கீத நாட்டிய சங்கம் ஆகியவற்றின் பெரும் பொருளாளராகப் பதவிவகிப்பதுடன் 2005-2006 ஆம் ஆண்டு இலங்கை மன்றக் கல்லூரியின் பணிப்பாளராகவும் 2000-2001 ஆம் ஆண்டு விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சினதும், 1997, 2002 ஆம் ஆண்டில் நீதி, அரசியல் யாப்பு, இன விவகார அமைச்சிலும், நிபுணத்துவ ஆலோசகராகவும், தேசிய கல்வி நிறுவனத்தின் புவியியல் பாடவள ஆய்வாளராகவும், கடமையாற்றி நாட்டிற்கும் சமூகத்திற்கும் அருந் தொண்டாற்றி வருகின்றார். மணிவிழா நாயகனான பேராசிரியரும் அவரது குடும்பத் தினரும் நீண்ட நெடுநாள் வாழ்ந்து எம்சமூக மேம்பாட்டிற்கு பங்காற்ற வேண்டும் என எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரனை வேண்டுகின்றேன். ***

**பேராசிரியர். கா.குகபாலன்**
*தலைவர், புவியியற்றுறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28
11
1982

மறைவு
01
07
2005



## செல்வி திருபாலசிங்கம் சோபனா

திதி: ஏகாதசி

அன்பின் இலக்கணமாகத் திகழ்ந்தவளே!
ஆற்றல்பல தன்னகத்தே கொண்டவளே!
இலண்டன் மாநகரில் வாழ்வுதேடி நீ சென்றாய்!
ஈன்றதாயு முடன்பிறப்பும் தவிக்கிறதே மாண்டு மூன்றாய்
உன்வாழ்வு ஒளிமய மானதாகுமென நாம்நினைக்க...
ஊராளு முன்னுயிரைப் பறித்தானோ காலனவன்?

'பழ வீடு', பத்தாவத்தை, இளவாலை. குடும்பத்தினர். (75833)

# மரண அறிவித்தல்கள்

## தியாகராசா குருநாதன் (பத்தர்)



பூநாறி லேன், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட தியாகராசா குருநாதன் 26.06.2008 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரி காலஞ் சென்ற தியாகராசா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரேசு - நவ ரத்தினம் தம்பதியரின் மருமகனும் தனவதியின் அன்புக் கணவரும் சாரு ஜன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), லய சுயன் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலாதேவி, நாகேஸ்வரி, சரோஜினிதேவி, ராமநாதன், பத்ம நாதன், விமலாதேவி, ஜெகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன் புச் சகோதரனும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர், காலஞ் சென்ற கருணாகரசிங்கம், பாலசுப்பிரமணியம், ரமணேஸ்வரி, இந் திரஜெயந்தி, வரதராசா, சுகந்தி (சுவிஸ்), பிரேமாவதி, புஸ்பலீலா வதி, சோமாவதி, ரேவதி, பிரபாவதி, உமாதேவி, சாந்தகுமார், சிவ கும்ார் (ஊர்காவற்றுறை), ராஜ்குமார் (மலேசியா), ஜெகநாதன், யோகராஜா, மணிவேலழகன், நமசிவாயம், நகுலேஸ்வரன், தங்க ராசா, ஜெயசுதா, சுகந்தி ஆகியோரின் மைத்துனரும் விஜயன், ரூபன், சந்தானகோபால், சசிகலா (கனடா), ராஜினி (லண்டன்), சசிக்குமார் (கொழும்பு), பாலகுமார் (கனடா), அமுதா (ஆங்கில நெறி பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), அகல்யா, அன்பழகி, சதீஸ், குணேஸ், நிரேஸ், ஞானேஸ், விமேஸ், நுபாணா, பதுமிதன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜெயரூபி, கோவிதா, திருபாலன், தர்சிகா, சுஜா, ரோஜிதா, குகராஜ், பார்த்தீபன், பிரதீபன், ராஜினி, கயதீபன், மகிழரசி, நிசாந்தி, நாகவிபூசன், பத்மவிபூசன், மதுரா, லாகுசன், லக்சிகா, பாதுசன், நிதுர்சா, கோஜிகன் ஆகியோரின் சித்தப்பாவும் தர்வின், யோவின் (சுவிஸ்), லோஜிதா ஆகியோ ரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில் (யாழ்ப்பாணம்).

தகவல்:
குடும்பத்தினர்.
(75839)

## செல்லப்பா தியாகராசா
(சாத்திரியார்)



சரசாலை வடக்கைப் பிறப்பிடமா கவும் மட்டுவில் வடக்கையும் கல்வய லையும் வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா தியாகராசா இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் பொன்னம்மாவின் அன் புக் கணவரும் ஜெயரஞ்சிததேவியின் தகப்பனும் இராமச்சந்திரனின் மாமனும் அகிலன், கபிலி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (28.06.2008) சனிக் கிழமை வேம்பிராய் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வயல்,
சாவகச்சேரி.
(75848)

தகவல்:
க.இராமச்சந்திரன்
(மருமகன் - தபால் ஊழியர், சாவகச்சேரி).

## தந்தை பாடிப் பூர்த்தி...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி....)

கூத்தரால் தமிழ்ப் பாண்டித்தியம் பெற் றிருந்த சோழ மன்னன், அவர் பாடலை முடிக்க விடாது குறுக்கிட்டு, ஒட்டக்கூத்த ரைச் சிறப்பிப்பதாக அப்பாடலை மாற்றி பின்னிரு அடிகளையும் - என்று தித்தவே

பாடுங் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேஎன்னைச்
சொல்லுவரே"

என முடித்து, கவியரசன் பாதத்தைப் புவியரசன் சூடுவதாக ஒட்டக்கூத்தரைக் கௌரவப்படுத்தினான்.

மனிதன் ஏராளமான ஆற்றல்கள் வாய்க் கப் பெற்றவன்; கடவுள் அவனுக்கு வழங்கி யுள்ள அருங்கொடை அது. மனிதனிடம் மறைந்துள்ள ஆற்றல்கள் வெளிக்கொணரப் படுமிடத்து, சமூகத்தில் அவனால் பிரகாசிக்க முடிகிறது. மனிதனது ஆற்றல்கள் வெளிப் படுத்தப்பட தூண்டுதல் அவசியம்.

அண்மைக்காலமாக இலக்கியப் படைப்புக்களின் வெளியீட்டு நிகழ்வுகளில் மேற் சொன்ன கருத்து வலியுறுத்தப்பட்டு வரு வதைக் கேட்க நேர்கிறது.

தூண்டுதல்கள், ஆதரவு என்ற ரூபத்தில் படைப்புக்கள் உருப்பெற துணையாய் அமை கின்றன. சங்க கால முதல் இப்பண்பு தமிழர் கள் மத்தியில் நிறைந்து காணப்படுவது மகிழ்ச்சி தருமொன்றே.

புலவர் ஒட்டக்கூத்தரின் கவித்திறன் அர சன் என்ற நிலையிலிருந்து குலோத்துங்க சோழனால் ஏத்திப் போற்றப்பட்டது. சாதா ரண சின்னத்தம்பியிடம் நிறைந்திருந்த கவி பாடும் திறன் தந்தையென்ற நிலையிலிருந்து வில்லவராய முதலியாரால் தூண்டப்பட்ட தால் சின்னத்தம்பி புலவரென அடையாளப் படுத்தப்பட முடிந்தது.

இலைமறைகாயாக சமூகத்தின் மத்தி யில் குடத்து விளக்குகளாய் உள்ள திறமை சாலிகளது இலக்கியத்திறன் தூண்டப்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவை என்பதை மனதில் கொள்வோமாக! ★

## தேவை

எமது வியாபார நிறுவனத்திற்கு பின் வரும் வேலைகளுக்கு பணியாளர்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் இன்று (29.06.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நேரில் வரவும்.

1. விற்பனையாளர்
2. பில் கிளார்க்
3. களஞ்சியப் பொறுப்பாளர்
4. கணக்காளர்

சிறி முத்துமாரியம்மன் ரேடர்ஸ்
இல.338, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (75827)

# இலங்கை வங்கி
## பருத்தித்துறைக் கிளையின் பொன்விழாவை பாராட்டி வாழ்த்துகின்றோம்

பொன்விழாவினைக் கொண்டாடும் இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையின் முகாமையாளரையும் உத்தியோகத்தர்களையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

(55357)

பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

## INSURANCE ASSISTANTS / EXECUTIVES (OFFICE WORK)

The job would encompass allied clerical work pertaining to insurance not forgetting serving the walk - in customers to the unit / branch and ensuring maximum customer satisfaction.

**Prospective applicant should meet the following criteria :-**

* Passed G.C.E O/L Examination with Credits for English and Mathematics
* Passed G.C.E A/L Examination with a minimum of 03 passes
* Experience in Insurance underwriting and claims processing in both General and Life Insurance will be an advantage.
* Be computer literate
* Fluency in Sinhala and English will be preferred.

In addition to vacancies at head office, presently, vacancies exist at our Branch offices in Northern and Eastern provinces and hence, those residing in close proximity to Trincomalee, Kantalai, Kalmunai, Jaffna, Nelliyadi & Akkaraipattu are also encouraged to apply.

If you feel you fit the bill for the above vacancy, please forward your CV to the address given below or E-mail to viranthi@janashakthi.com within 07 days from the date of this advertisement, together with the names and contact information of two non-related referees.

Please indicate the position applied & the district at top left corner of the envelope.

Assistant Manager - HRM
Human Resource Department
JANASHAKTHI INSURANCE CO. LTD.,
55/72, Vauxhall Lane, Colombo 02

JANASHAKTHI INSURANCE

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி நாகராசா தங்கரத்தினம்

மண் மகிழ
01-03-1930

விண் மகிழ
30-05-2008



அன்னமூட்டி
அறிவமுதளித்து
மெழுகாய் உருகி
ஒளிகொடுத்து
இனிய துணையுடன்
கனிவுடன் வாழ்ந்த
உம் இல்லற வாழ்வில்
கண்பட்டதோ
விண் ஏகிட்டீர் எமைப்
பிரிந்து.

அன்புடன் நினைவு
கூரும்:
குடும்பத்தினர்.

பிள்ளையார்
கோயிலடி,
இணுவில் கிழக்கு. (75850)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட ஆயுள் தரும் விற்றமின் 'டி'



நாம் கடவுளிடம் வைக்கும் பிரதான கோரிக்கைகளில் உடல் நலனுடன் கூடிய நீண்ட ஆயுள் என்பதே முதன்மையானதாக இருக்கும். அத்தகைய ஆயுள் எதனால் பெருகுகிறது என்பது குறித்து லண்டனில் விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் பல புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆயுள் பெருகுவதற்கு உடல் சத்துக்களில் விற்றமின் 'டி' முன்னிலை வகிப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அந்த சத்தால் உடலுக்கு பல நன்மைகள் இருப்பதையும், காலை சூரிய ஒளியின் மூலம் இந்தச் சத்து உடலுக்கு அதிகளவில் கிடைப்பதையும் ஏற்கெனவே விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர். பால், மீன் உள்ளிட்ட உணவுப் பொருள்களில் அதிக அளவில் விற்றமின் 'டி' சத்து இருப்பதை சுட்டிக்காட்டியுள்ள விஞ்ஞானிகள், இதனை பெரும்பாலான மக்கள் அறிந்திருக்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இது தொடர்பாக மேற்கொண்டு நடத்தப்பட்ட ஆய்வில் ரத்தத்தில் விற்றமின் 'டி' சத்து5 முதல் 10 நானோ மில்லி லீற்றர் அளவில் இருப்பின், அத்தகையோருக்கு இறப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாக அந்த முடிவுகள் தெரிவிக்கின்றன.

ரத்தத்தில் 20 முதல் 30 நானோ மில்லி லீற்றர் அளவு இந்தச் சத்து இருப்பின், அவர்களுக்கு ஆயுள் பலம் பெருகுவதுடன், இதயப் பாதிப்பு உள்ளிட்ட நோய்கள் வருவதும் பெருமளவு தடுக்கப்படும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எனவே, நமது உடல் நலத்தை காத்து, ஆயுள் பலத்தை பெருக்க சூரிய ஒளி உடலுக்கு அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். ஆயுள் பலம் பெருகுவதுடன், உடலை ஆரோக்கியமாக பேணுவதற்கு சூரிய நமஸ்காரம் எந்தளவுக்கு முக்கியம் என்று நம் முன்னோர்கள் வலியுறுத்திச் சென்றதன் அவசியம், தற்போது ஆய்வின் மூலம் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது.

# சிகரெட் குடித்தால் நினைவாற்றல் குறையும்



புகைப்பிடித்தலால் நினைவாற்றல் குறையும் என ஆய்வில் தகவல் தெரியவந்துள்ளது. பிரான்ஸ் நாட்டில் 35 வயது முதல் 55 வயதுக்குட்பட்ட அரசு ஊழியர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. அதில் புகைப்பிடிக்காதவர்களை விட புகைப் பழக்கத்துக்கு ஆளானோர் நினைவுத் திறனில் பெரிதும் பின்தங்கி உள்ளனர். உரிய நேரத்தில் சிறப்பான முடிவு எடுப்பதிலும் புகைப்பிடிப்பவர்கள் மத்தியில் தடுமாற்றம் காணப்படுகிறது. புகைப்பழக்கத்துக்கும், நினைவாற்றலுக்கும் தொடர்பு இருப்பது இந்த ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு ஆளானோர் வயதான காலத்தில் உடல் ரீதியாகவும் பல்வேறு பிரச்சினை களை சந்திக்கின்றனர். வேலை பார்ப்போரில் பல்வேறு நபர்களின் பெயர் களை நினைவு வைத்திருக்க வேண்டிய பணியில் இருப்போரில் புகைப் பழக்கத்துக்கு ஆளானோர் தங்களின் பணியில் பெரிதும் பின் தங்கி உள்ளனர். புகைப்பழக்கத்துக்கு ஆளானோர் அதில் இருந்து விடுபட்டால் மீண்டும் பழைய படி நினைவாற்றல் பெறலாம் என்றும் அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

# செல்போன் அதிகம் பயன்படுத்தினால் தூக்கத்தைப் பாதிக்குமாம்



செல்போன்களை அதிக நேரம் பயன்படுத்துவது அல்லது அதற்கு அடிமையாகி விடுவது போன்றவை தூக்கத்தை பாதிக்கும் என சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. சுவீ டன் நாட்டின் கோத்தென்பெர்க் பகுதியில் உள்ள சஹல்கெர்ன்ஸ் அகடமியில், அதிக நேரம் செல்போனை பயன்படுத்தும் 14 முதல் 20 வயதுடையவர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது.

இவர்கள் 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டனர். இதில் ஒரு செல்போன் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர். மற்றொரு பிரிவினருக்கு செல்போன் பயன்படுத்த அதிக நேரம் வழங்கப்பட்டது.

ஆய்வின் முடிவில் குறைந்த நேரம் செல்போன் பயன்படுத்தியவர்களின் தூக்கம் சராசரி அளவுக்கு இருந்தது. ஆனால் அதிக நேரம் செல்போன் பயன்படுத்திய பிரிவினர், சரியான நேரத்திற்கு தூங்க முடியாமல் அவதிப்பட்டனர்.

செல்போன் பயன்படுத்துதல் இளைய தலைமுறையினரிடம் அதிகரித்து வருவதாகவும், இதன் காரணமாக அவர்கள் அதிக மன அழுத்தத்திற்கு உள்ளாவதாகவும் இந்த ஆய்வை நடத்திய கேபி போட்ரி தெரிவித்துள்ளார்.

# சுறா மீனில் இருந்து புற்றுநோய் மருந்து



புற்று நோய்க்கு புதுப்புது மருந்துகளை கண்டு பிடிக்கும் ஆராய்ச்சியில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். இந்த ஆராய்ச்சிக்குப் பிறகு அவர்கள் சுறாமீன் செல்களில் இருந்து புற்று நோய்க்கு மருந்து கண்டு பிடித்துள்ளனர். சுறாமீன் செல்களில் உள்ள மரபணுக்களை எடுத்து அவற்றுடன் சோதனை கூடத்தில் புரோட்டீன்களை சேர்த்து அவற்றை நோய் எதிர்ப்பு செல்களாக மாற்றினார்கள். இந்த செல்களை உடலில் செலுத்தியதும் அந்த நோய் எதிர்ப்பு செல்கள் புற்று நோய் செல்களை அழித்து விட்டன. அது மட்டுமல்ல மலேரியா, வாதநோய், மூட்டுவலி போன்றவற்றுக்கும் அதை மருந்தாகப் பயன்படுத்தலாம்.

# நிறைவான காலை உணவு உடல் நிறையைக் குறைக்கும்



குறைவான காலை உணவை உட்கொண்டு மதியமும் இரவும் மற்றும் இடையிலும் என்று அதிகளவான உணவை உள்ளெடுக்கத் துணியாதீர்கள். காலை உணவைத் தவிர்த்தால் மற்றைய வேளைகளில் அதிக அளவு உணவை உட்கொள்ளத் தூண்டுகிறது.

அத்தோடு நிறைவான காலை உணவை உண்பதால் மதியம் மற்றும் இரவு வேளைகளில் உள்ளெடுக்கும் உணவின் அளவைக் குறைத்துக் கொள்ள முடிவதோடு உடல் நிறையையும் சீராகக் குறைக்க முடியுமென்று அமெரிக்காவில் செய்யப்பட்ட ஆய்வில் இருந்து தெரிய வந்துள்ளது.

குறைந்தளவு காபோவைதரேற்று (மாப்பொருள் உணவுகள்) அடங்கிய காலை உணவை உட்கொள்பவர்களுக்கு ஆரம்பத்தில் குறிப்பிட்ட காலத்துக்கு உடல் நிறை குறைவது போலத் தோன்றினும் பின்னர் அது அதிகரிக்கும் வகையில் அவர்களில் பசி மற்றும் உணவுத் தேவை தூண்டப்படுகிறது. இதனால் காபோவைதரேற்று, நார்ப் பொருள்கள் மற்றும் பழங்கள் அடங்கிய, கொழுப்புக் குறைந்த, நிறைவான காலை உணவை உட்கொள்வதன் மூலம் மிகுதி நாள் முழுவதும் பசித் தூண்டலை மட்டுப்படுத்தவும், அடுத்துவரும் வேளைகளில் உள்ளெடுக்கும் உணவின் அளவைக் கட்டுப்படுத்தவும் அமைகின்ற ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வதே நிறைக்குறைப்புக்கும் உடல்நலனுக்கும் நல்ல வழிமுறை என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஐ.சி.சி.சம்பியன் கிண்ணப் போட்டியில் ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணி பங்கேற்குமா?

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் பாதுகாப்பு அச்சம் காரணமாக முன்னணி ஆஸ்திரேலிய வீரர்கள் பங்கேற்க மாட்டார்களென்று ஆஸ்திரேலிய பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

சர்வதேச கிரிக்கெட் சபை பாகிஸ்தானில் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளை நடத்துவதில் பிடிவாதமாக இருந்தால், முன்னணி வீரர்கள் பங்கேற்கமாட்டார்கள் என்று ஆஸ்



ஆஸி அணி

திரேலியாவின் பிரபல பத்திரிகை "சிட்னி மோரனிங் ஹரோல்ட்" செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது மேற்கிந்திய தீவுகளில் உள்ள ஆஸ்திரேலிய அணியின் மூத்த வீரர் ஒருவர் கூறியதாக வந்துள்ள செய்தியில், பாகிஸ்தான் சென்று விளையாடுவது தனிப்பட்ட வீரர்களின் விருப்பம் சம்பந்தப்பட்டது என்று கூறியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆஸ்திரேலிய வீரர்களிடையே ஆலோசனை நடந்ததாகவும், பாதுகாப்பு ஆலோசனை சரியாக இருந்தால் சில வீரர்கள் விளையாட முன் வரலாமென்றும், சில வீரர்கள் எந்த உத்தரவாதம் அளித்தாலும் பாகிஸ்தான் சென்று விளையாட மறுப்பு தெரிவிப்பார்களென்றும் அதே வீரரை மேற்கோள் காட்டி அந்த செய்தி தெரிவித்துள்ளது.

ஐ.சி.சி.யும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும், பாதுகாப்பு ஒரு விவகாரமேயல்ல என்று கூறிவந்தாலும், சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் கூட்டமைப்பு இந்த விடயத்தில் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை. இதனால் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இது குறித்து ஆஸ்திரேலிய விக்கெட் காப்பாளர் பிராட் ஹாடின் கூறுகையில்,

நான் 2005 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய "ஏ" அணியின் கட்டனாக பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். அன்றைய சூழ நிலையை ஒப்பிடும்போது பாகிஸ்தான் நிலை முற்றிலும் மாறுபட்டுள்ளது. ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை பாதுகாப்பு குழுவை அனுப்பி நிலைவரங்களை ஆராய வேண்டும். இந்தக் குழு சம்மதம் தெரிவித்தால், ஆஸ்திரேலிய வீரர்கள் நம்பிக்கையுடன் இத் தொடரில் கலந்து கொள்வார்களென்றார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் தங்களது வீரர்கள் பங்கேற்க வேண்டுமென்று விரும்புகிறது. சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சங்கம, பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட்டு முக்கிய முடிவெடுக்கவுள்ளது. ஆஸதிரேலியாவை தொடர்ந்து நியூஸிலாந்து, இங்கிலாந்து, தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்களும் இத் தொடரில் பங்கேற்பது குறித்து அச்சம் தெரிவித்துள்ளனர்.

**பாதுகாப்பு காரணங்களை காட்டி விலகினால் தடை**

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரிலிருந்து பாதுகாப்பு காரணங்களை காட்டி எந்த அணி விலகினாலும் அந்த அணி தடை உத்தரவுகளை சந்திக்க வேண்டிவரும் என்று ஐ.சி.சி. எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கிண்ண அறிமுகத்துக்கு முன் நடத்தப்பட்ட சந்திப்பின்போது செய்தியாளர்களிடம் பேசிய ஐ.சி.சி. நிறைவேற்று அதிகாரி டேவ் ரிச்சட்ஸன் இதனை தெரிவித்தார். பாகிஸ்தான் பயணத்தை ஆஸ்திரேலியா ஒத்திவைத்தது துரதிர்ஷ்டவசமானது என்றால், தற்போது சாம்பியன் கிண்ணப்போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறுவது குறித்து ஆஸ்திரேலியா தெரிவித்துள்ள பாதுகாப்பு அச்சம் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று கூறியுள்ளார் டேவ் ரிச்சட்ஸன்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வீரர்கள், ஊடகங்களின் பாதுகாப்பு பொறுப்பு ஐ.சி.ச. யிடம் உள்ளது. அதனால் இது குறித்து கவலைப்பட தேவையில்லை என்றார். பாகிஸ்தான் அரசியல் நிலைவரங்களை தினசரி அடிப்படையில் ஐ.சி.சி. கவனித்து வருவதாகவும், பாதுகாப்பு குறித்த அந்தந்த கிரிக்கெட் சபைகளுக்கு அவ்வப்போது தகவல்களை அளித்து வருவதாகவும் தெரிவித்த டேவ் ரிச்சட்ஸன் ஜுன் மாதம் 29 ஆம் திகதி இறுதி முடிவு அறிவிக்கப்படும் என்றார். ஆகவே ஐ.சி.சி. உத்தரவாதங்களை மீறி எந்த அணியும் பாதுகாப்பு காரணங்களை காட்டி விலகினால் அபராதம், தடை ஆகியவற்றை சந்திக்கவேண்டி வரும் என்றார்

**மொஹமட் அசிவ் விடுவிப்பு**

அசிவ் போதை பொருள் வைத்திருந்த விவகாரத்தை அதிக முக்கியத்துவம் இல்லாத வழக்காக கருதி, துபாய் அரசு தள்ளுபடி செய்துள்ளது. இதனை தொடர்ந்து அவர் லாஹுூர் விமானநிலையத்தின் ஊடாக நேற்றுமுன்தினம் நாடு திரும்பினார். இந்திய பிரிமியர் லீக் போட்டியில் டெல்லி அணியில் இடம்பிடித்து ஆடிய பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் அசிவ் துபாய் வழியாக பாகிஸ்தான் திரும்புகையில் துபாய் விமான நிலைய சோதனை யில் சிக்கினார்.

## பாதுகாப்பைக் காரணம் காட்டி விலகினால் தடை என எச்சரிக்கின்றது ஐ.சி.சி.

இதன்போது அசிவின் பயணப்பொதியில் இருந்து 0.24 கிராம் ஒபின் என்ற போதைப் பொருளைப் பறிமுதல் செய்த சுங்க இலாகாவினர் அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்தி அங்குள்ள நீதிமன்றத்தில் அரச வழக்கறிஞரிடம் அறிக்கை சமர்ப்பித்தனர். கடந்த முதலாம் திகதி முதல் அசிவ் துபாய் பொலிஸ் காவல் மையத்தில் வைக்கப்பட்டார்.

அசிவை பொலிஸ் காவலில் இருந்து மீட்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எடுத்த அவசர நடவடிக்கை கைகொடுக்கவில் இதனை அடுத்து அங்குள்ள பாகிஸ்தான் தூதரகம் தொடர்ந்தும் அசிவை மீட்க நடவடிக்கை எடுத்தது. இதன் பலனாக அசிவ் பொலிஸ் காவலில் இருந்து விடுவிக்கப்பட் டார். இதனை அடுத்து அவர் நேற்றுமுன்தினம் நாடு திரும்பினார்.

**மீண்டும் முதலிடத்தில் சங்கக்கார**

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தர வரிசையில் இலங் கையின் முன்னணி துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். அதேபோன்று ஆஸ்திரேலியாவுட னான டெஸ்ட் தொடரில் தொடர் நாயகன் விருதை வென்ற சந்தர்போல் ஆஸி. வீரர்களான மைக்கல் ஹஸே மற்றும் ரிக்கி பொன்டிங் ஆகியோரை பின்தள்ளி இரண்டாவது இடத்தை பிடித்தார்.



டேவ் ரிச்சட்ஸன்

இதன்படி ஐ.சி.சி. டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசை பட்டியலில் முதலிடத்தில் இருந்த ஹஸே 882 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டதோடு இரண்டாவது இடத்தில் இருந்த பொன்டிங் 880 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்தில் காணப்படுகிறார்.

இதில் குமார் சங்ககார தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறும் முதல் சந்தர்ப்பம் இதுவல்ல. கடந்த ஆண்டிலும் குமார் சங்ககார முதலிடத்துக்கு முன்னேற்றம் கண்டிருந்தார். இந்நிலையில் சங்கக்கார தமது முதலிடத்தை தக்கவைத்துக்கொள்ள எதிர்வரும் போட்டிகளில் கடுமையாக போராட வேண்டியிருக்கும். தற்போது 893 புள்ளிகளுடன் காணப்படும் சங்கக்காரவை விடவும் இரண்டாவது இடத்தில் இருக்கும் சந்தர்போல் வெறும் மூன்று புள்ளிகள் மாத்திரமே குறைவாக பெற்றுள்ளார்.

– டிலான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வானொலியின் முன்னாள் பணிப்பாளரும் அறிவிப்பாளருமான வி.என்.மதியழகன் எழுதிய 'என் மனப் பதிவுகள்' என்னும் நூலின் வெளியீட்டு விழா அண்மையில் சென்னை 'கிறீன் லாண்ட்' ஹோட்டலில் நடைபெற்றது.

இதில் நூலின் முதற் பிரதியை தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் எஸ்.ஜெயகாந்தனிடமிருந்து இந்தியாவின் பிரபல வர்த்தகரான பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி செட்டி பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

ஈழத்தின் பிரபல முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவரான எஸ்.பொன்னுத்துரை (எஸ்பொ)யும் படத்தில் காணப்படுகிறார்.

# யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அனுமதிப் பரீட்சைகள் அடுத்தவாரம்

வலி.வடக்கு, ஜூன்29

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் 2008-2009 ஆம் ஆண் டுக்கான புதிய மாணவர்களை சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகளும், போட்டிப் பரீட்சைகளும் அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகவுள்ளன.

ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் மட்டுப்படுத்திய அளவிலான மாணவர்களே அனுமதிக்கப்படவுள்ளார்கள். பயிற்சி நெறிகளுக்காக அனுப்பப் பட்டுள்ள விண்ணப்பங்கள் அதிகமாகக் காணப்படும் பயிற்சி நெறிகளுக்கு போட்டிப் பரீட்சைகள் மூலம் உரிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தகுதியான விண்ணப் பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மட்டுப்படுத்தியளவிலான விண்ணப்பங்கள் மட்டும் கிடைக்கப் பெற்ற பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்களும் பகுதி பகுதியாக அனுப்பப்பட்டு வருகின்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-86)

## கண்ணீர் அஞ்சலி

### எமது உயிர் நண்பன் தியாகராசா குருநாதன்



அவர்கள் அகாலமரணமடைந்த செய்தி அறிந்து அதிர்ச்சியும், துயரும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மைதிலி நகைமாடம்,
89,V கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-553035)

பிரிவால் துயருறும்:
உரிமையாளரும்,
ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பூரணம்



மானிமனை, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பூரணம் நேற்று (28.06.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைரமுத்து சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் தர்மராஜா (நோர்வே), காலஞ்சென்றவர்களான கமலாதேவி, சகுந்தலாதேவி மற்றும் செல்வராசா, தியாகராஜா (லண்டன்), தவராசா (வெள்ளை) ஆகியோரின் அன்புத் தாயும் சிவகுரு, சாரதாதேவி (கொழும்பு), கிருஷ்ணகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சிவாகரன் மற்றும் தயாகரன் (லண்டன்), திரு.திருமதி ஜெகதீஸ்வரன் சுகந்தினி, சசிகரன் (மட்டக்களப்பு), சமீபன் (அமெரிக்கா), தர்சன், துசிந்தன் (கொழும்பு), லண்டனை வசிப்பிடமாகக் கொண்டவர்களான ஜெயன், ஜெனனி, ஜனார்த்தனன் ஆகியோரின் பேர்த்தியும் ஜேர்மனியை வசிப்பிடமாகக் கொண்ட விஷ்னுகா, ஜெசிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2008) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'மானிமனை',
டிப்போ லேன்,
மல்லாகம். (75861)

தகவல்:
சு.தவராசா
(வெள்ளை- மகன்).

## குடாநாட்டின் தரைக்கீழ்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் பயிருக்கு அடியில்நீரைச் செலுத்துதல், ஆவியாக்கம் ஆவியுயிர்ப்பைத் தடுப்பதற்கு சில இரசாயணங்களை நீரில் மிதக்கவிடல் போன்ற முறைகளைப் பின்பற்றி ஒரு துளி நீரும் வீணாகாமல் பாசன முகாமைத்துவ முறைகளை மக்கள் பின்பற்றும்படி செய்தல் வேண்டும்.

* நீர்வள அபிவிருத்தி தொடர்பான திட்டமிடலுக்கு பல்வேறு தரவுகள் தேவை. இதற்கு புவியியல், பொருளியல், புவிச்சரிதவியல், மண் ணியல், பொறியியல், விவசாய அறிவியல் போன்ற துறைசார் அறிஞர்கள் ஒன்று சேர்ந்து ஒரு அமைப்பாக இயங்க வேண்டும். யாழ்ப்பாணப் பிரதேசத்தை நீர்வள வலயங்களாக முதலில் வகுத்தல் வேண்டும். மழைநீர் ஓடைகள், குளங்கள், கிணறுகள் என்பவற்றை அவதானித்து நீர்ப்பீட ஆய்வு செய்து அவற்றின் அளவுகள், உவர்த்தன்மை, நீரின் கடினத்தன்மை, உரம் கிருமிநாசனிப் பாவனைகளால் நீர் மாசுபடும் தன்மை, ஆவியாக்கம், ஆவியுயிர்ப்பு, ஊடுவடித்தல் போன்ற அம்சங்கள் யாவும் கணிக்கப்பட்டு நீர்வள வலயங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படைத் தரவுகளின் துணையுடனேயே அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும். இந்த அடிப்படை கொண்டு ஆரம்பிக்கப்படும் திட்டங்கள் வெற்றி பெறுமென நம்பலாம்.

* யாழ்ப்பாணப் பிரதேச நீர்வள அபிவிருத்தியை எமக்கு வேண்டுவதான அபிவிருத்தியாக முன்னெடுத்துச் செல்வதற்கும் இவ்வள அபிவிருத்தி தொடர்பான கொள்கைகள், திட்டங்களை உருவாக்குவதற்கும் அவற்றை நிர்வகிப்பதற்கும் அப்பிரதேசங்கள் அவ்வப் பகுதி வாழ் மக்களின் நிர்வாகத்தினுள் வருதல் வேண்டும். அப்போதுதான் தங்கு தடையின்றி உள்நோக்கம் எதுவும் அற்ற விவசாய பாசன அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கலாம். இதனால் விவசாய உற் பத்தியில் நாம் தன்னிறைவு பெறுவது மாத்திரமின்றி மிகை உற்பத்தி செய்தலும் சாத்தியமாகும். *

## திருமண சேவை

ஆயிரத்திற்கு மேற்பட்ட மணமக்களின் கடிதக்கோப்புகள் கையிருப்புடையோர் ஒரு சிலரே. அவ்வொருசிலருள் ஒருவர் வேல் அமுதன். விவரங்களுக்கு திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில், சுய தெரிவுமுறை முன்னோடி, மூத்த புகழ்பூத்த சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனிடம் விசாரித்தறிக. வேல் அமுதனின் கொழும்பு நேரடித் தொலைபேசி: 2360488, 2360594, 4873929.

## வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல்

உயர் அதிகாரிகளோடு வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை (30.06.2008) திங்கள் காலை 7 மணிக்கு கல்வி வலயத்திற்கு முன்பாக நடைபெறவுள்ளது. அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

'உங்கள் வேலைவய்ப்பு உங்கள் கையில்'

கல்வித்திணைக்களம் அருகில்,
முத்திரைச்சந்தி. செயற்குழு.

## புறா விற்பனைக்கு

நல்லினப் புறாக்கள் முழுமையாக விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
டி.ஙி. றோஹான்,
அராலி வடக்கு, செட்டியார் மடம்,
வட்டுக்கோட்டை.
தொலைபேசி இல.:
0779384268
(75856)

## தவறிவிட்டது

மகாலிங்கம் தீபன், தம்மளை, சங்குவேலி வடக்கு, மானிப்பாய் என்னும் விலாசமுடைய எனது தேசிய அடையாள அட்டை, இராணுவ அடையாள அட்டை மற்றும் A.T.M. காட் ஆகியன அடங்கிய சிறிய பை 27.06.2008 அன்று கன்னாதிட்டிச் சந்திக்கும் இந்துக் கல்லூரிக்கும் (கஸ்தூரியார் வீதி) இடையே தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையில் உள்ள விலாசத்திற்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே.: 0775148621

## தவறிவிட்டது

கிருஸ்ணகுமார் விஜயலதா என்பவருடைய தே.அ.அட்டை (846144633V) விசேட அ. அட்டை என்பன அடங்கிய பை 18.06.2008 அன்று சுன்னாகத்திற்கும் அளவெட்டிக்கும் இடையில் மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: ரூபன் கடை, அளவெட்டி (எரிஞ்ச பேக்கரியடி).
T.P.:- 0779358262

## தேவை

நல்ல பாவனையில் உள்ள LML SLECT II ஸ்கூட்டர் விற்பனைக்கு இருப்பின் தொடர்பு கொள்ளவும்.

மு.விமலநாதன்
இல.372, [illegible]
T.P.:- 021 222 9926

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலிக் காணிக்கை

தாயின் மடியில் 13 . 12 . 1936



தெய்வ பாதத்தில் 29 . 06 . 2003

### திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை

எம்மைப் பெற்றெடுத்த கோயிலே..... எம்மைத் தாங்கிய பெருந் தெய்வமே....
எங்கு சென்றாலும் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் என் தாயே உனைப்போல் யாருண்டு?
அன்புக்கு இலக்கணமான அம்மாவே! பாசத்திற்கு வரையறை கொடுக்கும் மாதாவே!
நீங்கள் சொன்ன கதைகள் தான் எத்தனை எத்தனை இன்று கண்ணீர் பெருவெள்ளமாக
கணப்பொழுதில் நோய்கொண்டு போனதோ என் தாயே! ஐந்து வருடங்களாகியும் இன்று போல்
என்றும் உங்கள் பிரிவைத் தாங்க முடியவில்லையே! தெய்வ பதம் சென்ற எம் தெய்வமே!
உங்களுக்கு எமது நினைவஞ்சலிப் பூக்கள் சமர்ப்பணம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.26/2, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (75860)

பிரிவால் என்றும் வாடும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சங்கரப்பிள்ளை தங்கராணி



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை தங்கராணி நேற்று(28.06.2008) சனிக்கிழமை கனடாவில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Mr.Sashee Sankarappilai,
P.O. Box 1214,
OLIVER
Bc VOHITO,Canada. (75869)

தகவல்:
ரங்கராஜா முருகன்

### கதிரவேலு ஐயாத்துரை

(வாகையடி ஐயாத்துரை அண்ணை)



மீசாலை மேற்கு, வங்களா வீதி, வாகையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஐயாத்துரை நேற்று (28.06.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேல்லு- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் இளையதம்பி- செல்லமுத்து தம்பதியரின் மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் தங்கராசா, செல்வராசா, இராசபூமணி, சிவராசா, நடேசபிள்ளை, இராஜேஸ்வரி, சிவப்பிரகாசம், நவரத்தினம், இராதாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்வோதயமங்கை, மல்லிகாதேவி, இராசதுரை, றோகினி, வள்ளியம்மை, ஞானேந்திரம், சுகிர்தா, முருகையா, இலங்கைநாயகி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மீசாலை மேற்கு, கரும்பிமாவடி கந்தசாமி கோயில் அருகில் அமைந்துள்ள மகனின் இல்லத்தில் இன்று (29.06.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை மேற்கு. (சி/553534)

தகவல்:
ப.வே.இராசரத்தினம் J.P.
(குட்டிவிதானை- சகலன்).

### திருமதி நல்லையா செல்லம்மா



தச்சந்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா செல்லம்மா 23.06.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் நல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரியும் பாலசிங்கம், பஞ்சாட்சரம் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி, மல்லிகாதேவி, சீதாலட்சுமி (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), சிறீ (பிரான்ஸ்), சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயும் பரமேஸ்வரி, புவனசுந்தரி, (பிரான்ஸ்), பரமேஸ்வரன், பவளராசா, அருமைத்துரை (பிரான்ஸ்), மகாலட்சுமி(பிரான்ஸ்), ஆனந்தி (பிரான்ஸ்), சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் வினிதன் (பிரான்ஸ்), விகுந்தன் (பிரான்ஸ்), விஜயன் (பிரான்ஸ்), வித்தியா, விமலன், விகுந்தா, வினோதினி, நிரூஷா (பிரான்ஸ்), நிசாந்தன் (பிரான்ஸ்), நிரஞ்சனா (பிரான்ஸ்), மதரங்கா, தயாபானி, தனுஜா, பாஸ்கரன் (பிரான்ஸ்), விதுர்சா, நதீஸ், ராதா (பிரான்ஸ்), அனிதா (பிரான்ஸ்), அசோக் (பிரான்ஸ்), அகில் (பிரான்ஸ்), அபிதா (பிரான்ஸ்), பிரதீபன் (பிரான்ஸ்), பிரதீபா (பிரான்ஸ்), பார்த்தீபன் (பிரான்ஸ்), சிறித்தனா (பிரான்ஸ்), சயிதா (பிரான்ஸ்), நிருஜன் (பிரான்ஸ்), சவிதா, லிவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சோபிதனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலன்பிராய் பிணமுருங்கை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தச்சந்தோப்பு,
கைதடி. (75867)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இலங்கை அரசை அரவணைத்து தமிழரைப் புறந்தள்ளும் பாரதம்

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழர் தரப்பின் பிரதிநிதியான தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு தீண்டத்தகாத தரப்பினர் போல நமது அயல் பாரத தேசம் கருதுகின்றது. ஈழத்தமிழர்களின் மனதைப் பெரிதும் புண்படுத்தும் விடயம் இது.

ராஜீவ்காந்தி படுகொலைச் சம்பவத்தைக் காட்டி புலிகளையும் தமிழர்களையும் விரோதிகள் போலத் தள்ளி வைத்து நடக்கும் இந்திய தேசத்திற்கு உறைப்பாகக் கொடுத்திருக்கின்றார் தமிழ்த்தேசியக் கூட் டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட எம்.பியுமான இரா. சம்பந்தன்.

கொழும்புக்கு வந்திருந்த இந்திய உயர்மட்ட இராஜந்திரிகள் குழுவினரைத் தாம் ஒருவராக - தனியாக- சந்தித்து, ஈழத்தமிழர்களுக்காக வாதாடிய சமயமே இது விடயத்தில் இந்தியத் தரப்புக்கு சில விடயங்களையும் காட்டமாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் அவர் என்று அறிய வந்திருக்கின்றது.

ராஜீவ்காந்தியை புலிகளே கொன்றனர் என்று குற்றம் சுமத்தும் இந்தியா, அதனால் புலிகளுடன் தான் எந்தத் தொடர்பாடலையும் வைத்திருக்க மாட்டாது என்று கூறுகின்றது.

ராஜீவ்காந்தி படுகொலைச் சம்பவத்தை தனி ஒரு கொலைச் சம்பவமாகப் பார்க்கக் கூடாது. அந்தக் காலகட்டத்தில் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்ந்த இந்திய அமைதிப் படைகளின் இராணுவ நடவடிக்கை உட் பட்ட போரியல் போக்கினதும் அரசியல், இராஜதந்திரக் காய் நகர்த்தலின் பின்புலத்திலும் வைத்து, ஒட்டு மொத்த சூழ்நிலைக்கு அமையவே, அச்சம்பவத்தை நோக்க வேண்டும் - கருத்தில் எடுக்கவேண்டும் - என்பதை விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அமரர் அன்ரன் பாலசிங்கம் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளமை இங்கு, கவனிக்கத்தக்கது.

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட சமயம் அவர் இந்தியப் பிரதமராக பதவி வகிக்கவில்லை. அடுத்த இந்தியப் பிரதமராக தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு அவருக்கு அதிகம் இருந்தது அவ்வளவே.

ஆனால், ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தபோதே- இந்தியாவின் அரசுத் தலைவராக பொறுப்பு வகித்த சமயமே - படு கொலை முயற்சிக்கு உள்ளானார் அதுவும் பட்டப் பகலில் பலரும் பார்த்திருக்க அந்த முயற்சி நடந்தது.

அதுவும் வேறெங்கும் அல்ல. இலங்கையின் தலைநகர் கொழும்பில்தான் இந்திய அரசின் தலைவராக இலங்கைக்கு விஜயம் செய்து, இலங்கைத் தரப்பின் வர வேற்பு படையினரின் அணிவகுப்பு மரியாதையை- அவர் ஏற்ற சமயமே, இலங்கையின் அரசுத் தலைவரான ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் கண்முன்னாலேயே அந்தக் கொலை முயற்சி நடந்தது. நல்ல வேளையாக- முன்னெச்சரிக்கையாக- அணி வகுப்பு மரியாதையில் பங்கு பற்றி, அணி வகுப்பில் ஈடுபட்ட இலங்கைப் படையினரின் துப்பாக்கிகளுக்கு உயிர்ப்பான ரவைகள் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் ராஜீவ் தப்பிப்பிழைத்தார்.

அணிவகுப்பில் கலந்துகொண்ட பேரினவாத சிங்களச் சிப்பாய் ஒருவர் தனது துப்பாக்கியில் ரவைகளோ சன்னங்களோ இல்லாத நிலையில் வேறு வழியின்றி தனது துப்பாக்கியால் தாக்கி ராஜீவ்காந்தியை கொல்ல முயன்றார். அதிவேக பிரதிபலிப்பு எதிர் விளைவைக் காட்டும் உசார் நிலையில் பிரதமர் ராஜீவ் காந்தி இருந் தமையால் அவர் சடார் என விலகித் தப்பிக்கொண்டார். துப்பாக்கி மடலின் அடி அவரின் தோள் மூட்டில் விழுந்ததால் அவர் தப்பினார். வலுவேகமாக- கணப்பொழுதில் ராஜீவ் விலகி இருக்காவிட்டால் துப்பாக்கியின் கனமான பிடி ராஜீவ்காந்தியின் நடு மண்டையில் இறங்கி இருக்கும். அவர் அந்த இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் கிடந்திருப்பார்.

சரி இலங்கை அரசின் படைச் சிப்பாயாக இருந்து அயல் தேசத்தின் அரசுத் தலைவரை இலங்கை வரவேற்று உபசரித்த ஒரு நிகழ்வில் வைத்து, அவரைப் படுகொலை செய்ய முயன்ற அந்த நபர் என்னவானார்?

நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்ட அவருக்கு இலங்கை நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்தது. ஆனால், இலங்கை அரசும் அதன் ஜனாதிபதி யும் என்ன செய்தார்கள்?

தமது நாட்டுக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமரை- பலர் பார்த்திருக்க பகிரங்கமாக படுகொலை செய்ய முயன்ற நபருக்கு நீதிமன்றம் கொடுத்த சிறைத் தண்டனையை ரத்துச்செய்து, அவருக்கு மன்னிப்பு அளித்து விடுவித்தமையும் மாத்திரம் அல்லாமல், அவரை ஒரு தேசிய வீரராக- தேசப்பற்றுள்ள ஹீரோவாக காட்டப் பெற்று, அரசியல் உரிமைகளை வழங்கி, தேர்தலிலும் போட்டியிட்டு செல்வாக்குப் பெறுவதற்கு இலங்கை அரசுத் தலைமை வழியும் செய்து கொடுத்திருக்கின்றது.

பிரதமராக இருந்த ராஜீவை, கொழும்புக்கு அழைத்து அங்குவைத்து படுகொலை செய்ய- அதுவும் பலரும் நேரில் பார்த்திருக்கப் படுகொலை செய்ய- முயன்றவருக்கு அவரின் சிறைத்தண்டனையை ரத்துச் செய்து, அவரை தேசிய ஹீரோவாகக் கொண்டுபோய் நிறுத்தியது இலங்கை அரசு.

அத்தகைய இலங்கை அரசுடன் வேற்றுமை பாராட்டாது ஒரு தரப்பினராக அதை ஏற்று கௌரவம் வழங்கிப் பேசும் இந்தியா-

இந்தியப் படைகள் மூலம் ஈழத்தமிழ் மண்ணை ஆக்கிரமித்துப் பெரும் கொடூரங்களை அளவு கணக்கின்றி ஈழத்தமிழருக்கு புரிந்த இந்தியாவை ஈழத்தமிழர்கள் அந்தக் கசப்புக்களை மறந்து மன்னித்துவிட்டு, அரவணைக்க முயலும்போது அவர்களை உதாசீனம் செய்து அவர்களது நட்புக் கரங்களை நிராகரித்து விட்டு-

தென்னிலங்கைத் தரப்போடு போய் - பௌத்த சிங்கள பேரினவாதத்தோடு- கொஞ்சிக் குலாவுவது அபத்தத்திலும் அபத்தம்.

இதை கொழும்பு வந்திருந்த இந்திய உயர்குழுவிடம் காட்டமாக எடுத்துரைத்து உறைப்பாக கொடுத்தார் சம்பந்தர்.

அது இந்தியத் தரப்புக்கு புரிந்ததோ என்னவோ...!

# மாவை ஆதீனத்தின் மூலம் முத்தமிழ் வளர்த்துப் பெரும்பணி ஆற்றிய பல்துறைப் புலமையாளர்

*கேள்வி:-* நீங்கள் எவ்வளவு காலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதீன முதல்வராக இருக்கின்றீர்கள். அந்த ஆலயத்தின் தற்போதைய நிலை எவ்வாறு இருக்கிறது?

*ப:-* நான் கடந்த 31 வருடங்களாக மாவைக்கந்தன் ஆதீன முதல்வராக இருக்கிறேன். மிக நீண்ட வரலாற்றுப் பெருமை கொண்ட இந்த ஆலயம் 1991 ஆம் ஆண்டு பேரழிவைச் சந் தித்தது. ஆதி மூலத்தைத் தவிர ஏனைய கட்டடங்கள் அனைத்தும் குண்டு வீச்சினால் அழிக்கப்பட்டன. பின்னர் அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவுடனும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் தொடர்பு கொண்டு புனர்நிர்மாணப் பணிகளை ஆரம்பித்தேன். இப்போது 60வீதமான பணிகள் நிறைவ டைந்துள்ளன.

*கே:-* மாவை ஆதீனத்தைத் தளமாகக் கொண்டு கலை வளர்த்த 'மாவை முத் தமிழ் கலாமன்றத்தின்' செயற்பாடுகள் பற்றிக் கூறுங்கள்

*ப:-* 1955 இல் ஆரம்பிக்கப்பட்டு 1970 வரை செயற்பட்ட முத்தமிழ் கலாமன்றம் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் களின் வளர்ச்சிக்கும் உழைத்தது. முதலில் நாடகத்துறையை பார்த்தார் பரமேஸ்வராக் கல்லூரியிலே நான் கற்றகாலத்திலே எனக்கு நாடகத் துறையில் ஆர்வம் ஏற்பட் டது. அங்கு கற்பித்த எம்.பி.பிள்ளை 1946 ஆம் ஆண்டு எழுதிய சுந்தரமூர்த்திநாயனார் நாடகத்தில் நான் அந்தணனாக நடித்தேன். இதனைத் தொடர்ந்து பல ஓரங்க நாடகங்களை நான் எழுதத் தொடங்கினேன்.

*கே:-* முத்தமிழ் கலாமன்றத்தில் எந் தெந்த நாடகங்களை அரங்கேற்றம் செய்தீர்கள்?

*ப:-* இந்தக் கலாமன்றத்தின் ஆண்டு விழாக்களில் எனது நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. செங்கோல் சரிந் தது, பரதன், 'வணங்கினார், மன்னார்சாமி முதலிய ஐந்து நாடகங்கள் இங்கு நடிக்கப்பட்டன. இவற்றின் இயக்குநரும் நானே. இவ்வேளை எனக்குக் கிடைத்த நாடகக்கலைஞர் ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களின் நட்பும் நாடகத் துறையில் எனது வளர்ச்சிக்கு உதவியது. அதேநேரம் அவரைத் தீவிர சமயபக்தனாக்கிய பெருமை எனக்குரியது. வசந்தமண்டபத் திருப்பணிக்காக அவரது "தாளக்காவடி" என்ற நாட கம் 1976 ஆம் ஆண்டு மேடை ஏற்றப்பட்டது.

*கே:-* இசைத்துறை வளர்ச்சிக்கு இம் மன்றம் எத்தகைய பணிகளை ஆற்றியது?

*ப:-* வருடந்தோறும் ஈழத்தின் முன்னணி இசைக்கலைஞர்களை அழைத்து அவர்களது கச்சேரியை நிகழ்த்தினோம். இவ்வகையில் இசைமணி செல்லத்துரை, அ.சத்தியலிங்கம், உடுவில் சண்முகரத்தினம் ஆகியோர் இங்கு கச்சேரி செய்தவர் களில் முக்கியமானவர்கள். தென்னிந்தியப் பாடகியான கே.பி.சுந்தராம்பாள் அவர்கள் இங்கு வந்து கச்சேரி செய்த வேளை மறக்க முடியாத சம்பவம் ஒன்று ஏற்பட்டது. என் சொல்லைக் கேளாது சாஸ்திரமுறைக்கு விரோதமாக மேடை அமைக்கப்பட்டது. கச்சேரி தொடங்க பெரும் மழை பொழிந்து நிகழ்ச்சியை குழப்பியது. பின்னர் மேடை சாஸ்திரமுறைப்படி திருத்தப் பட்ட பின்னரே மழை ஓய்ந்து மீண்டும் கச்சேரி நிகழ்ந்தது.

*கே:-* முத்தமிழ்க் கலாமன்றத்தின் இயல் துறைப் பணிகள் எவை?

*ப:-* சிறந்த கவிஞரான நவநீத கிருஷ்ண பாரதியார், இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர், ஏ.ரி.பொன்னுத் துரை ஆகியோர் இயல்துறையின் செயற்பாட்டிற்கு வழி காட்டிகளாக இருந்தனர். இலக்கிய சொற் பொழிவுகள், கதாப்பிரசங்கம் என்பவை நிகழ்த்தப்பட்டன. இலக்கிய விழாக்களில் சமய சந்தர்ப்பத்திற்கேற்ப நானும் பலதடவை உரையாற்றியிருக்கிறேன்.

## 82 ஆவது வயதில் ஐந்து நாவல்களை வெளியிடத் தயாராகும் குருக்கள்



கடந்த 31 வருடங்களாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதீன கர்த்தாவாக விளங்குபவர் மகாராஜ ஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள். மாவை ஆதீனம் மூலம் இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறைகளுக்கும் பெரும் பணியாற்றியவர். சிற்பக்கலை, கட்டடக்கலை என்பவற்றில் அறிவும் ஆர்வமும் உடையவர். சமய சம்பந்தமான பல நூல்களை வெளியிட்டவர். "எழுதிச் செல்லும் விதியின் கை" எனும் நாவலை வெளியிட் டுள்ளதுடன் இன்னும் ஐந்து நாவல்களை வெளியிடத்தயாராக உள்ளார். சிறந்த சமயப் பேச்சாளராகவும் திகழ்ந்தவர்.

தமது 82 ஆவது வயதில் காலடி வைத்துள்ள பன்முகப் புலமையாளரை தற்போது அவர் வசிக்கும் மல்லாகம் இல்லத்திலே சந்தித்தோம்.

*கே:* ஒரு காலத்தில் ஈழத்தின் சிறந்த பேச்சாளர்களில் ஒருவராக விளங்கியிருக் கிறீர்கள். உங்களது சொற்பொழிவு சிறப் பானதாக அமையக் காரணம் என்ன?

*ப:* எனது வாசிப்புத் தான் காரணம். ஏறக் குறைய 3000 நூல்கள் வரை வாசித்திருக் கிறேன். இவை கட்டுரை, நாவல், சிறுகதை நூல்களாக இருந்தன. ரவீந்திர நாத்தாகூர், சி.என்.அண்ணாத் துரை போன்றோரின் நூல்களில் இருந்தும் தகவல்களைச் சேர்த்தேன். இந்த தகவல்கள் தான் எனது பேச்சின் சிறப்புக்கு காரணமாக அமைந்தன.

## அருகிவரும் சைவசமய மரபுகள், சிந்தனைகளை பாதுகாப்பதற்கு உகந்த திட்டம் உடன் தேவை

*கே:* நீங்கள் வெளியிட்ட நூல்கள் பற்றி கூறுங்கள்.

*ப:* எனது நூல்கள் பெரும்பாலும் சமயம் சார்ந்தவையாக இருந்தன. வருடாந்தம் ஒரு நூல் என்ற வகையில் எனது வெளியீடு அமைந்திருந்தது. தைப்பூசம், மார்கழி நீராடல், மாவைத் தல வரலாறு என்பவை குறிப்பிடத் தக்க நூல்களாகும்.

*கே:* என்னென்ன நாவல்களை எழுதியிருக்கிறீர்கள்.

ப: 'எழுதிச் செல்லும் விதியின்கை' என்ற நாவல் வெளிவந்துள்ளது. இது சோதிடக் கலையில் கொண்ட நம்பிக்கையை பின்னணியாகக் கொண்டது. இலக்கியப்பிரளயம், பூரண ஆகுதி, அம்பிகையானாற் சங்கரி முதலிய ஐந்து நாவல்கள் அச்சிட் தயாராக உள்ளன.

*கே:* தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் மாத்திரமின்றி ஆங்கில மொழியிலும் நீங்கள் புலமை உடையவர் என்று கூறப்படுகிறது. இப்புலமை எவ்வாறு ஏ[illegible]ட்டது.

*ப:* வீமன்காமம் ஆங்கில வித்தியாசாலையில் எனக்கு கற்பித்த ரட்னவரதர், பரமேஸ்வராக் கல்லூரி அதிபர், சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரனார் ஆகியோர் எனது ஆங்கில அறிவுக்கு காரணமாக அமைந்தனர். ஷேக்ஸ்பியர், ஆர்.எல்.ஸ்ரீவன்சன் ஆகியோரது நூல்களில் இருந்தும் எனது ஆங்கில அறிவை விருத்தி செய்து கொண்டேன். நான் ஆங்கில மொழியில் நடத்தப்பட்ட பொது எழுது வினைஞர் சேவைக்குத் தெரிவான போதும் பேராசிரியர் சுந்தரலிங்கம், லக்ஸ்மண ஐயர் ஆகியோர் அவ் வேலைக்கு செல்ல விடாமல் தடுத்து சமயத்தின் பக்கம் திருப்பி விட்டனர்.

*கே:* யாழ்ப்பாணத்தில் உள்ள சிற்பத்துறை வல்லுநர்களில் ஒருவராக கருதப்படும் உங்களின் அனுபவத்தைக் கூறுங்கள்?

*ப:* பொதுவாகவே ஈழத்து ஆலய அறங்காவலர்களிடம் சிறப நூற் பயிற்சி குறைவாகவே உள்ளது. ஆலயங்களைச் சிற்ப்ப சாஸ்த்திரத்துக்கு ஏற்றவகையில் கட்டுவிக்க விரும்பினேன். இதற்காகப் பெங்களூர் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து நூல்களைப் பெற்று சோமசுந்தர ஸ்தபதி, பெரியசாமி ஸ்தபதி/ ஆகியோரின் துணையுடன் கற்றுக்கொண்டேன். இப்போது நடைபெறும் மாவை ஆலய திருப்பணிகள் யாவும் எனது மேற்பார்வையின் கீழேயே நடைபெறுகின்றன.

செவ்வி
ம.பா.மகாலிங்கசிவம்.

*கே:* செய்தியின் நிறைவாக "உதயன்" வாசகர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் செய்தி என்ன?

*ப:* அரசியற் சூழல் சைவசமய சமுதாயத்தை நிர் மூலமாக்கி விட்டது. பாடசாலைகளிலும் போதுமான சமய விருத்தி இல்லை. ஆறுமுகம் நாவலருடைய சிந்தனைகள் மறைந்து கொண்டே செல்கின்றன. மாதா, பிதா, குரு - தெய்வம் என்ற வழமை அருகி வருகிறது. இந்த நிலையைப் போக்குவதற்கு அறிஞர் பெரு மக்கள் கூடி ஆராய்ந்து உகந்த வழிமுறைகளை கண்டறிய வேண்டியது இன்றைய அவசிய தேவையாகும். *

## நாளை

| | |
|---|---|
| ஆனி 16 | 30.06.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | துவாதசி |
| | பி.ப. 04.16 வரை |
| நட்சத்திரம் : | கார்த்திகை |
| | மாலை. 06.11 |
| பிரதோச விரதம் | |
| சுபநேரம் : | 11.56 - 01.26 |
| ராகுகாலம் : | 07.26 - 08.56 |

# உரும்பிராய்ச் சந்தியில் மினிபஸ் விபத்து: சைக்கிள் பயணி மரணம்; ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம், ஜூன் 29

உரும்பிராய்ச் சந்தியில் நேற்றுப் பகல் 10.45 மணிக்கு இடம்பெற்ற மினிபஸ் - சைக்கிள் விபத்தில் ஒருவர் பலியானார் .

யாழ்.புன்னாலைக்கட்டுவன் வீதியில் பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்று மின் கம்பத்துடன் மோதியதில் இடையில் சிக்கிய சைக்கிள் பயணி ஒருவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட் டார்.

அவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அங்கு மரணமானார் , அவர் யார் என்று அடையாளம் காணப்படவில்லை. விபத்துக்குள்ளான மினி பஸ்சில் பயணம் செய்த கல்வியங்காடு, ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த யோகராசா சாந்தகுமாரி (வயது 44) என்பவர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (1-203)

# பரிசளிப்பு விழாவும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

கட்டப்பிராய் முத்துமாரியம்மன் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் அண்மையில் காலமான சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் ஆலய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

செங்குந்த இந்துக் கல்லூரி ஆசிரியர் தி. ரவீந்திரநாதன் தலைமை யில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகம் கலந்துகொள்கிறார். (அ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மாரைப் போல இலங்கையையும் சீனா தன்பக்கம் இழுக்கும் என புதுடில்லி பீதி!

## அதனால்தான் அதன் உயர்மட்டக்குழு கொழும்பு வந்ததாம்

கொழும்பு, ஜூன் 29

இலங்கை தனது பூகோள, அரசியல் வாய்ப்புகளைப் பரவலாக்க வேண்டும் என்ற இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொள்கையைப் பயன்படுத்தி மியன்மாரில் செய்ததை சீனா இலங்கையிலும் செய்கின்றதா என்ற கேள்வி புதுடில்லியில் காணப்படுவதாக இந்திய முன்னாள் புலனாய்வு அதிகாரி பி.ராமன் தெரிவித்துள்ளார்.

மலேசியா, ஈரான், சவூதி அரேபியாவை இலங்கைக்குள் கொண்டு வரும் மஹிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கையால் இலங்கை மீதான இந்தியாவின் செல்வாக்கு மென்மேலும் குறையலாம் எனத் தெரிவித்துள்ள அவர், இது தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இந்தியாவுடன் நெருக்கமான நட்புறவை விரும்புவதாக இலங்கை தெரிவிக்கும் அதேவேளை, இலங்கை தனது பூகோள அரசியல் வாய்ப்புகளைப் பரவலாக்க வேண்டும் என்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொள்கையைப் பயன்படுத்தி சீனா தான் மியன்மாரில் செய்ததை இலங்கையிலும் செய்ய முயற்சிக்கின்றதா?

இந்தியாவின் கவலைக்குரிய விடயங்களில் இதுவுமொன்றாகக் காணப்படுவதுடன் பிரதமர் மன்மோகன் சிங்கின் மூத்த ஆலோசகர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டமைக்கு இதுவே முக்கிய காரணமாகவுமுள்ளது.

கடந்த செப்ரெம்பரில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டமைக்குப் பதிலாகவே இவ் விடயம் சித்திரிக்கப்பட்டதுடன் சார்க் உச்சி மாநாட்டிற்கான முன்னோடி ஏற்பாடுகள் குறித்து ஆராயவும் இது இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சார்க் உச்சிமாநாடு கொழும்பை விடப் பாதுகாப்புப் பிரச்சினைகள் குறைவாக உள்ள கண்டியிலேயே இடம்பெற்றிருக்க வேண்டும். எனினும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கருத்தில்கொண்டு அதனைக் கொழும்பிற்கு மாற்ற இலங்கை அரசு தீர்மானித்தது.

எனினும் சார்க் உச்சிமாநாடு கொழும்பிற்கு மாற்றப்பட்டமை இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனையை அதிகரித்துள்ளது.

இலங்கை கடந்த காலங்களிலும் 6 ஆவது, 10 ஆவது சார்க் உச்சி மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளதுடன் தலைவர்களுக்கு சிறப்பான பாதுகாப்பையும் வழங்கியிருந்தது.

15 ஆவது சார்க் உச்சிமாநாடு வடபகுதியை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்பதற்குப் பெருமளவு இராணுவத்தினர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தருணத்தில் இடம்பெறுகின்றது. கடும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ள விடுதலைப் புலிகள் கொழும்பைச் சுற்றியுள்ள பகுதிகளில் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

**புலிகளின் விமானங்கள் எங்கிருந்து புறப்படுகின்றன என்பதை இலங்கைப் படையினர் கண்டுபிடிக்க வில்லை**

மேலும் கடந்த மார்ச் மாதத்திலிருந்து விடுதலைப் புலிகள் விமானங்களைப் பயன்படுத்தித் தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளனர்.

இந்த விமானங்கள் எங்கு மறைத்து வைக்கப்படுகின்றன, எங்கிருந்து தாக்குதலுக்காகப் புறப்படுகின்றன என்பதைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் இலங்கைப் படையினர் உள்ளமையும், உச்சிமாநாட்டிற்கு முன்னதான பாதுகாப்புச் சூழலை கவலைக்குரியதாக்கியுள்ளது.

விடுதலைப் புலிகள் உச்சிமாநாட்டின் மீதோ அல்லது அதில் கலந்துகொள்பவர்கள் மீதோ தாக்குதலை மேற்கொள்ளப் போவதில்லை.

அதேவேளை, விடுதலைப் புலிகள் மீள எழ முடியாத நிலைக்குப் பலவீனப்படுத்தப்பட்டுள்ளனர் என்ற அரசின் கூற்றுப் பிழையானது எனக் காண்பிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கான தருணம் இதன் மூலம் அவர்களுக்கு உருவாகியுள்ளது.

சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் மற்றும் இந்தியப் பிரதமருக்கும் வலுவான பாதுகாப்பை அளிக்கும் நிலையில் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் உள்ளனரா என்பதை ஆராய்வதும் இந்த அதிகாரிகள் குழுவின் விஜயத்தின் நோக்கம்.

இலங்கைக்குள் ஏனைய வெளிநாட்டு சக்திகளைக் கொண்டுவரும் ராஜபக்ஷ வின் கொள்கையினால் இந்தியாவிற்கு உண்டாகக் கூடிய பாதிப்பை மதிப்பிடுவ தும் இந்த விஜயத்தின் இன்னுமொரு நோக்கமாகும்.

கடந்த காலங்களில் இந்தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா குறித்து மாத்திரம் கவலையடைய வேண்டியிருந்தது.

எனினும், தற்போது ராஜபக்ஷ ஈரான், சவூதி அரேபியா, மலேஷியா போன்ற நாடுகளையும் உபசரிக்கத் தொடங்கியுள்ளார்.

ஈரான், இலங்கையின் எண்ணெய் சுத்திகரிப்பு நடவடிக்கையில் முக்கிய பங்காற்றத் தொடங்கியுள்ளது. வெகுவிரைவில் அந்தநாடு எண்ணெய் விற்பனையில் தனக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனக் கோரலாம்.

இந்தத் துறையில் இந்தியாவே இது வரை முன்னணி பங்காற்றியது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

---

## தமிழர்களின்...

(முதலாம் ப்க்கத் தொடர்ச்சி)

எதிரானவையல்ல. பயங்கரவாதத்தை ஒழித்து, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை பெற்றுக்கொடுக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது.

பயங்கரவாதிகளின் பகுதிளுக்கு மருந்து, உணவுப்பொருள்களை அனுப்பும் ஒரே அரசாங்கம் இலங்கையிலேயே உள்ளது. உலகில் வேறெங்கிலும் பயங்கரவாதிகளின் பகுதிக்கு உணவு, மருந்து அனுப்பப்படுவதில்லை. பயங்கரவாதம் பல நாடுகளில் உள்ளது. அதனை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால், அங்கு மனித உரிமைகள் குறித்து பேசப்படுவதில்லை. ஆனால் இங்கு மனித உரிமை மீறல் குறித்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் நடவடிக்கை பயங்கரவாதத்திற்கு எதிரானதே தவிர தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல.தமிழ் மக்களின் ஜனநாயகத்தைப் பறிப்பவர்களுக்கு எதிரானது என்பது மட்டுமல்லாது தமிழ் மக்களின் ஜனநாயகத்திற்கு உயிர்மூச்சை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையாகும். இதில் எவ்விதத்திலும் மனித உரிமைகள் மீறப்படவில்லை.

பிரச்சினைகள், கோரிக்கைகளுக்கு பேச்சுவார்த்தையின் மூலமாகவே தீர்வு காணவேண்டும். பிக்கு மாணவர்களின் பிரச்சினைக்கு அவ்வாறான வழியில் தீர்வினை கண்டிருக்கலாம். எனினும் பிக்கு மாணவர்கள் ஆர்பாட்டங்கள் மூலமாக தங்களது எதிர்பினை வெளிக்காட்டியுள்ளனர். பௌத்த பிக்குகள் கலகத்தை ஏற்படுத்த மாட்டார்கள். கலகத்தை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகவே கலகம் அடக்கும் பொலிஸாரை ஈடுபடுத்த வேண்டும். பிக்குகள், பிக்கு பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது கலகம் அடக்கும் பொலிஸாரை ஈடுபடுத்த வேண்டாம் என்பதுடன் போராட்டம் என்னும் பெயரில் மாணவர்களை பலி எடுக்க வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட அரசியல் சக்தி களி டம் கேட்டுக்கொள்கின்றேன்.

பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமாகவே தீர்வுகாண வேண்டும். அரசியல் இலாபத்திற்காக இவ்வாறான நட வடிக்கைகளில் பல்கலைக்கழக மாணவர்களையும் ஈடுபடுத்தக் கூடாது - என்றார் அவர். (1)

---

## 266 அரச..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி தொழிற்சங்கங்களைச் சந்திக்க அழைப்பு விடுத்துள்ளார். இந்தப் பேச்சுக்கள் இன்று அலரி மாளிகையில் இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பை பெரும்பாலான அமைப்புகள் புறக்கணிக்க உள்ளதாக அறியப்படுகிறது.

இதேவேளை-

ஜூலை மாதம் பத்தாம் திகதி வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் சுகாதார அமைச்சைச் சேர்ந்த தற்காலிக, சமயா சமய ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவர் என்று சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ-01)

---

## துன்னாலை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்ட பின்னர் பலாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இச்சம்பவத்தை அடுத்து நேற்றுக் காலை அந்தப்பகுதியில் பெரும் எடுப்பில் தேடுதல் நடத்தப்பட்டது. தேடுதல் மாலை வரை இடம்பெற்ற போதும் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

தேடுதல் நடவடிக்கை காரணமாக மந்திகை- சாவகச்சேரி போக்குவரத்து சில மணி நேரம் தடைபட்டிருந்தது. (அ-155-218)


SUBRA (14)
சித்தன் கேணி
GEOGRAPHY 2008 & DAY
துரிதமீட்டலும் வினாவிடையும்
செவ்- 6.15-8.00
மானிடப் புவியியல்
வியாழன்- 7.00-8.00
கற்றாடல் புவியியல்
சனி, ஞாயிறு- 6.15-8.00
செய்முறைப் புவியியல்
10 ஆண்டு கடந்த கால வினாக்கள்
மாதிரிப் பயிற்சிகள்
இலவச கையேடுகள்


---

## வவுனியாவில் வெள்ளியிரவு குடும்ப பெண் சுட்டுக்கொலை

வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளத்தில் குடும்பப் பெண் ஒருவர் வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு இனந்தெரி யாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த நாகராசா சுபத்திரா (வயது 31) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.தமது கணவருடன் மோட்டார் சைக்கி ளில் சென்றுகொண்டிருந்த பெண்ணை மயானம் ஒன்றில் ஒளிந்திருந்த ஆயுததாரி கள் சுட்டுக் கொன்றதாக பொலீஸார் தெரி வித்தனர்.

அவரது கணவர் காயம் இன்றித்தப்பிவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மல்லாவியைச் சேர்ந்த பிரஸ்தாப பெண் வவுனியாவில் புடைவைக் கடை ஒன்றில் பணியாற்றி வந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

---

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பம் தொடர்பாக வாகனத் தின் சாரதியையும் "கராஜில்" பணிபுரியும் மூவரையும் கைது செய்துள்ளதாகவும் அவர்கள் இன்று மல்லாகம் நீதிவான் முன் ஆஜர் செய்யப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-1)

---

## பிரபாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

க்குக் கிடைக்க வேண்டும்.

அவரிடமிருந்து அழைப்புக் கிடைத்தால் பேச்சுக்கான சூழல் உருவாகும் - என்று நான் நம்புகிறேன் - என்று இது குறித்து கருத்து வெளியிட்டார் அமைச் சர் நிமால் சிறிபால டி.சில்வா.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலவார இதழுக்கு அவர் தமது இந்தக் கருத்தை வெளியிட்டார். (அ-1)

---

## மன்மோகன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் படை அணியினரில் 1, 500 பேர் நேற்று வரை கொழும்பு வந்து சேர்ந்துள்ளதாக ஒரு தகவல் தெரிவித்தது. (அ-1)


சிறைக்காவலர்களுக்கான போட்டிப் பரீட்சை விசேட வழிகாட்டல் வகுப்புகள்
ஆரம்பம் - ஞாயிறு 5மணி
வகுப்புகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை நடைபெறும்.
சுப்றா
சித்தன்கேணி


---

## துணுக்காயில் ஷெல் வீச்சு

வவுனியா, ஜூன் 29

முல்லைத்தீவு மேற்கில் துணுக்காய் ஒட்டன்குளம் பகுதி மீது நேற்று நண்பகல் 12.45 மணியளவில் படையினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

ஜனகபுரம் படை முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் 6 வீடுகள் சேதமடைந்தன எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## பிள்ளையான் - விமல் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 29

ஜே.வி.பியில் இருந்து பிரிந்து சென்று தனிகட்சி ஆரம்பித்துள்ள தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிதள் கட்சியின் தலைவருமான பிள்ளையனை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள தேசிய விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் இருகட்சிகளும் இணைந்து கூட்டமைப்பு அமைப்பது குறித்துப் பேச்சு நடத்தியதாகத் தெரிய வந்தது. (அ-01)

## களுவன் கேணியில் இளஞர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஜூன் 29

மட்டக்களப்பு களுவன் கேணியில் நேற்று அதிகாலை இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேஇடத்தைச் சேர்ந்த தங்கவேல் தங்கேஸ்வரன் (வயது 24) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரை நிற்குமாறு படையினர் மறித்தபோது அவர் நிற்காது சென்ற வேளை படையினரால் சுடப்பட்டார் என்று முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

## பரப்புக்கடந்தான் படை வசமாம்

கொழும்பு,ஜூன் 29

மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரை குளத்துக்கு வடக்கே உள்ள பரப்புக்கடந்தான் கிராமத்தை நேற்றுப்படையினர் கைப்பற்றி உள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது .

விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற கடும் சண்டையின் பின்னர் இந்தப்பிரதேசம் மீட்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மன்னார் , வவுனியா, வெலிஓயாக் கள முனைக ளில் நேற்று முன்தினம் படையினர் மேற் கொண்ட தாக்குதலில் விடுத லைப்புலி உறுப்பினர்கள் 44 பேரும் படைத்தரப்பில் 3 படையினரும் கொல்லப்பட்டனர் என்றும் ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்தது.(அ-1)

### தொலைபேசி இலக்கம்

நேற்றய (28.06.2008) உதயன் 12ஆம் பக்கத்தில் வெளியான சுப்பிரமணியம் சிவாக்கியம் என்பவரின் மரண அறிவித்தல் விளம்பரத்தில் தொழில்நுட்பத் தவறுதலால் தொலைபேசி இலக்கம் அழிந்துவிட்டது. அந்த இலக்கத்தை 021 222 5574 என்று வாசிக்கவும்.


eTouch COMPUTER SYSTEM
புதிய பிரிவுகள் ஆரம்பம்
சனி, ஞாயிறு தினங்களில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கணனிப் பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளது

| | | |
|---|---|---|
| Diploma in Office Automation | 03 Months | 2500 |
| Diploma in Desktop Publishing | 04 Months | 2500 |
| Diploma in Auto CAD Programming | 04 Months | 3000 |
| Diploma in Hardware Engineering | 04 Months | 3000 |
| Diploma in Multimedia | 04 Months | 3000 |
| Diploma in Visual Basic | 03 Months | 2500 |
| Diploma in Kids Programming | 12 Months | 4500 |
| Certificate in Internet & E-Mail | 10 Hours | 1500 |

Batch 1 02-07-2008
Batch 2 04-07-2008
Batch 3 06-07-2008
05-07-2008 ற்கு முன்பாக பதிவுகளை மேற்கொள்ளவும்
ONLINE Computer Education @ Affordable Price with Standard Course Materials
2nd Lane, உடுவில் வீதி, மருதனார்மடம். 021 4590222


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org